
கல்கி

KALKI 26.1.97 ரூ.3.00



காதலா, எனக்கா...!

- வெளிப்படையாகப் பேசுகிறார் ரஞ்சிதா!



வெங்க்கி- மங்க்கி!

'வென்ட்ரிலோகிஸம்' -

ஒருவரின் குரலை அப்படியே இமிடேட் செய்யும் மிமிக்ரி அல்ல இந்தக் கலை.

இன்னொருவருக்காக குரலை மாற்றிக் குரல் கொடுப்பது. அப்படி இன்னொருவருக்காகக் குரல் கொடுக்கும்போது, தன் உதடுகளை அசைக்காமல் ஏதோ மற்றவர்தான் பேசுகிறார் என்ற பிரமையை ஏற்படுத்துவது முக்கியம். இப்படி இரண்டு பேரும் ஒருவர் குரலிலேயே சகஜமாகவும், சரளமாகவும் உரையாடும் கலை இது.

'அவர்கள்' படத்தில் கமல் ஹாசன் ஒரு பொம்மையுடன் பேசுவாரே, அதுதான் வென்ட்ரிலோகிஸம்' என்றால் சட்டென்று புரிந்துவிடும்.

இந்தக் கலையில் இன்று தமிழகத்தில் மிக வேகமாகப் பாபுலராகி வரும் கலைஞர் வெங்க்கி (வெங்கடேஷ்). இளைஞர்.

"எனக்குச் சின்ன வயதிலிருந்தே மிமிக்ரி செய்வது சுலபமாக இருந்தது. வகுப்பில் செய்து கொண்டிருப்பேன். படிப்பதுதான் கஷ்டமாக இருந்தது. ஆறாவது வகுப்பில் மூன்று வருடம் பெயில். வாழ்க்கையே வெறுத்து தற்கொலை செய்து கொள் ளலாமா என்கிற அளவு விரக்தி அடைந்தேன். என் தமிழாசிரியர்தான் என்னைத் தேற்றி 'அடேய்! வெறும் புத்தகப் படிப்பல்லடா வாழ்க்கை. உன் மிமிக்ரிகூட உன்னை வாழ வைக்கலாம். கவலைப்படாதே' என்று உற்சாகமூட்டினார்.

அந்தத் தமிழாசிரியரின் பெயர் : இளந்தேவன். ஆம், இன்றைய கவிஞர் இளந்தேவன்தான்.

"பின்னர் ஒரு மாதிரியாகப் படிக்க ஆரம்பித்தேன். சென்னை ஓவியக் கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷனில் பட்டம் பெற்றேன். கூடவே மிமிக்ரி நோயும் என்னைத் தொற்றிக் கொண்டே வந்தது."

அபஸ்வரம் ராம்ஜி இசைக்குழுவில் மிமிக்ரி கலைஞராகச் சேர்ந்த வெங்க்கி மேடையேறினால் சில நிமிடங்களிலேயே ரசிகர்களைத் தன் வயப் படுத்துவதில் வல்லவர்.

இவரது திறமையைக் கண்ட இசையமைப்பாளர் தேவா தமது நிகழ்ச்சிகளின் இடையிலேயே வெங்க்கியை அழைக்கிறார்.

மிமிக்ரி சரி. வென்ட்ரிலோகிஸம்?

"புகழ் பெற்ற எம்.எம். ராய் அவர்களிடம் நான் வென்ட்ரிலோகிஸம் பயின்றேன். இரண்டு வருடங்கள். எனக்கு அது சுலபமாக வந்தது என்றுதான் சொல்ல வேண்டும்."

93ல் அமெரிக்கா - கனடா சுற்றுப் பயணம். ஒரு கலைக்குழுவோடு போன வெங்கி, கனடாவில் நான்கு ஷோ, டெட்ராயிட்டில் ஒன்று என்று அசத்தி விட்டார்.

"அங்கே கொலோரடாவில் வென்ட்ரிலோகிஸம் கலைக்கென்றே ஒரு பயிற்சிப் பள்ளி இருக்கிறது. இரண்டாயிரம் மாணவர்கள். வியப்பாக இருந்தது. நான் அதிலேயும் உறுப்பினர் ஆனேன். பல விஷயங்களைக் கற்றேன்."

மிமிக்ரியுடன் 'வென்ட்ரி'யையும் சேர்த்து இவர் மேடையேற்றியது 94ம் ஆண்டில்.

எல்லோரும்தான் பொம்மையுடன் பேசுகிறார்கள். நாம் வித்தியாசமாகச் செய்வோமே என்று ஒரு குரங்கு பொம்மையைப் பிடித்தேன். வெங்கி - மங்கி என்று என் நிகழ்ச்சிக்கு எதுகை மோனையுடன் தலைப்பிடவும் வசதியாகப் போயிற்று.

கமல், பாரதிராஜா போன்ற பலரும் இவரை ரசித்திருக்கிறார்கள். மேடையில் இவர் தன் மார்பில் படர்ந்து கழுத்தைக் கட்டிக் கொண்டிருக்கும் குரங்கோடு சேஷ்டை பண்ணுவதிலும் உரையாடுவதிலும், சிரிப்பதிலும் காட்டும் இயல்புதான் இவரது சிறப்பம்சம்.

சிங்கப்பூரில் தாம் நடத்திய மெகா ஷோவுக்கு வெங்கியையும் அழைத்துப் போனார் கமல்.

எதையும் நகைச்சுவைக் கண்ணோடு பார்ப்பவர் வெங்கி. காதில் கடுக்கண் போட்டிருக்கிறார். என்ன ஸ்டைலா?

ஏதாவது பண்ணிக்கணுமில்லே. என்னோட மனைவி (கலைச்செல்வி - டெரகோட்டா கலைஞர் ஒரு வருடம் முன்புதான் கல்யாணம் - காதல் திருமணம் அல்ல) பாப் வெட்டிக்கட்டுமான்னு கேட்டா. 'மொட்டை வேணுமின்னாகூட அடிச்சிக்கோ. ஆட்சேபணை இல்லைன்னு சொன்னேன். 'நான் கடுக்கண் போட்டுக்கவா'ன்னு கேட்டேன். ஓ.கேன்னுட்டா..." என்று சிரிக்கிறார்.

"வென்ட்ரிலோகிஸம் ரொம்ப கஷ்டமான கலை என்று சொல்லிக் கொண்டிருந்தான். நான் கற்றுக் கொண்டபின்புதான் அது சுலபம் என்று தெரிந்தது. அமெரிக்காவில் இருப்பது மாதிரி ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க ஆசை. விரைவில் செய்வேன். இப்போதே சிலர் என்னிடம் கற்றுக் கொள்கிறார்கள்.

இன்று வெங்கி ஏக பிஸி. மாலை வேலைகளில் குரங்கோடு மேடைகளில். மற்ற சமயங்களில் ஒரு கிராஃபிக் ஆர்ட்டிஸ்ட், நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜியில் கெஸ்ட் லக்சரர், விளம்பர டிஸைன் ஆலோசகர்... இப்படி பல்வேறு முகங்கள். புதுமையான கலை எது என்றாலும் முயன்று பார்க்கிறார்.

அடுத்த முயற்சி?

"அமெரிக்காவிலிருந்து ஒரு ஸ்பெஷல் போர்டு வாங்கி வந்திருக்கிறேன். அதில் ஒரு உருவத்தை நான் ரசிகர்கள் முன்னிலையிலேயே வரைவேன். பின்னர் அந்தச் சித்திரத்துடன் பேசுவேன். அதுவும் பேசும். என் குரல்தான் இரண்டும்!"

"அது எப்படி? நீங்கள் வரைந்த சித்திரத்தின் உதடு அசையுமா?"

"அசையும். அதுதான் அந்தப் போர்டின் சிறப்பு. நிகழ்ச்சியின் பெயர்: 'சித்திரம் பேசுதடி!'" என்று சொல்லும் வெங்கி ரசிகர்களின் விருப்பத்துக்கிணங்க தன்னை மாற்றிக் கொள்ளவே விரும்புகிறார்.

"இப்போதைக்கு என் குரங்கு பாபுலர். நாளை 'போதும் வெங்கி போரடிக்குது!' என்று ரசிகர்கள் சொல்லக்கூடும். அதற்காகவே இப்போதே ஒரு காக்காய் பொம்மையை ரெடி செய்திருக்கேன். 'வெங்கி - காக்கி!'"

இந்தக் கலைஞர் குரல் பயிற்சி செய்வது எப்போது தெரியுமா?

"ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருக்கும் போது, குரலை மாற்றி மாற்றிக் கத்திக் கொண்டே போவேன். ட்ராஃபிக் இரைச்சலில் என் இரைச்சல் கேட்காது. ஹெல்மெட் போட்டுக் கொண்டால் இன்னும் வசதி!"

சந்திப்பு : **ராணிமைந்தன்**



அரசியல் தலைவர் பார்க்காத இடம்!

ஓர் அரசியல் கட்சித் தலைவர் போகாத நாடில்லை. பார்க்காத ஊரில்லை. அவர் ஓர் நாள் தம் நண்பரிடம் சொன்னார்.

"அமெரிக்காவில் நிக்சனைப் பார்த்தேன். ரஷ்யாவிலே கோசிஜினைப் பார்த்தேன். எகிப்திலே நாசரைப் பார்த்தேன். நான் பார்க்காத இடமுமில்லை. ஆளுமில்லை."


உடன் நண்பர் சொன்னார், "இவ்வளவு தூரம் போய் எல்லோரையும் பார்த்தீர்களே, பக்கத்திலுள்ள ஒரு இடத்தைப் பார்க்கவில்லையே!"

"எது அது?" கோபமாகக் கேட்டார் தலைவர்.

"உங்கள் முதுகு" என்றார் நண்பர்! தலைவர் தலை குனிந்தார்.

"கண்ணதாசன் கதைகள்" - நூலிலிருந்து: வி.சிவா

TV மர்சனம்:



மணிவண்ணனின் மன்னிப்பும் டி.ராஜேந்தரின் ஆவேசமும்!

●● 'நமது சினிமா, பெண்களைப் பெருமைப் படுத்தியதா? சிறுமைப்படுத்தியதா?' - லியோனி தலைமையில் நடந்தது பட்டிமன்றம் (விஜய் டி.வி.). எந்தெந்த சினிமாவில் எப்படி யெப்படியெல்லாம் பெண்கள் சிறுமைப்படுத் தப்பட்டிருக்கிறார்கள் என்று ஒரு நீண்ட பட்டியலே போட்டு விளாசித் தள்ளினார் லியோனி. அவரது விளாசலில் பாலசந்தரே தப்பிக்க முடியாமல் போனபோது, பாக்யராஜ் போன்றவர்கள் எம்மாத்திரம்? 'சிறுமைப் படுத்துகிறது' அணியில் பேசிய ஒருவர் மணிரத்னத்தின் பம்பாயையும் விட்டு வைக்க வில்லை.

பர்தாவைக் கிழித்துக் கொண்டு
ஒரு பெண் புறப்பட்டபோது
இதோ ஒரு புதுமைப்பெண்
புறப்பட்டு விட்டாள் என்று
என் எண்ணத்தில்
பட்டாம்பூச்சி சிறகடித்தது.
ஆனால் -
அந்த டைரக்டர்
அவள் தனங்களை உண்டியலாக்கி
ரசிகர்களிடம்
காசு வசூலித்தபோது
என் பட்டாம்பூச்சி கருகிப்போனது

- என்று யாருடைய கவிதையையோ மேற்கோள் காட்டி விளாசினார் பாருங்கள், அசத்தி விட்டார்கள்.

●● 'கம்பனுக்கு நிகரான வரிகளைப் போட்டுப் பாட்டெழுதிய நீங்கள் 'டேய் டேய் டிகிரிடோய்' என்றெல்லாம் பாட்டெழுது கிறீர்களே?' என்று ராஜ் டிவி நேயர் ஒருவர் டி.ராஜேந்திரை ஒரு கேள்வி கேட்டு வைக்க, உணர்ச்சிப்பிழம்பாகி விட்டார் டி.ஆர். தாம் எழுதிய பல பாடல்களையெல்லாம் சொல்லிக் காட்டி, இப்படியெல்லாம் எழுதிய எனக்கு என்ன பட்டம் கொடுத்தீர்கள்? ஆய் ஊய் என்று ஏகப்பட்ட அங்கலாய்ப்பு. பாவம், அந்த ரசிகர் நொந்து போயிருப்பார்! போனால் போகிறது என்று யாராவது டி. ராஜேந்தருக்கு ஏதாவதொரு பட்டத்தைத்தான் கொடுத்து விடுங்களேன், ப்ளீஸ்!

●● 'உங்களது நூறாவது நாள் படம் பார்த்துத் தான் ஒன்பது கொலைகளைச் செய்ததாக ஜெயப்பிரகாஷ் கூறினானே?' என்று ஒரு நேயர் சன் டி.வி.யில் மணிவண்ணனைக் கேட்டார். 'ஏதோ ஒரு வகையில் என் படமும் ஜெயபிரகாஷைப் பாதித்திருக்கிறது. கொலை மிகக் கொடுமையான விஷயம். அதனால் நான் ஜனங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள் கிறேன்!' என்றார் மணிவண்ணன். 'சமூகத்தில் நடக்காததையா நாங்கள் சினிமாவில் காட்டி விட்டோம்?' என்றெல்லாம் சப்பைக் கட்டுக்கட்டுகிற சினிமாக்காரர்கள் மத்தியில், தவறை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்பது எவ்வளவு பெரிய விஷயம்! ரொம்ப உயரத் துக்குச் சென்று விட்டார் மணிவண்ணன்.

●● நமீபிய பழங்குடிகள் பற்றிய ஒரு செய்திப் படம் - டிஸ்கவரி சானலில். உலக நாகரிகத் தின் எந்த நிழலுமே படாத மக்கள். உணவுக்காக வேட்டையாடும் மிருகத்தைக் கூட சமைத்துச் சாப்பிடாமல் அப்படியே நெருப்பிலிட்டுச் சுட்டுச் சாப்பிடுகிறார்கள். இருப்பினும் அவர்களிடம் சந்தோஷக் குறைவு இருப்பதாகத் தெரியவில்லை. இரவு நேரத்தில் நெருப்பை மூட்டி விட்டு அதைச் சுற்றி அவர்கள் பாஷையில் ஏதோ பாடி ஆடுகிற போது, எல்லாவற்றையும் மறந்து அந்த ஆடலிலும் பாடலிலும் அப்படியே ஒன்றிப் போகிறார்களே... அவர்கள்தான் வாழ்க்கையை நிஜமாகவே வாழ்கிறார்களோ என்று தோன்றுகிறது. அந்தப் பழங்குடிப் பெண் களுக்கு மேலாடை என்கிற விஷயமெல்லாம் கிடையாது. என்றாலும் அந்தப் பெண்களைக் காட்டுகிறபோதெல்லாம் அவர்கள் புகையும் நெருப்புக்கு அந்தப் பக்கம் இருக்கிற நேரத்திலேயே காட்டி, தாங்களும் அழகானவர் களே தவிர, ஆபாசமானவர்கள் அல்ல என்பதை நிரூபித்து விட்டார்கள் டிஸ்கவரி காரர்கள்!

- 'டிஷ்'



சிகாகோ நகரில் விவேகானந்தர் பேசிய பேச்சு உலகப் புகழ் பெற்றது. அந்த உரையை நிகழ்த்திவிட்டு விவேகானந்தர் இந்தியா திரும்பி நூறாண்டுகள் முடிந்துவிட்டன. விவேகானந்தரின் வாழ்க்கையும் அவரது பேச்சுக்களும் நம்மை எந்த அளவுக்கு பாதித்திருக்கின்றன? நிறையவே என்பதற்கு ஒரு சிறு உதாரணம்தான் இது.

'திறமையான நூறு இளைஞர்களை என்னிடம் தாருங்கள். ஒரு வலிமையான இந்தியாவை உருவாக்கிக் காட்டுகிறேன்!' என்று முழங்கினாரே விவேகானந்தர்? அவர்களில் ஒருவரை, சென்னை மெரீனாவுக்கு எதிரே, அயோத்தியாகுப்பம் வீடு ஒன்றில் சந்தித்தோம்.

பெயர் : மதுமணி

தொழில் : ஆட்டோ ஓட்டுநர்

"பள்ளிக்கூடத்தில் படிக்கிற போதே அவருடைய கம்பீரமான, கை கட்டிய உருவம் என்னை வெகுவாக ஈர்த்ததும், அந்த அழகான முகம், அதில் மறைந்து கிடக்கும் புன்னகை, அந்த சாந்தம், அந்த ஒளி வீசும் கண்கள் - எல்லாமே என்னை விவேகானந்தர் என்ற அற்புத மனிதர் மீது ஈடுபாடும் ஆசையும் கொள்ள வைத்தன.

அந்த நூறு பேரில் ஓர் இளைஞர்!

"மக்களுடைய நல்வாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் என்றே சிந்தித்து, பேசி, வாழ்ந்த அந்தத் தனிமனிதர் மீது எனக்கு எப்படியோ ஒரு பிரியம் உண்டாயிற்று" என்று சொல்லி நிறுத்திய மதுமணி, "They alone live - who live for others; the rest are more dead than alive" என்று விவேகானந்தரை மேற்கோள் காட்டியபோது, இன்ப அதிர்ச்சியே ஏற்பட்டது!

அந்த இளம் துறவியின் தாக்கம் மதுமணியிடம் அப்பட்டமாக இருப்பதை, அவர் வீட்டு அறையின் சூழலே உணர்த்தியது. சுவரில் விவேகானந்தர் படம், காலண்டரில் விவேகானந்தர் படம், மேசையில் விவேகானந்தர் படம்; மேசை மீது விவேகானந்தர் புத்தகங்கள் மட்டுமல்லாது, ராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதா தேவியாரின் 'சிந்தனைத் துளிகள்' முதலிய நூல்கள், இந்த முப்பது வயது இளைஞரின் உள்முகத்தைக்கூட வெளிச்சம் போட்டுக் காட்டின.

"இந்த ஆட்டோ ரிக்ஷா ஓட்டுகிற தொழில்ல இருக்கிறவங்க எல்லாருமே நல்லவங்கன்னு சொல்ல முடியாது. நல்லவங்களும் இருப்பாங்க. கெட்டவங்களும் இருப்பாங்க. எப்படி நல்ல பயிருக்குப் பக்கத்திலேயே களையும் முளைக்குதோ, அது



மாதிரிதான் இங்கயும். தெரிஞ்சு களை எடுத்தால் இந்தத் தொழில்லயும் நல்லவங்கள்தான் இருக்க முடியும்கிற நம்பிக்கை எனக்கு இருந்தது. அதனாலதான், நான் யாரை பெரிய மனுஷரா ஆராதிச்சு வந்தேனோ அந்த விவேகானந்தர் பெயரிலேயே ஆட்டோ ஓட்டுநர் சங்கம் ஆரம்பிச்சேன். 91இல் ஆரம்பிச்சு 93-ல் பதிவு பண்ணினேன்!" என்று சொல்லி வந்த மதுமணி, அடுத்த வாக்கியம் சொன்னபோது மறுபடி ஆச்சர்யம்.

"எனக்குத் தெரிஞ்சு சமூக விரோதியா இருக்கிற எந்த ஆட்டோ டிரைவரோட வண்டிலயாவது பயணிகள் ஏறினா, 'இந்த மாதிரி ஆட்டோவுல ஏறாதீங்க சார்!'னு சொல்லி அவங்களை இறக்கி வேற வண்டி

யில ஏத்தி விட்டுடுவோம்!"

"அந்த ஆட்டோ டிரைவருக்கு ஆத்திரம், கோபம் வராதா?"

"அதான் இல்லே! அவங்களும் மாறிடறாங்கங்கறதுதான் உண்மை! பயணிகளுக்குச் சமூக விரோதிகளோட தொல்லை இருக்கக் கூடாதுங்கறதுலே, நான் உறுதியா இருக்கேன். அமெரிக்காவுல, சிகாகோவில விவேகானந்தர் பேச்சை ஆரம்பிக்கறபோது, 'டியர் பிரதர்ஸ் அண்ட சிஸ்டர்ஸ்'னுதானே ஆரம்பிச்சார்? அவரைப் பின்பற்றனும்னு எண்ணம் இருக்கற என்னைப் போல இளைஞர்களுக்கு எல்லாமே பிரதர்ஸ் அண்ட் சிஸ்டர்ஸ்தான் இல்லையா? அவர் மாதிரி ஒரு தலைவரை ஏத்துக்கறதுக்குக் கொடுத்து வச்சிருக்கணுமே சார்!"

விவேகானந்தர் மாதிரியே சமுகசேவை செய்கிற நோக்கத்தோடுதான் முதலில் ஆட்டோ ஸ்டாண்ட் ஆரம்பித்தார்கள். "நிறைய இடங்களில் விளம்பரமில்லாம ரத்ததானம் செஞ்சிருக்கோம். இப்பக்கூட அவரோட நினைவு நாளான இந்த மாதம் 26 ஆம் தேதி, ராமகிருஷ்ண மடத்துலயே போய் ரத்ததானம் செய்யணும்னு நினைச்சுட்டிருக்கோம்!"


தவறு செய்யும் சங்க உறுப்பினர்களைக் கூட்டம் நடத்தி, வெளிப்படையாகவே கண்டித்து.

• மதுமணி

• சங்க உறுப்பினர்களுடன்...







வளம் தரும் தாரகம்

• பசிக்கும் முன்பே
புசிக்கத் தெரிந்த உனக்கு
தோல்விக்கு முன்பாக,
வெற்றிக்காக
உழைக்கத் தெரியவில்லையே!

• கன்னியரின்
கடைக்கண் பார்வை
உன்மீது விழும் மட்டும்
அவர் பின்
திரியும் உனக்கு,
வெற்றியின்
'அருட்பார்வை'
எளிதில் கிட்டிடுமா என்ன?

• சூர்யோதயங்கள்
உனக்குத் தெரிந்தும்,
அஸ்தமனங்களைக்
கண்டு
கலங்குவதில்
அர்த்தமேயில்லை

• நுனியிலேயே
இனித்திட்டால்
அது கரும்புமல்ல,
நினைத்த மாத்திரத்தில்
வருவது
வெற்றியுமல்ல.

• 'முயற்சி'யெனும்
தொடர் மந்திரம்
உச்சரிப்பதால்
கிடைக்கும் வரமே
'வெற்றி'யாகும்!

— ந.ச.நடராசன்

மினிட்ஸ் புத்தகத்தில் எழுதி, மன்னிப்பும் கேட்க வைத்து விடுகிறார்கள்! (கூட்டத்தின் குறிப்புகள் திருத்தமான, பிழையில்லாத தமிழில் எழுதப்பட்டிருப்பது இன்னும் ஓர் ஆச்சரியம்!)

"காற்றை சுவாசிக்கும் போது, நல்ல காற்றையும் கெட்ட காற்றையும் கலந்தே சுவாசிக்கிறோம். ஆனால் கெட்ட காற்றை வெளியேற்றி, நல்ல காற்றை மட்டும் உடலுக்குச் செலுத்துகிறோம். அதுபோல நல்லதை எடுத்துக் கொண்டு கெட்டதைத் தள்ளி விடுவோம் என்று ராமகிருஷ்ண பரமஹம்சரே சொல்லியிருக்கிறாரே, அது எங்களுக்கு வேத வாக்கு!" என்றார் மதுமணி.

எம்.இளங்கோ, வி.பாலு, கிருபாகர், பரசுராமன் என்று ஓர் இளைஞர் பட்டாளமே மதுமணிக்கு உதவியாக இருக்கிறது.

மூத்த வழக்கறிஞர் ஆர். காந்தி, ஸ்டான்லி மருத்துவமனை டாக்டர் எஸ். சுப்பிரமணியம், என்.கே.டி. முத்து, வயதான டிரைவர்களுக்குக் கண் பார்வைக் கோளாறு என்றால் இலவசமாகவே மருத்துவம் பார்க்கும் செல்வி சாரதா ராவ் என்று இவர்களுக்கு வழிகாட்டும் பெரிய மனிதர்களை நன்றியுடன் பட்டியல் போடுகிறார் மதுமணி.

"எல்லாருக்கும் நான் வேண்டியவனுங்க. அவங்க பிரச்சனைகள் எதுவானாலும் நான் தீர்த்து வைப்பேன்!" என்று நம்மிடம் மதுமணி சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, தள்ளு வண்டியில் வாழைப் பழ வியாபாரம் செய்யும் பெண்மணி ஒருவர், "ஐயா, எப்ப வரே? என்ன வழி சொல்லப் போற?" என்று உரக்கக் கேட்டார்.

"இதா வரேன், தாயி" என்ற மதுமணி, "அந்த முதாட்டி வீட்டில் ஒரு பிரச்சனை. அதற்காகத்தான் கூப்பிடுகிறார்..." என்கிறார்.

சபரி மலைக்குச் சென்று திரும்பும் ஐயப்ப பக்தர்கள், சாதாரணமாக வழியில் உள்ள எல்லா கோயில்களுக்கும் சென்று வீடு திரும்புவார்கள் இல்லையா? ஆனால் விவேகானந்தா ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தைச் சார்ந்த ஐம்பது சொச்சம் பேரும், கட்டாயம் கன்னியாகுமரியில் இருக்கிற விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்குப் போய்த் தரிசனம் செய்யாமல் திரும்புவதில்லை!

— சாருகேசி,
படங்கள் : ஸ்ரீஹரி

ஸ்ரீ ராமஜெயம் **Ph: 8542144**

வடமாநில புனித யாத்திரை

2.5.97: இது 16 நாட்கள் கொண்டது. பூரி ஜெகன்னாத்-கோனாரக்–புவனேஸ்வர்- கயா-புத்தகயா-நேபாளம்-போக்ரா. அலகாபாத்–அயோத்தியா–காசி. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 3600.

2.5.97: இது 30 நாட்கள் கொண்டது. பூரி ஜெகன்னாத்-கோனாரக்-புவனேஸ்வர்-கயா-புத்தகயா-நேபாளம்-போக்ரா-அலகாபாத்–அயோத்தியா-காசி-நைமிசாரண்யம்-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-பத்ரிநாத்–கேதார்நாத்-நியூடெல்லி-ஆக்ரா-மதுராபிருந்தாவன். நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 6800.

10.5.97: இது 21 நாட்கள் கொண்டது அலகாபாத் (அயோத்தியா) கயா-புத்தகயா-காசி-ஹரித்துவார்-ரிஷிகேஷம்-பத்ரிநாத்-கேதார்நாத்-நியூடெல்லி-ஆக்ரா-மதுராபிருந்தாவன். நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 4600.

2.7.97: இது 31 நாட்கள் கொண்டது. பூரி ஜெகன்னாத்-கோனாரக்-புவனேஸ்வர்-கயா-புத்தகயா-அலகாபாத்-காசி-ஹரித்துவார்-ரிஷிகேஷம்-பத்ரிநாத்-கேதார்நாத்-நியூடெல்லி-ஆக்ரா-மதுரா-சிம்லா-குளு-மணலி-வைஷ்ணவிதேவி-குருக்ஷேத்திரம்-ஜெய்ப்பூர்-நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் 7200.

ஆங்காங்கு தங்கும் அறைகள், ஊர் சுற்றிப் பார்க்க பஸ் கட்டணம், தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், கைதேர்ந்த தென்னிந்திய பிராமணர்களைக் கொண்டு காலை காபி-டிபன், மதியம் இரவு நல்ல உணவு பரிமாறுவதுடன் இங்கு குறிப்பிட்ட அனைத்து செலவுகளும் எங்களைச் சேர்ந்தவை.

வடமாநில யாத்திரையில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பெற்ற அனுபவத்துடன் மிகசிறப்பான முறையில் நடத்தி வருகின்றோம்.

L.T.C. வசதியில் வருபவர்களும் மற்றவர்களும் மிகவும் விரைவில் தெரியப்படுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு:

ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

நெ.4. வெங்கடாசல செட்டித் தெரு, (Near Kasturibai Hospital) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. போன்: 8542144

வாஸ்து சாஸ்திரம்

இடிக்க வேண்டாம், பெரிய மாறுதல்கள் செய்ய வேண்டாம். இருப்பவை இருந்தபடியே இருக்கச் செய்து சிறிய மாறுதல்களுடன் சிறந்த வாஸ்து பரிகாரங்கள் செய்து கொள்வதால் வாஸ்துவிடம் இருந்து வளமான வாழ்வை பெறலாம்.



லயன் யுவராஜ்
பரம்பரை வாஸ்து சாஸ்திரம்
அலுவலகம் :
140ஏ, இராயப்பேட்டை ஹைரோடு,
(நெ. 22 சாந்தி விஹார் காம்ப்ளக்ஸ்),
ஜின்ஜா பிளாசா, லஸ் கார்னர்,
மைலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 8548021, 2348594.

குறிப்பு :

வெளியூர் அன்பர்கள் தங்களுடைய வீட்டின் வரைபடமும் மற்றும் திசைகளை குறிப்பிட்டு ரூ. 500க்கான டி.டி.யோ/எம்.ஓ. அனுப்பி வைத்தால் நாங்கள் தங்கள் வீட்டில் உள்ள குறைபாடுகளையும், தவிர்க்க வேண்டிய வழிமுறைகளையும் எழுதி கூரியர் சர்வீஸில் அனுப்புவோம்.

ஓர் ஓய்வு நாளில், சம்பிரதாயமான கேள்வி - பதில்களாக இல்லாமல் நம்மோடு நீண்ட நேரம் பேசினார், ரஞ்சிதா. அதிலிருந்து....

"உங்களது முதல் தமிழ்ப் படமான நாடோடித் தென்றலில் ஜாக்கெட் இல்லாமல் நடிக்க வேண்டிய கேரக்டராக அமைந்து விட்டது. அது ஒன்றும் ஆபாசமாக இல்லை என்றாலும் முதல் படத்திலேயே அப்படி நடிக்க வேண்டியிருந்தபோது நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்?"

"முதலில் அப்படி நடிக்க யோசித்தேன் என்பது உண்மைதான். ஆனாலும் ஒரு பெரிய டைரக்டரான பாரதிராஜா அப்படியொரு கேரக்டரை உருவாக்கியிருப்பதால், அதுவொன்றும் ஆபாசமாக இருக்காது என்கிற முடிவுக்கு வந்தேன். என் முடிவு சரியாகவே அமைந்து விட்டது."

"பிறகு தொடர்ந்து அர்ஜுன் படங்களில் நடித்தீர்கள்..."

"இல்லை. அர்ஜுனோடு இரண்டே இரண்டு படங்களில்தான் நடித்தேன். ஜெய் ஹிந்தில் கொஞ்சம் கவர்ச்சியாக நடித்தேன். அவ்வளவுதான்."

"சினிமா மக்களை பாதிக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?"

"நிச்சயமாக. சென்ற பொதுத் தேர்தலில், ரேவதிக்காக நான் பிரசாரம் செய்யப் போனபோது, மக்களின் ஒவ்வொரு செயலிலும் சினிமாவின் பாதிப்பு இருப்பதை நேரடியாகவே பார்த்தேன்."

"இதுமாதிரியான ஒரு சூழலில் கவர்ச்சியாக நடிப்பது, வன்முறையைத் தூண்டுகிற படங்கள் போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் இல்லையா?"

"உண்மைதான்."

"இதற்கு உங்களைப் போன்ற சினிமாக்காரர்கள் பொறுப்பேற்க வேண்டாமா?"

"சினிமா என்பது வாழ்க்கையைப் பிரதிபலிப்பதல்ல; மிகைப்படுத்துவது. சினிமா என்பது நிஜமல்ல; மிகை. இதை உணர வேண்டும். சினிமா வேறு, வாழ்க்கை வேறு என்று பிரித்துப் பார்க்கிற பக்குவம் வந்து விட்டால் சினிமாவால் மக்களைக் கெடுக்க முடியாது."

"இந்தப் பக்குவம் எப்படி வரும்?"

"ஒரே வழி கல்வியறிவுதான்."

"நம் நாட்டில் கல்வியறிவு இல்லாதவர்



காதலா, எனக்கா...!

களின் எண்ணிக்கைதான் அதிகம்..."

"அது அரசாங்கத்தின் குற்றம். ஆளுகிற அர சியல்வாதிகளின் தவறு. இந்த நிலையில் சினிமாக்காரர்களைக் குற்றம்சாட்டுவதென்பது பிரச்னையைத் திசைதிருப்புகிற ஒரு விஷயம்தான்."

"கலபமாகத் தப்பித்துக் கொள்கிறீர்கள்..."

"இல்லை. பிரச்னையின் ஆணிவேரைச் சொன்னேன். இப்படிச் சொல்வதாலேயே எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு விட்டேன் என்று அர்த்தமில்லை. இரட்டை அர்த்த வசனங்களை நான் பேச மறுக்கிறேன். சமீபத்தில் கூட அப்படி எதிர்த்தேன். அது நான் பேசும் வசனமல்ல. இன்னொருவர் என்னிடம் பேசுவது. ஆனால் என் எதிர்ப்பு எடுபடவில்லை. வேறுவழியின்றி அங்கே நான் காம்ப்ரமைஸ் செய்து கொள்ள வேண்டியதாயிற்று."

"ஆக, உங்கள் தனித்துவத்தை விட்டுக் கொடுத்து விட்டீர்கள்..."

"வேறு வழி? நமது தனித்துவத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் காப்பாற்றிக் கொள்ள முடியாது. சூழ்நிலைகளுக்குத் தகுந்த மாதிரிதான் பல சமயங்களில் நாம் விட்டுக் கொடுத்து வாழ வேண்டியிருக்கிறது."

"பெரிய நடிகையாக வேண்டும் என்கிற லட்சியமெல்லாம் கிடையாதா?"

"ஆசை இருக்கிறது. ஆனாலும் அதை லட்சியம் என்கிற அளவுக்கு நான் வளர்த்துக் கொள்ளவில்லை."

"ஏன்?"

"தனிப்பட்ட லட்சியங்களை வைத்துக் கொள்கிறபோது, ஆரோக்கியமான போட்டியையும் மீறி பொறாமைதான் வளருகிறது. அதாவது நாம் பெரிய நடிகையாக வேண்டும் என்பதற்காக நமது படங்கள் வெற்றி பெற வேண்டும் என்று மாத்திரம் கருதத் தோன்றாது; மற்றவர்கள் நடிக்கிற படங்கள் தோல்வியடைய வேண்டும் என்றும் எண்ணத் தோன்றும். இப்படிப்பட்ட பொறாமையுணர்வுகளெல்லாம் எதற்கு? அதனால்தான் நான் லட்சியமெதையும் வைத்துக் கொள்ளவில்லை."

"ரேவதிக்காக தேர்தல் பிரசாரமெல்லாம் செய்தீர்களே, உங்களுக்கும் அரசியலில் ஈடுபடும் எண்ணமுண்டா?"

"ரேவதி என் தோழி என்பதாலும் நல்லது நடக்க வேண்டும் என்கிற ஆர்வத்தாலும் சமூகத்தின் மேலுள்ள அக்கறையாலும்தான் நான் தேர்தல் பிரசாரத்துக்குச் சென்றேனே



தவிர, அரசியலில் நானே ஈடுபட வேண்டும் என்கிற ஆசையினால் அல்ல."

"சமூகத்தின் மேல் அக்கறையுள்ள ஒரு பிரஜை என்கிற முறையில் நல்லது நடக்கவேண்டும் என்பதற்காகத் தீவிரமாக ஏதாவது செய்ய வேண்டாமா?"

"நானும் இதுபற்றிப் பலமுறை யோசித்திருக்கிறேன். லஞ்சம் - ஊழல் என்பதெல்லாம் எல்லா மட்டத்திலும்

பரவியிருக்கிறது. அவரவரும் அவரவர் அளவில் எல்லாத் தவறுகளையும் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். வேண்டுமானால் நான் லஞ்சம் வாங்காமல் இருக்கலாம். ஆனால் கொடுக்காமல் இருக்க முடியுமா? அப்படியிருந்தால் எனது அத்யாவசியமான காரியங்கள் கூட நடக்காமல் போவதற்கான வாய்ப்புகளே அதிகம். இந்தச் சூழ்நிலையில் தனிமனுஷியான என்னால் என்ன பண்ண முடியும்?"

"முடிந்ததைச் செய்யலாமே!"

"என்னால் என்ன முடியும்? அசைவம் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். நம்மைப் போன்ற இன்னோர் உயிரினத்தைக் கொன்றுதான் நாம் உயிர் வாழ வேண்டுமா? இது நாகரிகமுடையவர்கள் செய்கிற காரியமா? யோசித்துப் பார்த்தேன். கடந்த நான்காண்டுகளுக்கு மேலாகவே நான் அசைவம் சாப்பிடுவதை விட்டு விட்டேன். ஆயினும் என்னால் மீன் சாப்பிடுவதை விட முடியவில்லை. இருந்தாலும் விடா முயற்சியாக இருந்து அதையும் கடந்த ஆறு மாதங்களாகச் சாப்பிடாமல் விட்டு விட்டேன். தனி மனுஷியான என்னால் இது போன்ற விஷயங்களைத்தான் செய்ய முடிகிறது. அப்போதும் என் குடும்பத்திலுள்ள மற்றவர்கள் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். என்ன செய்ய முடியும்!"

"நீங்கள் கோயில்களுக்கெல்லாம் போவதில்லை என்கிறார்களே, நீங்களென்ன நாத்திகவாதியா?"

"நான் கோயில்களுக்குப் போவதில்லை; திருநீறு பூசிக் கொள்வதில்லை என்பதெல்லாம் உண்மைதான். ஆனாலும் நான் நாத்திகவாதியல்ல. நமக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது என்கிற அளவில் நான் ஆத்திகவாதிதான்."

"கோயில்களுக்குச் செல்வதே அந்த மேலான சக்தியை வழிபடுவதற்காகத்தானே!"

"நம் மனத்தில் ஆயிரம் அழுக்குகளை வைத்துக் கொண்டு - தவறு செய்வதையே வாழ்க்கை முறையாக வைத்துக் கொண்டு - இவற்றையெல்லாம் குத்திக்காட்டுகிற நமது மனச்சாட்சியைச் சமாதானம் செய்து கொள்வதற்காகக் கோயிலுக்குப் போகிறவர்கள்தான் அதிகம். பக்தி என்பது மற்றவருக்காகப் போட்டுக் கொள்கிற ஒரு வேஷமல்ல; அப்படியொரு வேஷம் போடுவதன் மூலம் யாரை ஏமாற்றப் போகிறோம்? மற்றவரையா? கடவுளையா? அல்லது நம்மை நாமேயா? வெளியிலிருக்கிற மற்றவர்கள் மாத்திரமல்ல; நமக்கு நாமே கூட எதையும் திணித்துக் கொள்ளக் கூடாது. எதுவானாலும் அது நமக்குள்ளிருந்து இயல்பாக வர வேண்டும்."

"நீங்கள் ஜே. கிருஷ்ணமூர்த்தியை நிறையப் படித்திருக்கிற மாதிரி தெரிகிறது..."

"சாரி. அவர் யாரென்றே எனக்குத் தெரியாது. யார் அவர்?"

"ஞானி என்பார்கள்; குரு என்பார்கள்; ஆன்மீகவாதி என்பார்கள். ஆனால் அவரோ தாம் எதுவாகவும் யாராகவும் இல்லையென்று மறுத்தார். அகத்தின் முகத்தை அழித்துக் கொள்ளாமல் எதுவுமே சாத்தியமில்லை என்றார். அவரது உரையாடல்களை நீங்களே படித்துப் பாருங்கள், அப்போதுதான் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும். அது சரி, உங்கள் குடும்பத்தினர் எப்படி? அவர்களும் கோயிலுக்குப் போக மாட்டார்களா?"

"ஐயய்யோ! என் தாயார் மிகத் தீவிரமான முருக பக்தை. அதன் காரணமாகவே எனக்கு ஸ்ரீவள்ளி என்று பெயர் வைத்தார்கள். வீட்டில் அங்கங்கே பார்க்கிறீர்களே, சிருடி சாய்பாபாவின் படங்கள். என் தந்தைதான் இவற்றையெல்லாம் வைத்திருக்கிறார்."

"பின் எப்படி உங்களுக்கு மட்டும் இப்படியொரு சிந்தனை? ஒருவேளை பெரியாரின் புத்தகங்களை நிறையப் படித்திருக்கிறீர்களோ?"

"அதுவும் இல்லை. நானாக யோசித்துப் பார்த்ததன் விளைவுதான் இது. ஆனாலும் பெரியாரின் புத்தகங்களைப் படிக்க விருப்பம். அவர் பெண்களைப் பற்றி - அவர்களின் முன்னேற்றத்துக்கான வழிகள் பற்றி நிறையப் பேசியும் எழுதியும் இருக்கிறாராமே, அதனால்!"

"நீங்கள் பெண்ணியவாதியா?"

"சுயமரியாதையை விட்டுக் கொடுக்காமல் வாழ நினைப்பவர்களுக்கு இப்படியொரு பெயரா? கணவன் - மனைவி என்கிற உறவில் கூட சுயமரியாதையை விட்டுக் கொடுக்க முடியாது. இப்படிச் சொல்வதாலேயே எதையுமே கணவனுக்காக - குடும்பத்துக்காக விட்டுக் கொடுக்க மாட்டேன் என்பதல்ல. சமூக வாழ்க்கையிலேயே சில விஷயங்களில் விட்டுக் கொடுத்து வாழ வேண்டிய யதார்த்தத்தில், கணவனுக்காக விட்டுக் கொடுப்பதிலோ பொறுமை காப்பதிலோ தவறில்லை. ஆனால் இதையெல்லாம் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு, எனது சுயமரியாதையையே பறிக்க

●●



"உங்க காதல் ஓட்டல்ல 'ஸ்டார்ட்' ஆச்சா எப்படி...?"

"சாப்பிட்டுட்டு நான் மாவரைக்கப்போகும்போது, அவ எனக்கு முன்ன அங்க மாவரைச்சிண்டிருந்தாள்."

– மு. முத்து வெங்கிட ஆனந்தன்

நினைக்கக் கூடாது."

"அப்படியொரு நிலை ஏற்பட்டால்..."

"ஐயா சாமி... உன் வழி வேறு; என் வழி வேறு... என்று ஒரு கும்பிடு போட்டு விடுவேன்."

"இப்படியெல்லாம் அத்தனை சுலபமாகச் செய்து விட முடியுமா என்ன?"

"சுயமரியாதை பாதிக்கிற வாழ்க்கை ஒரு நரக வாழ்க்கை. அதை இந்த சமூகத்துக்காக எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ஒரு பெரிய கும்பிடுதான்!"

"உங்கள் திருமணம் எப்போது?"

"இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில்."

"காதல் திருமணமா? யாரையாவது காதலிக்கிறீர்களா?"

"காதலா, எனக்கா? இந்த நிமிஷம் வரை நான் யாரையும் காதலிக்கவில்லை."

"இந்த நிமிஷம் வரை சரி. அடுத்த நிமிஷத்தில்?"

"நாளையைப் பற்றி என்னால் இன்றே சொல்ல முடியாது."

"காதலிக்கும் வாய்ப்பிருப்பதை நீங்கள் மறுக்கவில்லை!"

"காதலிப்பேன் என்றும் நான் உறுதி கூறவில்லையே!"

"மீண்டும் சினிமாவுக்கே வருவோம். நீங்கள் மலையாளப் படங்களிலும் நடிப்பதால் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்... தென்னக சினிமாக்களை எடுத்துக் கொண்டால் மலையாளப் படங்கள்தான் அதிக அளவில் தேசிய விருதுகள் வாங்குகின்றன. ஏன் அப்படி என்று நீங்கள் யோசித்திருக்கிறீர்களா?"


"கதைகளைப் பொறுத்தவரை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று எதிலும் பெரிய வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அதை சினிமாவாகச் சொல்லுகிற பாணி இருக்கிறதே... அது மலையாளத்துக்காரர்களுக்கு நிறையக் கைவந்திருக்கிறது. இதன் காரணமாகத்தான் அவர்கள் அதிக அளவில் விருதுகளைத் தட்டிச் செல்ல முடிகிறது என்று கருதுகிறேன்."

"அடடா, இந்த சினிமாவுக்காகப் படிப்பைப் பாதியிலேயே விட்டு விட்டு வந்து விட்டோமே என்று எப்போதாவது நீங்கள் வருத்தப்பட்டதுண்டா?"

"எத்திராஜில் பி.ஏ. இரண்டாம் ஆண்டு படிக்கும்போது சினிமாவுக்கு வந்தேன். அப்போது அந்த வருத்தமிருந்தது. அதை ஈடு கட்டும்விதமாகத் தனிப்பட்ட முறையில் நிறையப் படிக்க ஆரம்பித்தேன். இருப்பினும் எதிர்காலத்தில் வேலைக்குப் போக வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் என்னிடம் ஒரு பட்டப் படிப்பு கூட இல்லையே என்கிற வருத்தம் அப்போது ஏற்படலாம்!"

"பி.ஏ.வில் என்ன படித்தீர்கள்?"

"சரித்திரம்."



"அந்த கம்பெனியில் வேலை கேட்டுப் போனதுக்கு உன்னை அடிச்சுத் துரத்திட்டாங்களாமே?"

"ஆமா! முதலாளி போஸ்ட் காலியா இருந்தா போட்டுக் கொடுங்கன்னு கேட்டேன்."

— இ. குமரவேல்

"வேறு எந்த சப்ஜெக்டுமே கிடைக்காதவர்கள்தான் சரித்திரம் எடுத்துப் படிப்பார்கள் என்றுதான் பலரும் கேலி செய்வார்கள்..."

"சரித்திரம் என்றால் அவ்வளவு இளப்பமா? நான் சரித்திரத்தை விருப்பத்தோடு கேட்டு வாங்கிப் படித்தேன். ஒவ்வொருவரும் இந்திய மற்றும் உலக சரித்திரத்தைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்."

"கடைசியாக ஒரு கேள்வி. உங்களைப் பற்றிச் சமீபத்தில் ஒரு பத்திரிகையில் படித்த ஒரு செய்தி..."

"அப்படியா? சொல்லுங்கள், சொல்லுங்கள்..."

"சொன்ன பிறகு வருத்தப்படக் கூடாது."


"சேச்சே! நீங்கள் தாராளமாகக் கேளுங்கள்."

"நீங்கள், மாலை நேரமானால் ஆண் நண்பர்களோடு சேர்ந்து குடிக்கிறீர்கள் என்றும் இதன் காரணமாகவே படப்பிடிப்புகளுக்கு நீங்கள் சரிவரச் சென்று ஒத்துழைப்பதில்லையென்றும் கிசுகிசுவாக அல்ல; செய்தியாகவே வெளியிட்டிருந்ததைப் படித்தேன்..."


"இப்படி வெளிப்படையாகக் கேட்டதற்கு நன்றி. சினிமாவில் மிகைப்படுத்திக் காண்பிப்பது போல், ஒரு செய்தியையும் சுவாரஸ்யம் கருதிக் கொஞ்சம் மிகைப்படுத்தி எழுதினால் பரவாயில்லையென்று விட்டு விடலாம். ஆனால் பொய்யையே செய்தியாக வெளியிடுகிறபோது எப்படிப் பொறுத்துக் கொள்வது? முன்பு ஒருமுறை என்னைப் பற்றிய பொய்ச் செய்தியொன்றை வெளியிட்டதற்காக ஒரு பத்திரிகைக்கு நோட்டீஸ் கூட அனுப்பினேன். பல பத்திரிகையாளர்கள் பொய்களைத்தான் கூசாமல் எழுதுகிறார்கள். இதனாலேயே பத்திரிகைப் பேட்டி என்றாலே முடிந்தவரை ஒதுங்கிக் கொண்டு விடுகிறேன்."

— இளங்கோவன்

அட்டை வண்ணப்படமும் படங்களும் : **யோகா**



பிரமாண்ட தள்ளுபடி விற்பனை
பிரம்மாண்டமான தள்ளுபடி விற்பனையைத் துவக்கி வைக்கிறவர் யாரு?
நம்ம ஜட்ஜ் தான்! அவர்தானே ஜாமீன் மனு தள்ளுபடி ஸ்பெஷலிஸ்ட்!
பத்து பர்சன்ட் தள்ளுபடி போக, புடவை ஆயிரத்து ஐநூறு ரூபாய் ஆகுது!
கொஞ்சம் குறைச்சுக் குடுங்க
சரி அஞ்சு பர்சண்ட் தள்ளுபடி போக ஆயிரத்து ஐநூத்து எழுபத் தஞ்சு ரூபா கொடுங்க!
அதாங்க வியாபார ரகசியம்! அந்த கடையும் எங்களது தான்!
உங்க கடைக்கு வாசல்ல இருக்கிற பிளாட்பார கடையில, இந்த ஐட்டம் பதினைந்து ரூபாய்! ஆனா, நீங்க முப்புது ரூபாய் சொல்லறீங்களே!



இங்க கொள்ளை நடக்கறதா போன் வந்ததே! கொள்ளைக்காரங்க எங்க?
விலை விசாரிச்சு பாருங்க உங்களுக்கே புரியும்
வாஷிங் மெஷினை டோர் டெலிவரி செய்யுறதா சொன்னீங்களே
ஆமாம்! எங்க கடை வாசல் வரை கொண்டு வந்து வைச்சுடுவோம்! அப்புறம் உங்க பாடு
இந்த புடவை கடைகாரர் ரொம்ப புத்திசாலி! கடைக்கு பக்கத்துல தியேட்டர் கட்டி வெச்சிட்டார்! தியேட்டர்ல கணவன்மார்கள் கும்பல் தாளலை!
இதோ பாரும்மா! காய்கறி விலையெல்லாம் தெரியுமில்லை! இனிமே, ஷாப்பிங் முடிச்சுட்டு கடைசியா காய்கறி வாங்க வரமுடியாது! தனியா, நிறைய பணத்தோட வரணும்!
கருத்து: ஜூலி
படம்: செல்லம்

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை உருவாக்கிய கவுன்சிலின் முதல் கூட்டம் நடைபெற்ற நாளின் பொன்விழா சமீபத்தில் டெல்லியில் கொண்டாடப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில், இப்போது நம்மோடு இருக்கும் மூத்த தலைவர்களை அந்த விழாவில் கௌரவித்தார்கள். அவர்களில் நமது சி. சுப்பிரமணியமும் ஒருவர்.

"அரசியல் சட்டத் திருத்தங்கள் அவசியம் தானா? அரசியல் கட்சிகள் தங்கள் சுயநலத் துக்காகவே திருத்தங்களைக் கொண்டு வருகின்றன என்ற கருத்தில் தங்களுக்கு உடன்பாடு உண்டா? சட்டப்பிரிவு 356ஐ நீக்கிவிட ஒரு அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று தீவிரமாக இப்போது பேசப்படுகிறதே, இதை யார் எப்படி முடிவெடுப்பது?" என்ற கேள்விகளை சி.எஸ். முன் வைத்தோம்.

மொத்தமாக எல்லாவற்றுக்கும் அவர் பதிலளித்தார் :

இதுவரை கொண்டு வரப்பட்ட எல்லாத் திருத்தங்களும் தவறானவை, தேவையில்லாதவை என்று சொல்லி விட முடியாது. எமெர்ஜென்ஸியின் போது கொண்டு வரப்பட்ட சில திருத்தங்கள் சர்ச்சைக்குரியவையாக அமைந்தது உண்மை. பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சி அவற்றை மறுதிருத்தம் செய்தது. மாறுபட்டு வரும் நமது காலகட்டத்தில் நேற்று பொருந்தி வந்தவை இன்று பொருந்தாமல் போகக்கூடும். அவற்றை சரியாக அடையாளம் கண்டு, அதற்கேற்ப அரசியல் சட்டத்தைத் திருத்துவது அவசியமே. அப்படிச் செய்யும்போது அரசியல் கட்சிகள் முடிவெடுப்

அரசியல்வாதி

பதை விட, பிரச்னைகளைத் தனிப்பட்ட நிபுணர் குழுவிடம் சமர்ப்பித்து, அவர்களின் கருத்தைக் கேட்டறிந்து அதன்படி திருத்தங்களைக் கொண்டு வரலாமா கூடாதா என்று முடிவெடுக்க வேண்டும் என்பது என் கருத்து. அரசியல் கட்சிகளிடம் ஒப்படைத்தால் தங்களுக்குச் சாதகமான முடிவை எடுக்கக்கூடும்.

356-ம் பிரிவு பற்றி கேட்டீர்கள். அது மட்டுமல்ல. ஐம்பது ஆண்டுகளாக அரசியல் நிர்ணயச் சட்டத்தின் கீழ் நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இதில் பல பிரச்னைகள் தலைதூக்கியிருக்கின்றன. 356-ம் பிரிவு வேண்டுமா வேண்டாமா, கவர்னர் நியமனம், மத்திய – மாநில அரசுகளுக்கிடையே உறவு

[redacted]



ஆவதற்கு அடிப்படைத் தகுதி இல்லையே!

என்று பல முக்கிய பிரச்னைகளில் முடிவெடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஒருசிலர் இப்போது நடைமுறையிலிருக்கும் நாடாளுமன்ற ஜனநாயகம் - பார்லிமெண்டரி டெமாக்ரஸி - தொடர வேண்டும் என்கிறார்கள். இன்னும் சிலர் பிரஸிடென்ஷியல் ஃபார்ம் ஆஃப் கவர்ன்மெண்ட்தான் நமக்குப் பொருத்தம் என்று கருதுகிறார்கள். இன்னும் ஒரு பிரிவினர் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு முறையைக் கொண்டு வர வேண்டும் என்கிறார்கள். இவையெல்லாம் முக்கியமான கருத்துகள். நான் சொன்ன மாதிரி பரிசுத்தமான ஒரு நிபுணர் குழு - அரசியலுக்கு அப்பாற்பட்டு நியமிக்கப்பட வேண்டும். அக்குழு நம் அரசியல் சட்டத்தை 'ரிவ்யூ' பண்ண வேண்டும். விருப்பு வெறுப்பற்ற முடிவுகளை வெளியிட வேண்டும். அம் முடிவுகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

நம் அரசியல் சட்டத்தில் ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது.

ஆட்சி நடக்கும் முறைக்கு அரசியல் கட்சிகளே அடிப்படை. ஆனால் ஓர் அரசியல் கட்சி எப்படி இருக்க வேண்டும் என்று எந்த விதியையும் நமது அரசியல் சட்டம் நிர்ணயிக்கவில்லை.

கட்சிகள் சரியான முறையில் அமைக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி, அதன் தலைவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டியது அவசியம். ஒருவர் துறவறம் மேற்கொண்டால் அதற்கான சில விதிமுறைகளை, கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பது அவசியம். அரசியல்வாதிகளும் அப்படித்தான். பதவியைப் பயன்படுத்தி எப்படி லாபம் காணலாம் என்பதை விட மக்களுக்கு எப்படி நன்மை செய்யலாம் என்கிற உணர்வு மேலோங்கி இருப்பவர்களே அரசியலில் இருக்க வேண்டும்.

நாட்டில் இன்று வேறு எந்தத் துறையில் வேலை செய்பவர்களுக்கும் அடிப்படைத் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளுக்கு மட்டுமே இல்லாமல் போய் விட்டது. அரசியல் நிர்ணயச் சட்டக் குழுவின் முடிவுகளை அறிவித்து, அன்று டாக்டர் ராஜேந்திர பிரசாத் பேசிய போது சொன்னார், 'நாம் உருவாக்கியிருக்கும் அரசியல் நிர்ணயச் சட்டங்கள் எந்த அளவுக்கு நன்மை பயக்கும் என்பது அவற்றைச் செயல்படுத்தும் பொறுப்புக்கு வருபவர்களைப் பொறுத்தே அமையும்!' எவ்வளவு அர்த்தம் பொதிந்த வார்த்தைகள் அவை!

பெரிய பெரிய தலைவர்கள், யோசித்து யோசித்து உருவாக்கிய அரசியல் நிர்ணயச் சட்டத்தில், அரசியல்வாதிகளுக்கான அடிப்படைத் தகுதிகளை மட்டும் சேர்க்காமல் எப்படி விட்டுப் போனது?

விடுதலைப் போராட்ட வீரர்களை நாம் அறிவோம். அவர்களின் தன்னலமின்மை, தியாகம், பெருந்தன்மை, தலைமைப் பண்புகள் தொடர்ந்து ஆட்சிக்கு வருபவர்களிடமும் இருக்கும் என்று எதிர்பார்த்தோம். அந்த எதிர்பார்ப்பு இவ்வளவு மோசமாகத் தகர்ந்து போகும் என்று யார் கண்டார்கள்?

பேட்டி : **கஸ்தூரி**

— சி.எஸ்.சொல்கிறார்

இருவர்



'இது உண்மைக் கதை அல்ல' என்று எடுத்த எடுப்பில் கார்டு போட்டு விடுகிறார் மணிரத்னம். அது மக்களுக்கு அல்ல. சென் ஸாருக்கும் திராவிட இயக்கத்துத் தொண்டர்களுக்கும்.

அப்படியும் படம் ஏராள வெட்டு வாங்கியிருக்கிறது. ஆனால் வெட்டுக் காயங்கள் வெளியே தெரியாமல் பூசி மூடியிருப்பது இயக்குநரின் திறமை.

எம்.ஜி.ஆர்., கலைஞரின் முதல், இரண்டாவது திருமணங்களில் தொடங்கி அவர்களது அரசியல் பிரவேசம், கருத்து மாறுபாடுகள், எதிரெதிர் இயக்கங்கள் என்று விரிந்து, நண்பர்களில் ஒருவர் இறப்பதுடன் படம் முடிகிறது. சுமார் முப்பது, முப்பத்தைந்து வருடக் கதையை மூன்று மணி நேரத்தில் சுருக்குகிறார் மணிரத்னம்.

எம்.ஜி.ஆரின் ஜெராக்ஸாக வருகிறார் மோகன்லால். சிறுவயதில் சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு, நாடக கம்பெனிகளில் அலைந்தது, ஆரம்பகால சிறு சிறு சினிமா முயற்சிகளின் தோல்வி; முதல் மனைவி எதிர்பாராமல் இறந்து விடுவது - இவையெல்லாம்கூட விடுபடவில்லை. மிக வேகமான சின்னச் சின்ன ஷாட்களில் பதிவாகி விடுகின்றன.

அவ்வண்ணமே கலைஞரின் (படத்தில் பிரகாஷ்ராஜ்) ஆரம்பகால சினிமா முயற்சிகள்.

இந்தப் படத்துக்காக மணிரத்னம் எத்தனையெத்தனை நூல்களைத் தேடிப் படித்திருப்பார் என்பதை எண்ணிப் பார்க்கிற போது, பிரமிப்பாக இருக்கிறது. படத்தில் வருகிற வசனங்கள்கூட கவனமாக திராவிட இயக்கப் பெரும் புள்ளிகளின் எழுத்துக்களிலிருந்தே எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

மோகன்லால், பிரகாஷ், ஐஸ்வர்யா ராய் தவிர ஒரு மாபெரும் நட்சத்திரக் கூட்டமே (தபு, மதுபாலா, ரேவதி, கௌதமி, நாசர், ராஜேஷ் உட்பட) படத்தில் கௌரவ வேடம் ஏற்றிருக்கிறது.

மோகன்லாலின் முதல் மனைவியாகவும் மூன்றாவது காதலியாகவும் (கவனிக்க - அசம்பாவம் மிக்க நடிகை!) இரண்டு வேடங்களில் வரும் உலக அழகி ஐஸ்வர்யா ராயிடம் இத்தனை பிரமாத நடிப்பை யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஷூட்டிங் ஸ்பாட்டில் காட்டுகிற கர்வம், பின் மோகன்லால் மேல் காதல் கொண்டு குழைகிற நளினம், மாறாத முரட்டுப் பிடிவாதம் எல்லாம் மூர்ச்சை கொள்ளச் செய்யும் நேர்த்தி.

படத்தின் பிற நேர்த்திகளைப் பட்டியலிட்டால் இடம் காணாது. நாற்பது வருடங்களுக்கு முன் தொடங்கி நடக்கிற கதை என்பதால் செட், ஒளி, ஒலி, ஆடைகள் சகலத்திலும் ஒரு புராதனம் காட்டியிருக்கிறார்கள்.


வைரமுத்துவின் கவிதைகளால் பின்னப்பட்ட வசனங்கள் படத்தின் பெரிய பலம். (வசனம் சுஹாசினி என்ற போதும்) தமிழை அதன் சகல பரிமாணங்களிலும் அவர் வளைத்துக் கையாண்டு தெளித்திருக்கிற கவிக் கோலங்கள் படம் முழுக்க விரவிக் கிடக்கின்றன.

க்ளைமாக்ஸில் மோகன்லால் இறக்கிறபோது பிரகாஷ்ராஜ் உருக்கமாகக் கவிபாடி, 'சாவிலும் எனை முந்தி சரித்திரம் படைத்தவனே' என்று முத்தாய்ப்பு வைக்கிறபோது கைதட்டல்களில் தியேட்டர் வெடிக்கிறது.

இருப்பினும் ஒன்று சொல்லத் தோன்றுகிறது. இரண்டு மிகப் பெரிய நிஜ சரித்திர புருஷர்களின் தோள்களில் திரைக்கதை சாய்ந்திருப்பதால்தான் படத்தை ரசிக்க முடிகிறது. தமிழ்நாட்டு அரசியல் தெரியாதவர்களுக்குப் படம் மிகக் குழப்பம் தரக்கூடியது.

தவிர, ரொம்ப பர்சனலான இன்னும் சில காட்சிகள் (பிரகாஷ்ராஜ் - தபு காதல் செய்து, கவி பாடும் இடம், இன்ன பிற) நீக்கப்பட்டிருக்கலாம். உணர்ச்சி வசப்பட்ட சில அரசியல் அனுதாபிகளான ரசிகர்கள், தியேட்டரில் காது கொண்டு கேட்கச் சகிக்காத வசவு வார்த்தைகளை உதிர்ப்பதைக் கொண்டு இதனைச் சொல்லத் தோன்றுகிறது.

— ஆர்.பி.ஆர்





1997 ஜனவரி 26
தாது தை 13
மலர் : 55
இதழ் : 26

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



புதுக்கோட்டையில் பலப்பரீட்சை!

எந்தவொரு இடைத்தேர்தலுமே ஆளும்கட்சிக்குத் தீவிரமான சோதனைதான். ஆட்சியில் அமர்ந்த பிறகு அதன் கொள்கை, செயல்பாடு குறித்து மக்கள் அளிக்கும் தீர்ப்பாக அது இருக்கும்.


ஆனால், புதுக்கோட்டையில் பிப்ரவரி ஆறாம் தேதி நடக்கவிருக்கும் இடைத்தேர்தல் சாதாரண சோதனை அல்ல... சத்திய சோதனை!

ஜெயலலிதா தொடங்கி, கடந்த ஆட்சியின் பல அமைச்சர்கள், அதிகாரிகள் பேரில் தி.மு.க. அரசு எடுத்துள்ள விசாரணை நடவடிக்கைகளைக் குறித்து தமிழக மக்கள் அளிக்கும் விமர்சனமாக அத் தேர்தல் இருக்கும்.

இந்த நடவடிக்கைகள் நியாயமானவையா? அல்லது அத்துமீறல்களா? ஜெயலலிதாவைச் சிறைப்படுத்தியது சரியா? அல்லது பழிவாங்கல் நடவடிக்கையா? போன்ற கேள்விகளுக்கு மக்கள் தீவிரமாக விடை தேட ஆரம்பிப்பார்கள். அவர்கள் பெறக்கூடிய விடைகளின் அடிப்படையிலேதான் வாக்களிப்பும் அமையும்.

இதை ஆளும்கட்சி முற்றிலும் உணர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லைதான். ஆனால், ஜெயலலிதாவும் இதை முழுக்க முழுக்க மனத்தில் கொண்டே தமது காய்களை நகர்த்துவார்.

தம் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அத்தனையும் அநியாயமானவை; பழிவாங்



கும் நோக்குடையவை என்கிற விஷ பிரசாரத்தை ஏற்கெனவே அவர் நடத்தி வருகிறார். சிறைச்சாலை அனுபவங்களுக்கு பூதக்கண்ணாடி காட்டி, கொடுமைகளாக அவற்றை மாற்றி வருகிறார். இதுவே அவரது இடைத்தேர்தல் பிரசாரத்தின் அஸ்திவாரமாகவும் அமையும்.

எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து, தமது கட்சி வேட்பாளரைப் பொது வேட்பாளராக ஏற்க வேண்டும் என்று வேறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். வாக்குகள் சிதறாமல் தமது பக்கம் குவிய வேண்டும் என்கிற அவருடைய நோக்கு வெளிப்படையாகவே தெரிகிறது.


ஆனால், இதர எதிர்க்கட்சிகள் ஜெயலலிதாவின் வேண்டுகோளை ஏற்கும் நிலையில் இல்லை. போட்டி அ.தி.மு.க. வேறு, புதுக் கட்சியாகக் களத்தில் இறங்குகிறது.

இந்த நிலைமை ஆளுங்கட்சிக்குச் சாதகமானதுதான் என்றாலும் தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்குச் சவால்கள் மிக அதிகம்.

அனுதாப அலை ஒருபுறம். சட்டசபையில் எதிர்க்கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் வாக்களிக்கக்கூடியவர்கள் இன்னொரு பக்கம் - இந்த இரட்டைக் குதிரை சவாரி செய்யும் ஜெயலலிதாவை ஜெயித்தால் மட்டும் போதாது. அந்த வெற்றி மிகக் கணிசமான வாக்கு வித்தியாசத்தில் அமைய வேண்டும். அப்படி அமைந்தாலன்றி ஆளும்கட்சிக்குப் பெருமையோ பலமோ சேராது. சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அந்த வெற்றி நிர்ணயமாகுமானால் அது ஜெயலலிதாவுக்கு மிகப் பெரிய ஆதாயமாக அமைந்துவிடும். தி.மு.க.வின் இந்த வெற்றி வெற்றியே அல்ல என்று கூட அவர் பேச இடமளித்துவிடும்.

அப்படியெல்லாம் நடவாமல் தீர்க்கமான வெற்றியை தி.மு.க. - த.மா.கா. கூட்டணி பெற வேண்டுமாயின், ஜெயலலிதாவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் முன்கூட்டியே எதிர்பார்த்து, திட்டமிட்டுக் காரியங்கள் செய்தாக வேண்டும்.

புதுக்கோட்டைக்குச் சென்று பிரசாரம் செய்ய ஜெயலலிதா முற்பட்டால் அவரது அந்த



முடிவை (நீதிமன்றத்தில்) எதிர்க்கப் போவதில்லை என்று அறிவித்தார் ஆலடி அருணா. கட்சியின் தன்னம்பிக்கையை மட்டுமின்றி, பெருந்தன்மையையும் உணர்த்த முற்படும் ஒரு நடவடிக்கை இது.

ஆனால் இதையே கூட திரித்து, தமக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா. 'உங்கள் அனுமதியே அவசியமில்லை... நீதிமன்ற அனுமதிதான் தேவை...' என்கிற ரீதியில் பேசியிருக்கிறார்.

தமது இல்லத்தில், வருமானத்துக்கு மீறிய சொத்துக்கள், நகைகள் கைப்பற்றப்பட்டதை யொட்டி, 'நகையே அணிய மாட்டேன்; இழந்த நகைகளை மீட்டு, விற்று தர்ம காரியத்துக்குத் தருவேன்...' என்றெல்லாம் பேசி, எளிய மக்களைக் கவரப் பார்க்கிறார்.

இப்படி, ஒவ்வொரு கட்டத்திலும் ஜெயலலிதா திரித்துப் பேசியும் பழிசுமத்தியும் பிரசாரம் செய்யலாம். அது அவருக்கு ஆதாயமாகவே அமையும்.

ஆனால், தி.மு.க. அவரைத் தாக்கிப் பிரசாரம் செய்தாலோ அது 'நெகடிவ்' பிரசாரம் என்று முத்திரை குத்தப்படும்.

தி.மு.க. - த.மா.கா. கூட்டணியின் மிகச் சிறந்த மூளைகள் ஒருங்கிணைந்து, சரியான விகிதத்தில் **attack and defence** கலந்த ஒரு பிரசார திட்டத்தை உருவாக்க வேண்டும். அதை சாமர்த்தியமாக நடைமுறைப்படுத்தி புதுக்கோட்டையில் பிரும்மாண்டமான வெற்றியைப் பதிவுசெய்ய வேண்டும்.

அவ்வாறின்றி, ஒரு சாதாரண வெற்றி பெற்றால், அது ஆளும்கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி யாகவே கருதப்படும்! ஜெயலலிதா செய்த அநியாயங்களையும் அநீதிகளையும் துடைத் தெறிந்து விட்டு அவரை ஏற்க மக்கள் தயாராகிறார்கள், என்கிற ஆபத்தான சூழ்நிலையும் உருவாகிவிடும்.

உலகப் படவிழா:

உள்ளம் தொட்ட நல்ல படங்கள்

உள்நாடு, வெளிநாடு, பழசு, புசுது, கதைப்படம், டாக்குமெண்டரிப்படம், பெரும் படம், குறும்படம் என்பதாகச் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட படங்களில், நமக்குக் காணக்கிடைத்த வரையில் தெரிந்த பொதுவான அம்சம் இதுதான் : பெரும்பாலான உலகப் படங்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட ஆரம்பம், நடு, முடிவு என்கிற ஃபார்முலா இல்லை. ஒரு சம்பவம், அல்லது ஓர் உணர்வைப் பற்றிய சித்திரிப்பாகவே நிறைய படங்கள் இருந்தன. ஆனால் கலையம்சத்திலும் கிராஃப்டிலும் பல ஜாலங்கள் காட்டியிருக்கிறார்கள்.

அமெரிக்க இயக்குநர் கார்ல் பேலர்டின் (Carroll Ballard) 'Fly away home' ஐத்தான் இந்த வரிசையில் முதலில் சொல்ல வேண்டும். தந்தையுடன் தனியே வசிக்கிற ஒரு குட்டிப் பெண்ணைப் பற்றிய கதை இது. அம்மா இல்லாமல் முழுக்க முழுக்க அவளது உலகம் தன் தந்தையைச் சார்ந்தே இயங்குகிறது. ஒரு தாயை விடவும்-சிறப்பாகத் தன் குழந்தையை கவனித்துக் கொள்ளும் அந்த கிளைடர் விமானப் பிரியனுக்குப் புதிதாக ஒரு காதலி வரும்-போதுதான் சிக்கலும் வருகிறது. குட்டிப் பெண்ணால் அந்தப் புதியவளை ஏற்க முடியாமல் முகத்துக்கு நேரே சொல்லி விடுகிறாள் : "இதோ பார்! என் அப்பாவைக் காதலித்து, கல்யாணம் பண்ணிக் கொண்டு விடலாம் என்று கனவு காணாதே! நான் அதை ஒருபோதும் நடக்க விடமாட்டேன்!"

போல்டாக இப்படிப் பேசிவிட்டாலும் மனசுக்குள் அவளுக்கு இருக்கக்கூடிய குழப்பங்களையும் பயங்களையும் மறக்கச் செய்வதற்காக, தன் கிளைடர் விமானத்தை ஓட்ட அவளுக்குப் பயிற்சி தருகிறார் தந்தை. இங்கே பிடிக்கிறது சூடு.

அந்தப் பெண் ஒரு பறவைப் பிரியை. காட்டிலிருந்து ஏழெட்டு வாத்து முட்டைகளை எடுத்து வந்து தானே செயற்கையாய்க் குஞ்சு பொரிக்கச் செய்து வாத்துக்களை வளர்த்து வருகிறவள். வாத்துக்களோடு இருக்கிற சமயம்தான் அவள் வாழ்வின் அழகான தருணங்கள். அவைகளோடே பேசுவதும் சிரிப்பதும் பாடுவதும் கொஞ்சுவதுமாக இருப்பவள், திடீரென்று கிளைடர் விமானத்துக்குத் தாவியது அந்த வாத்துக்களால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போகிறது.

விமானத்துடனேயே அவையும் உயர எழுந்து பறக்கின்றன. அமெரிக்க நகரங்களின் மேல் அந்தப் பெண்ணும் வாத்துக்களும் சுற்றிச் சுற்றி வலம் வருகிற காட்சி, மீடியாக்களைக்

'GABBEH'



கவர்ந்து இழுக்கிறது. பறவைகளும் பெண்ணும் டீவி திரைகளை ஆக்கிரமிக்கிறார்கள்.

பறவை போல சுலபமான வாழ்க்கைக்காக ஏங்கும் ஒரு சிறுமியின் கனவு, அந்தப் பறவைகளாலேயே நனவாகிற போது அப்பாவின் காதலி, தன் கண் எதிரேயே அவரை இறுக்கி அணைத்துக் கொள்வதைக் கூட சுலபமாக அவளால் ஏற்றுக் கொள்ள முடிகிறது.

ஒன்றரை மணி நேரத் திரைக்கவிதை இது. கிராஃபிக்ஸில் நம்மவர்கள் இன்னும் சிங்கம், புலி பண்ணிக் கொண்டிருக்க, இயக்குநர் கார்ல் பெலார்ட், ஒரு புதிய அத்தியாயத்தை இந்தப் படத்தில் தொடங்கி வைத்திருக்கிறார்.

வசீகரமான தலைப்பினால் ஜனங்களைச் சுண்டி இழுத்த படம், பிரெஞ்சு இயக்குநர் Claude Lelouch-இன் Man, Woman - User's manual.

* 'Lulu'



இந்தப் படம் ஆரம்பிப்பதற்கு முன்னால் நடந்த கூத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். திருவனந்தபுரத்தில் மொத்தம் ஆறு தியேட்டர்களில் பிரிந்து வேறு வேறு படங்கள் பார்த்துக் கொண்டிருந்த மகாஜனங்கள், 'கைரளி'யில் இந்தப் படம் காட்டிய சமயத்தில் அடித்துப் பிடித்துக் கொண்டு திரளாக ஓடி வர, தியேட்டர் சீட்டுகள் நிரம்பி, தரையில் சுமார் ஐந்நூறு பேர் உட்கார வேண்டியதாகி விட்டது. மேலும் பலர் நின்றபடிக்கு! இன்டலெக்சுவலாவது? புடலங்காயாவது? சின்னச் சின்ன அபிலாஷைகளில் ஜனங்களுள் பிரிவினையே கிடையாது!

• Making of a Mahathma



ஆனால் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்து தமிழ் சினிமா ஹீரோயின்கள் மாதிரி இந்தப் படத்தில் வருகிற பெண்களெல்லோரும் கழுத்துக்கு மேலே உடை அணிந்தே நடமாடியதில் ரசிகர்களுக்கு மகா வருத்தம்.

சக மனிதர்களின் வாழ்க்கையே அடுத்தவருக்குப் பாடம் என்கிற சின்ன விஷயம்தான். இரண்டு நண்பர்களின் வாழ்வில் நடக்கிற சம்பவங்கள் மூலம் விஷயம் சொல்லப்படுகிறது.

மிகப் பெரிய ஒரு பிஸினஸ் மேன். தனி வாழ்க்கையில் சில காதல் தோல்விகள். மனைவிக்கு அவனைப் பிடிக்கவில்லை. அவன் நண்பன் ஒரு நடிகன். வீடு சரியாக இருக்கிறது. ஆனால் தொழிலில் அவனுக்கு வீழ்ச்சி. போதாக்குறைக்கு உயிர்க்கொல்லி நோய் வேறு வந்திருக்கிறதோ என்று அவனுக்குச் சந்தேகம். கடைசியில் அவன் பிழைத்து விட, சாதாரண வயிற்றுவலிதான் தனக்கு என்று சொல்லிக் கொண்டிருந்த தொழிலதிபருக்கு சீரியஸ் வியாதி என்று தெரியவர, எதையுமே லேசாகவும் ஆட்டிடியூட்டிக்காகவும் பார்க்கிற அவனுக்கு வாழ்க்கையே அர்த்தம் இல்லாதது போலத் தெரிகிறது. "நீ பிழைத்து



* Michael Kreihsi

Michael Kreihsl, ஆஸ்திரிய நாட்டு இயக்குநர். இவரது Charm's Incident தான் விழாப் படங்களிலேயே பலரையும் சின்னடைப் பிடித்துக் கொள்ளச் செய்த படம். படம் நெடுக விரவிக் கிடக்கும் சர்-ரியலிஸத்தை follow பண்ணுவதுடன் கதையையும் ஒரு குத்துமதிப்பாக அனுமானிப்பது ஒரு சவாலாக இருந்தது.

விழாவுக்கு வந்திருந்த க்ரெய்ஸலிடம் இதுபற்றிக் கேட்டபோது, "இது ஒரு நிஜமான ரஷ்ய எழுத்தாளரின் நிஜமான கதை. அந்த மனிதரின் குணாதிசயங்களை வெளிப்படுத்த, சர்-ரியலிஸப் பாணியைத் தவிர வேறு சிலாக்கியமான வழி இருப்பதாக எனக்குப்படவில்லை. படம் புரியவில்லை என்றால் அதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. இந்தப் படத்தைக் கண்ணால் பார்க்காதீர்கள். மூளையால் பாருங்கள்!"

அலெக்ஸாண்ட்ரா
மார்டினஸ்



'**M**an, Woman - User's Manual' படத்தின் கதா நாயகி அலெக்ஸாண்ட்ரா மார்டினஸ், உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சு நடிகை. தம் கணவருடன் (இந்தப் படத்தின் இயக்குநர்) விழாவுக்கு வந்திருந்த அலெக்ஸாண்ட்ரா, கல்கிக்கு அளித்த மினி பேட்டி :

''மற்ற படங்களுக்குக் கூடிய கூட்டத்தைக் காட்டிலும் உங்களது இந்தப் படத்துக்கு ஏன் எக்கச்சக்கக் கூட்டம் கூடியிருந்தது என்பதற்கான சரியான காரணம் உங்களுக்குத் தெரிகிறதா?''

''தெரியாமலென்ன? டைட்டில் கவர்ச்சிதான்! ஆனால் இந்தத் தலைப்பின் நிஜமான அர்த்தம் என்ன தெரியுமா? ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அடுத்த ஆண், பெண்ணின் வாழ்க்கைதான் ஒரு பாடம் – manual. சிக்கலான ஒரு விஷயத்தைப் பற்றிய எளிய படம் இது. என் கணவரின் படம் என்பதால் அல்ல; நான் நடித்த படங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்த படம் இதுதான்.''

''கதையில் உங்கள் காதலன் வேறொருத்தியை மணந்து கொண்டதை கலபமாக ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் நீங்களும் உங்கள் சீனியர் டாக்டரை மணக்க முன்வந்து விடுகிறீர்கள். நிஜத்தில் காதல் அத்தனை கலபமானதுதானா?''

''இல்லை என்றுதான் நினைக்கிறேன்.''

''உங்கள் கணவர் இப்படியொரு காரியம் செய்தால்...? – ஒரு பேச்சுக்கு.''

''எனக்கு அவரைத் தெரியும். என்னைத் தவிர வேறு யாரையும் அவரால் காதலிக்க முடியாது.''

''இந்தியாவுக்கு முதல் முறையாக வந்திருக்கிறீர்கள். இந்த இரண்டு நாட்களில் உங்களுக்கு அதிகம் பிடித்தது என்ன?''

''புடைவை.''

எப்போதும் ஜீன்ஸும், டீ-ஷர்ட்டும் மட்டுமே அணிந்து, வளைய வந்த அலெக்ஸாண்ட்ராவுக்கு ஆங்கிலம் ஓரளவுக்குப் பேச வருகிறது. அவர் கணவர், இயக்குநர் Claude Lelouch-க்கு ஓர் அட்சரம் கூட ஆங்கிலம் தெரியாதாம்.

வா. உன்னை மறுபடி பெரிய ஸ்டார் ஆக்கிக் காட்டுகிறேன்" என்ற நண்பனின் வாக்கு பலிக்கிறது. அவனே இறந்து, அவன் வாழ்க்கையே படமாக, அதில் அந்த நடிகன் நடிக்கிறான்!

படத்தில் அழகான நகைச்சுவைக் காட்சிகள் சில உள்ளன. பல கிண்டல் காட்சிகள்.

"ஃபிரெஞ்சுப் படத்துக்கும் அமெரிக்கப் படத்துக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? நல்ல கதையைப் படமெடுக்க பிரெஞ்சுக்காரர்களுக்குப் பணவசதி போதாது எக்கச்சக்கமாகப் பணத்தைக் கொட்டி அமெரிக்கர்கள் குப்பையை ப்ளோ-அப் பண்ணுவார்கள்!"

– இது படத்தில் வருகிற ஒரு வசன சாம்பிள்.

GABBEH - இது இரானியப் படம். தொழில்நுட்ப ரீதியில் சொல்லிக் கொள்ளும்படியான சாதனைகள் இதில் ஏதும் இல்லை என்றாலும் ஒரு காதல் கதையை இதைவிடக் கவித்துவமாக யாரும் சொல்ல முடியாது என்று சொல்கிறபடியான ட்ரீட்மென்ட்.

ஈரானின் எல்லைப் பகுதிகளில் காலம் தள்ளுகிற ஒரு நாடோடிக் கூட்டம். பாய் பின்னும் தொழில். கூட்டத்தில் ஒரு பெண்ணுக்கு ஒரு குதிரை வீரன் மேல் காதல். இவர்கள் போகிற இடமெல்லாம் அவன் லாங்-ஷாட்டில் பின் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறான். அவர்கள் ஒன்று சேரத்தான் தடையும் வந்து கொண்டே இருக்கிறது. பெண்ணின் மாமாவுக்குத் திருமணம் ஆக வேண்டும். அம்மாவுக்குப் பிரசவம் ஆக வேண்டும், மலையிலிருந்து தவறி விழுந்து இறந்துவிடும் அவள் தங்கையைப் பற்றிய சோக நினைவுகளை மறக்க வேண்டும்...

இத்தனையையும் மீறி அவள், தன் காதலனுடன் ஓடிப் போகிறபோது துப்பாக்கி எடுத்துக் கொண்டு அவளது அப்பா பின்தொடர்கிறார்!

ஒரு நல்ல சிறுகதையின் முத்தாய்ப்பு போல மறக்கவே முடியாத கிளைமாக்ஸ்.

தப்பிப் போனவர்களை சுட்டு விட்டதாக வந்து சொல்கிறார் தந்தை. உண்மையில் சுடவில்லை. பொய் சொன்னதற்கு அவர் தரும் காரணம் : ''அடுத்த பெண்களாவது ஒழுங்காக இருக்க வேண்டாமா?"

ஒரு பாய், தன் கதையைச் சொல்வது போல அமைந்த இந்தப் படம், பார்க்க மிக உருக்கமாக இருந்தது.

நமக்குக் காணக்கிடைத்த வரையில் ரொம்ப சூடாக இருந்த படம், ஸ்ரீனிவாஸ் கிருஷ்ணா என்கிற இந்திய கொலாபரேஷனில் உதித்த கனடா நாட்டு இயக்குநரின் 'Lulu'. ரொம்ப டேஞ்சரான சப்ஜெக்ட்.

வியட்நாமிலிருந்து, உடம்பு சரியில்லாத அப்பா, அம்மாவுடன் கனடா வந்து செட்டில் ஆகிற லூலூ ஒரு எக்ஸெலன்ட்ரிக் இளைஞி. வியட்நாமிலேயே ஒருத்தனைக் காதலித்து விட்டு, இங்கே வந்து வேறொருவனை மணந்த பின்பும் அவளது காதல் அத்தியாயங்கள் முடிகிறதாயில்லை. ஒரு டிப்பார்ட்மென்டல் ஸ்டோரில் வேலை பார்க்கிற அவளைப் பார்க்கிற அத்தனை ஆண்களும்

மயங்கி, காதல் கொண்டு விடுகிறார்கள். அவளும் வஞ்சனையில்லாமல் தன்னால் முடிந்த அளவுக்குக் குறிப்பிட்ட சிலரின் காதலை ஏற்றுக் கொண்டு விடுகிறாள் - ஒரு பொதுச் சேவை மாதிரி. அவளுக்குத் தன் கணவனைப் பிடிக்காதது இதற்கொரு காரணம். கணவனின் நண்பனுடனேயே அவள் காதல் செய்ய, அதை அவன் பார்த்து விட, பிரளயம் வராத குறை.

தன் செயல்களின் விளைவுகள் பற்றி யோசிக்காமலேயே இயங்கிக் கொண்டிருக்கும் 'ஊஹூ', யோசிக்க ஆரம்பிப்பது, தன் தந்தையின் மரணத்துக்கப்புறம். பெற்றோர், கணவன், காதலர்கள் - யாருக்குமே தன்னால் நேர்மையாக நடந்து கொள்ள முடியாததை நினைத்து, சுயபச்சாதாபம் கொண்டு, தனக்கு வந்த காதல் கடிதங்கள் அனைத்தையும் அவள் கிழித்துப் போடுவதுடன் படம் முடிகிறது.

கட்டற்ற கச்சடாக் காட்சிகளையும் அதிபயங்கர வசனங்களையும் தாண்டி, இந்தப்படம் மனத்தில் நிற்கக் காரணம், அந்த ஊஹூவின் தோற்றமும் நடிப்பும். அவளது காதலர்கள் லிஸ்டில் படம் பார்க்கிற ஒவ்வொருவரும் தாமும் சேரமாட்டோமா என ஏங்கினால் ஆச்சர்யமில்லை.

ஒரு ரஷ்ய எழுத்தாளர் நிஜ வாழ்க்கையைச் சித்திரிப்பது Charm's Incident. ஆஸ்திரியப் படம். அந்த எழுத்தாளர் ஒரு சிக்கலான பேர்வழி. சமயங்களில் அதிமேதாவி போலவும் அரைலூஸ் போலவும் டபுள் ஆக்ஷன் காட்டக்கூடியவன். பகலெல்லாம் இலக்கில்லாமல் திரிந்து விட்டு, இரவில் எழுத உட்கார்ந்து தனிமையில் நோகிறவன். சொந்தம் ஏதும் கிடையாது. தற்செயலாக ஒரு ரொட்டிக் கடையில் ஒரு பெண் சிநேகமாக, அவளைக் காதலிக்க ஆரம்பிக்கிறான், மனசுக்குள். அதற்குப் பின்னால் அவனால் அதிகம் எழுத முடியாமல் போகிறது. எழுதாத தருணங்களில் அவன் கைவிரல்கள் சாப்பாட்டுக் கரண்டி, கத்தியாக மாறி விடுகின்றன. மூளைக் கொதிப்பான தருணங்களில் அவன் தொப்பி, பற்றி எரிகிறது. மனச் சலனம் வரும்போது கேஸ் அடுப்பில் ஒன்றை மூட்டினால் - அடுத்தது பற்றி எரிகிறது.

அவனது தனி உலகும் அவன் வசிக்கிற அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசிக்கிற பிற மனிதர்களின் இயல்பான உலகும் ஒன்றுக்கொன்று உரசும் போது விதவிதமான சிக்கல்கள் வருகின்றன.

இறுதியில் வீடில்லாமல், தாழ்வாரத்தில் படுத்துக் கிடக்கும் ஒரு கிழவனுக்குத் தன் வீட்டைக் கொடுத்துவிட்டு, அவன் வெளியே ஓடிப் போய் விடுகிறான்.

வாழ்க்கையின் ரசனைக்குரிய விஷயங்களாக நாம் கருதுபவையெல்லாம் எத்தனை அபத்தமானவை என்பதைச் சித்திரிக்கும் சர்ரியலிஸப் படம் இது. 'படா போர்' என்று நிறைய பேர் சர்ட்டிபிகேட் கொடுத்த இப்படத்தின் இயக்குநர் என்ன சொல்கிறார் என்று பெட்டிச் செய்தியில் பாருங்கள்.

இந்தியன் பனோரமாவில் காட்டப்பட்ட ஷ்யாம் பெனகலின் "The making of a Mahathma" காந்தியடிகளின் தென்னாப்பிரிக்க வாழ்க்கையைக் கொஞ்சம் டாக்குமெண்டரித்தனத்துடன் சொன்ன கலைப்படம். இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, நெல்சன் மண்டேலா ரொம்பப் புகழ்ந்திருக்கிறார். 'தென்னாப்பிரிக்க விடுதலை இயக்கம் எழுபதுகளில்

உலக சினிமா ஒவ்வொரு வருஷமும் என்ன வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதை ஒட்டுமொத்தமாகப் பார்க்கிற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது தான் திரைப்பட விழாக்களின் நிஜமான நோக்கமாக இருக்க வேண்டும். அந்த வாய்ப்பு யாருக்கு மிக அவசியம்? திரைப்படத் துறையினருக்கும் சினிமாவைப் பாடமாகப் படிக்கிற இன்ஸ்டிடியூட் பையன்களுக்கும்.

திருவனந்தபுரம் திரைப்பட விழாவைப் பொறுத்தவரை தமிழ்நாட்டிலிருக்கும் இந்த இருதரப்பினருக்குமே இவ்வாய்ப்பு வேறு வேறு காரணங்களால் கிடைக்காமல் போய் விட்டது.

சாருஹாஸன், லெனின் தவிர இதர தமிழ் சினிமாக்காரர்கள் விழாவைப் புறக்கணித்ததன் காரணம் ஏற்கெனவே தெரியும். இன்ஸ்டிடியூட் மாணவர்களுக்கு பாஸ் ஏன் போதுமான அளவுக்கு வழங்கப்படவில்லை என்பதற்கு, விழா அமைப்பாளர்கள் யாரைக் கேட்டாலும் பதில் இல்லை. கொதித்துக் குமுறிக் கொண்டிருந்த தரமணி பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்களுள் சுமார் ஐம்பது பேருக்கு லெனின் முயற்சியால் பாஸ் கிடைத்திருக்கிறது. "ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. சென்னை இன்ஸ்டிடியூட்டைப் புறக்கணிப்பதில் யாருக்கு என்ன லாபம் என்று புரியவில்லை. இதுபற்றி ஒரு கூட்டம் நடத்தி, அரசிடம் விளக்கம் கேட்க இருக்கிறோம்" என்று நம்மிடம் சொன்னார் பிலிம் இன்ஸ்டிடியூட் பேராசிரியர் ரவிராஜ்.

அடுத்த விழாவுக்குள் வெளிச்சம் பிறந்தால் சரி.

தொடங்கப்பட்டது என்றுதான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இங்கே விடுதலை வேட்கையைத் தோற்றுவித்த முதல் மனிதர் காந்திதான் என்பதை இந்தப் படம் நிரூபிக்கிறது' என்கிறார் மண்டேலா.

ஆனால் நமக்கென்னவோ காந்தியை ஒரு போராட்ட வீரராக சித்திரித்திருப்பதை விட தனி வாழ்க்கையில் தம் மனைவிக்கும் மகன்களுக்கும் அவர் எத்தகைய சந்தோஷத்தைக் கொடுத்தார் அல்லது கொடுக்கத் தவறினார் என்பதை வெளிக்காட்டியதாகவே இப்படம் தென்பட்டது.

படத்தில் காந்தியின் தியாகத்தை விட கஸ்தூரிபாவின் தியாகம் உயர்வாகக் காட்டப்பட்டிருக்கிறது. தம் சந்தோஷங்களைத் துறந்து, அவர் சொல்வதற்காகப் போராட்டங்களில் இறங்குவது, அவர் சொல்வதற்காக தாம்பத்திய உறவை நிறுத்திக் கொள்வது, அவர் சொல்வதற்காக நகைகளைப் பொதுச் சொத்தாக்குவது என்று கஸ்தூரிபாவின் ஒவ்வொரு தியாகத்தையும் இந்தப் படம் ஹைலைட் செய்கிறது. 'Making of a Mahathma's Mrs' என்று தலைப்பிட்டிருக்கலாம்.

இந்த வருட தேசிய விருது பெற்ற அடூர் கோபால கிருஷ்ணனின் 'கதா புருஷன்', கேரளாவில் சுதந்தரத்துக்கு முன்னும் பின்னும் கம்யூனிஸம் வளர்ந்த கதையை குஞ்ஞுண்ணி என்கிற ஒரு தனிமனிதனின் வாழ்க்கைச் சித்திரிப்பாகச் சொல்கிறது.

நல்ல, வசதியான குடும்பத்தில் பிறக்கிற குஞ்ஞுண்ணியின் தாய் ஒரு சீக்காளி. தந்தை ஓடிப்போனதன் விவரம் படம் முடியும் தருவாயில் தெரிகிறது. தனது கல்லூரிப் படிப்பின் போது தீவிர கம்யூனிஸ சித்தாந்தத்தால் கவர்ந்திழுக்கப்படுகிறான் அவன். போராட்டங்களும் சிறை வீழ்வும் அவனை முழு மனிதனாக்குகின்றன. அதற்குள் அவன் அம்மாவும் ஆசையாக வளர்த்த பாட்டியும் இறந்து, ஒரே குடும்பவாசி போல் வசித்து வந்த வீட்டு வேலைக்காரக் குடும்பம் இடம் மாறிப் போய், அவன் வீடே சூன்யமாகி இருக்கிறது.

சிறையிலிருந்து திரும்பியவன், தான் சிறு வயதிலிருந்தே மனசுக்குள் காதலித்து வந்த அந்த வேலைக்காரக் குடும்பத்தின் மூத்த பெண் மீனாட்சியைத் தேடிப் போய் மணம் முடித்துத் திரும்பி வருகிறான். தன் வாழ்க்கை அனுபவங்களை ஒரு நாவலாக எழுதுகிறான்.

சுதந்தரத்துக்குப் பின் கேரளாவில் கம்யூனிஸ்டுகளின் மேல் செலுத்தப்பட்ட அடக்குமுறைகளை அப்பட்டமாகச் சித்திரிக்கும் அந்த நாவலை அரசாங்கம் தடை செய்கிறது.

ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து தொடங்கி, ஓர் இயக்கத்தின் வளர்ச்சியையும் அந்த வளர்ச்சியை எட்டிப் பிடிக்க அது சந்திக்க நேர்ந்த சோதனைகளையும் அந்த மனிதரின் வாழ்க்கையின் மூலமாகவே காட்ட முயன்றிருக்கும் 'கதாபுருஷன்' வார்த்தைகளில் வடிக்க முடியாத உணர்ச்சி வெள்ளத்தில் நம்மைத் தள்ளி விடுகிறது. இந்தப் படத்தில் அமைந்திருந்த கலையும் கலையின் ஒருங்கமைவும் விழாவில் நாம் பார்த்த வேறெந்தப் படத்திலும் அத்தனை பூரணத்துவம் பெற்றிருக்கவில்லை.

தன் கிரீடத்தில் மற்றொரு சிறகு சேர்த்துக் கொண்டிருக்கிறார், அடூர்.

- ஆர்.பி.ஆர்.

'GABBEH'

படத்தின் இயக்குநர் மோஹ்ஸன் மக்மல்பஃப் (Mohsan Makhmalbaf) இரானின் குறிப்பிடத்தகுந்த இயக்குநர்களில் ஒருவர். ''மனித உறவுகளின் வினோதங்களை விலகி நின்று பார்த்துக் கொண்டே இருப்பதுதான் என் பொழுது போக்கு. அதைக் கலையாக மாற்றுகிற முயற்சி, என் வாழ்க்கை'' என்கிறார்.

''பரபரப்பும் போர் அபாயங்களும் முஸ்லிம் பழைமை வாதமும் மிகுந்த அரசாங்கக் கட்டுப்பாடுகளும் நிறைந்த ஈரான் நாட்டு சூழ்நிலையில் இருந்து கொண்டு எப்படி உங்களால் Gabbeh போன்ற மென்மையும் மரபு மீறலும் கலந்த ஒரு படத்தை எடுக்க முடிந்தது?''



• மோஹ்ஸன் மக்மல்பஃப்

''இதில் மரபு மீறல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. காதலித்தவனுடன் ஓடிப் போவது என்பதற்கு சட்டமோ, மதமோ தடை போட முடியாது. அவர்கள் எதிர்க்கலாம். ஆனால் அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது.''

''நிஜமாகவே இரானியப் பெண்கள், உங்கள் படத்தில் வருகிற ஹீரோயின் போலத் துணிச்சல் உள்ளவர்கள் தானா?''

''முஸ்லிம் நாடு என்பதால் இப்படிக் கேட்கிறீர்கள் போலிருக்கிறது. காதல், மதம் — தேசம் இவைகளைக் கடந்த ஒரு விஷயமல்லவா?''

தத்துவம் படிக்கிறார் இந்த ☞ ரஜினி ரசிகர்!

"இதோ எங்கள் காலேஜ் ஸ்டார் என்று ஒரு மாணவனைச் சுட்டிக் காட்டுவது எங்க காலேஜ்ல ரொம்பக் கஷ்டம் ஸார். என்னை விவகாரத்தில மாட்டி விட்டுடாதீங்க. ஒவ்வொரு ஃபீல்டுலயும் திறமையானவங்க இங்கே நிறைய இருக்காங்க" என்று தயங்கினார் விவேகானந்தா கல்லூரி முதல்வர் பி. நடராஜன்.

"எல்லா காலேஜ்லேயும் இந்த மாதிரி நிலைதான். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல அடையாளம் காட்டறதுதான் எங்க முயற்சி" என்று விளக்கியபின், சற்று நேரம் யோசித்து விட்டு 'சரி' என்று ஒரு மாணவனை அழைத்து வர ப்யூனை அனுப்பினார்.

ஃபரூக் நிர்வாண். தத்துவத்தை பிரதானப் பாடமாக எடுத்து பி.ஏ இறுதியாண்டு படிக்கிறார்.

கீ போர்ட், பியானாவோடு ரொம்பக் காதல். திறமையுடன் இசைக் கருவிகளைக் கொஞ்சுகிறார். அனைத்துக் கல்லூரி இசைப் போட்டிகள் எங்கு நடந்தாலும் ஃபருக்கும் அவரது கீ போர்டும் விவேகானந்தாவுக்காக அங்கே ஆஜராகி விடும்.

லண்டன் டிரினிட்டி காலேஜில் இசையில் நான்காவது கிரேட் பாஸ் செய்திருக்கிறார்.

"இப்போ பி.ஏ. இறுதியாண்டு. ஆகவே கீ போர்டுக்கு கொஞ்சம் ரெஸ்ட் கொடுத்திருக்கேன். பரீட்சை முடிந்ததும் தொடங்கி விடுவேன்."



• ஃபருக்நிர்வாண்



• நண்பர்களுடன்...

இப்போதே டீ.வி. சீரியல்களுக்கு இசை அமைக்க நிறையப் பேர் ஃபாருக்கை அணுகி வருகிறார்களாம். பாடவும் தெரிந்திருப்பது இவரது ப்ளஸ் பாயிண்ட்.

"ஐ என்ஜாய் ஹிஸ் மியூசிக்!" என்றார் பக்கத்தில் இருந்த அவரது சக மாணவர் விஸ்வநாதன், ஸ்பீக்கர்ஸ் கிளப் தலைவர்.

ஃபாருக் ஆங்கிலத்தில் கவிதை எழுதுகிறார். "இவ்வளவு திறமைகளுக்கும் நீங்கள் பிரதான பாடமாக எடுத்திருக்கும் 'ஃபிலாஸஃபி'க்கும் என்ன சம்பந்தம்?"

"வாழ்க்கையே ஒரு தத்துவம்தானே?" என்று ஒரே வரியில் முதலில் பதில் சொல்லிவிட்டுப் பிறகு சற்றே விளக்குகிறார்.

"ஏன்? எதற்கு? என்று கேள்விகள் கேட்பது எனக்குப் பிடிக்கும். இப்படிக் கேள்விகள் கேட்க வசதியாக இருக்கிறது தத்துவப் பாடம். எனக்கு நானே கேள்வி-பதில் நிகழ்ச்சியை உள்ளுக்குள் நடத்திக் கொள்வேன்'என்கிற ஃபாருக் நிர்வாண் எம்.பி.ஏ படிக்க ஆசைப்படுகிறார்.

"ஏனென்றால் நிர்வாகம்கூட ஒரு விதமான தத்துவம்தானே!" - தொடர்ந்து, "நான் ரஜினியின் ரசிகன். நடிகைகளில் ரம்பாவைப் பிடிக்கிறது" என்கிறார்.

"எம்.பி.ஏ. எல்லாம் படித்துவிட்டு பின்னால் பெரிய எக்ஸிக்யூட்டிவ்வாக வேண்டும் என்பதுதானே உங்கள் லட்சியம்?"


"லட்சியம் என்ன என்றால் உலகம் புகழும் படியாக ஒரு மியூஸிக் ஆல்பம் கொடுக்க வேண்டும் என்பதுதான்."

ஃபாருக்கின் அணுகுமுறை, சிந்தனையெல்லாமே வித்தியாசமாகவே இருக்கின்றன.

— ராணி மைந்தன்

படங்கள் : யோகா

நான் சிரிக்கவில்லையே!



விஞ்ஞான உலகில் புகழ் பெற்ற மேதை ஐன்ஸ்டீன், வயலின் நன்றாக வாசிக்கக் கூடியவர்.

ஒரு சமயம் அவர் வயலின் வாசித்துக் கொண்டிருந்த போது ஹங்கேரியின் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகரான அவருடைய நண்பர் மோல்நார் வந்தார்.

ஐன்ஸ்டீனின் வயலின் வாசிப்பைக் கேட்டு இடையிடையே கேலியாகச் சிரித்தார்.

அதைப் பார்த்த ஐன்ஸ்டீன் "நான் வயலின் வாசிக்கும் போது சிரிக்கிறீர்களே? நீங்கள் நகைச்சுவை வேடத்தில் நடிப்பதைப் பார்த்து எப்போதாவது சிரித்திருக்கிறேனா?" என்று கேட்டார் ஐன்ஸ்டீன்.

—ஆர்.ஆர். பூபதி

வானொலியில் முதல் செய்தி!



இன்றைய வானொலி முறையைக் கண்டு பிடித்த மார்க்கோனி முதன் முதலில் வானொலி வழியாக விடுத்த செய்தி என்ன தெரியுமா?


"எனது இளமையில் நான் மாதா கோவில் பிரார்த்தனைக்குச் சென்றிருக்கிறேன். அங்கே உள்ள பாதிரியார் "பரமண்டலத்தில் உள்ள பரம பிதாவே" என்றழைத்துப் பிரார்த்தனை செய்வார். அப்பொழுது அதைப் பற்றிச் சந்தேகப்பட்ட நான் இன்று, எங்கோ இருந்து நான் பேசும் ஒலியை எங்கிருந்தோ நீங்கள் கேட்கிறீர்கள் என்று உணரும்போது, நாம் எழுப்பும் எந்த ஒலியையும் பரமண்டலத்தில் இருக்கும் பரமபிதா கட்டாயமாகக் கேட்பார் என்று உறுதியாக நம்புகிறேன்."

– 'கருத்துக் கதம்பம்' என்ற நூலிலிருந்து:
கு. ரமேஷ்பாபு.



''சிபிஐக்காரன் வர்ற நேரத்துல இந்த ஆல்பத்தை யார் கொண்டு வைச்சது...? எனக்கு யாரைத் தெரியாதுன்னு சத்தியம் பண்ணிக்கிட்டிருந்தேனோ அந்த ஆசாமி யோட சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்டோ இதுல இருக்கு....''

''நூத்தம்பது பேரைப் பார்த்துப் பேசி ஒருவழியா இரண்டு பேர் உங்க படத்தைப் பாராட்டற மாதிரி வீடியோ எடுத்துட் டோம்....''



ஆஹ்ஹாஹ்ஹா...

''இந்த மேஜையும் நாற்காலியும் அம்பது லட்சத்துக்கு வாங்கியிருக்குங்க.... ஆனா முறைகேடு எதுவும் நடக்கலை.... டெண்ட ரெல்லாம் கோரித்தான் முறையா வாங்கி யிருக்கோம்...''





''இந்த இன்கம்டாக்ஸ்காரங்க ஸ்ட்ரைக் பண்றதுக்குக் கூட ஏதாவது ஒரு பணக்கார நிறுவனம் பணம் கொடுத்திருக்கும்னு நினைக்கறேன்... 'சம்திங்' வாங்காம அவங்க விரலைக் கூட அசைக்க மாட்டாங்களே...''

— இந்தியன் ஃபீச்சர்ஸ் ஸிண்டிகேட்

ஜானு மாமி மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தாள்.

அவளது காதல் தூது வெற்றியில் முடிந்துள்ளது. முதலில் அவள் பிந்துவிடம்தான் சொன்னாள்.

"ஆல்பர்ட்டின் அக்கா ஒப்புக் கொண்டாளா, மாமி?"

"ஒத்துக் கொள்ளாமல்? அடியே! அவள் நல்ல கிறிஸ்துவச்சிடி. மனுஷி. மனசைப் பார்க்கிறவள். இந்தப் பசங்க விவகாரத்தைச் சொன்னவுடனே, கண்ணிலே கண்ணீர் விட்டாள்."

"ஐயோ பாவம்."

"அசடே! என்ன நினைச்சாளோ? கடைசியா, என்ன சொன்னா, தெரியுமோ? 'கல்யாணங்கள். தேவனோட வீடான சொர்க்கத்திலே நிச்சயப்பட்டிருக்கும்னு நாங்க நம்பறோம். எங்க வேதம் அந்த மாதிரித்தான் சொல்லுது, அம்மா. கல்யாணங்கள் தான்னு சொல்லுதே தவிர, இந்து - இந்து, கிறிஸ்தவன் - கிறிஸ்தவச்சின்னு சொல்லலை. ஒரு ஆணும் பெண்ணும் சேருவது மட்டுமே தானே கல்யாணம்? கல்யாணத்துக்கு அவசியம், பண்ணிக்கிறவர்கள் ஆணாகவும், பெண்ணாகவும்தான் இருக்கிறது மட்டும்தான். யாருக்கு யார்ங்கிறது, நம் கையில் இல்லை. வாழப் போறது நாம் இல்லை. என் தம்பிக்கு இஷ்டம், சந்தோஷம் எதிலோ, அதிலேதான் எனக்கும் சந்தோஷமே. இந்தத் திருமணம் ஆசீர்வதிக்கப்பட்ட திருமணமாக இருக்கட்டும்'னு சொன்னா."

"ரொம்ப உயர்ந்த மனுஷி."

அமைதியாக இருந்துவிட்டு ஜானு மாமி சொன்னாள்.

"தெய்வாம்சம்கிறது இதுதாண்டி. குடும்பத்துக்காக ஒருத்தி, கல்யாணமே பண்ணிக்காமே வாழறது, தம்பி தானே கல்யாணத்தைத் தீர்மானித்தான்னு கோவிச்சுக்காமே, அதை அங்கீகரிக்கிறது, இதுக்கு எல்லாம் என்ன பேரு? இதுதான் கடவுள் தன்மை. மதம், மனசைச் சுத்தமாக் கழுவி, கசடு, அழுக்கு இல்லாமே புரட்டி வைக்கிறதுதான். அதை விட்டுட்டு, கத்தியைத் தூக்கறது. தூஷணம் பேசறது, பகைக்கிறது, எல்லாம் யானைக்குப் பிடிக்கிற மதம்."

"சுந்தா சார் இதை ஒத்துக்கிட்டு இருப்பாரா, உயிரோடு இருந்தா?"

"மாட்டார். தகராறு பண்ணுவார்."

"என்ன முகாந்திரம் சொல்லுவார்?"

"சாதி, மதம் எல்லாம் பொருந்தலைம்பார். மணமக்களை ஒடுகாலிகள் என்பார். ஆணும் பெண்ணும் இணையறதுல, சாதிக்கும் மதத்துக்கும் எந்தப் பொறுப்பும் இல்லைங்கறது எல்லோருக்கும் தெரியும். தெரிஞ்சும், என்னத்துக்கு மறுக்கிறாங்க? தங்களோட ஆதிக்கம் போயிடும் சேன்னு பெரியவங்க வருத்தப்படறாங்க. வருத்தம் கோபமா மாறுது. கோபம், தாங்கள் புறக்கணிக்கப்பட்டுட்டோமேங்கறதுதான்.



பூக்கள் நாளையும் மலரும் 13

சாதி, மதம், சடங்கு, ஆசாரம் எல்லாம் ஒரு சாக்குதான். எல்லா இந்துக்களும், காதல் திருமணத்துக்கு எதிர் இல்லை. அது மாதிரி, எல்லாக் கிறித்துவர்களும் ஆதரவும் இல்லை. நல்லவர்களுக்கு, மனுஷா முக்கியம். நல்லவர்கள் மாதிரி இருக்கிறவாளுக்கு மதம் முக்கியம்."

பிந்து சிரித்தாள். பிறகு சொன்னாள்.

"சுந்தா சார், உங்களை என்னத்துக்குக் காலம் பூரா பகைச்சார்னு இப்போ புரியறது."

ஜானு மாமி, தலையை உயர்த்திக் கொண்டு, கீழ்ப் பல் வரிசை தெரியச் சிரித்தாள்.

"அடி பிந்து. அது உனக்குத் தெரியாது... யாருக்கும் தெரியாது. இப்போ, நானே சொல்றேன்.



மனசுக்குள்ளே போட்டு வச்சுக்கோ. ரொம்ப வருஷம் முந்தி, என் வீட்டுக்காரரும் நானும் இங்க வந்த புதுசல நடந்த சங்கதி இது. என்னைக் கொண்டவன்தான், ஒண்ணாந் தரப் போக்கிரின்னுதான் உனக்குத் தெரியுமே. அவனுக்கு, ஏற்கெனவே, வைத்தீஸ்வரன் கோயில்லே, மோசமான பெண்களோட தொடர்பு இருந்துச்சு. இங்க, வந்தும் வளசரவாக்கத்துல, ஒரு வைப்பாட்டி வச்சுண்டு சீரழிஞ்சார். இது எல்லாம் சுந்தா சாருக்குத் தெரியும். என் மேல, அவருக்கு ஒரு ஈடுபாடு. அது, அவரோட சிரிப்புல, வழியறதுல, நடவடிக்கையில தெரிஞ்சது.

எனக்கு அவர் மேல, அந்த மாதிரி நினைப்பு இல்லை. ஏன்னா, ஏனோ தோணலை. அவரைப் புண்படுத்திடக் கூடாதுன்னு, நான் எதிர்த்துப் பேசலை. என்னோட மவுனம், சம்மதம்னு அவர் தப்பா புரிஞ்சுனுட்டார். இதே அனுமார் கோவில்லே வச்சு, நானும் அந்த மனுஷரும் மட்டுமே இருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு, என் முன்னால் வந்து நின்னு என் கையைப் பிடிச்சுக்கிட்டார். பகவானுக்குத் தெரியும், நான் பட்ட பாடு. பயம் இல்லை. ரொம்ப அவமானமாக இருந்துச்சு. மோகம் தப்பு இல்லை. ரெண்டு கையும் நீளும் போதுதானே சினேகம் சாத்தியம். அவர் மட்டுமே கையை நீட்டிண்டு நின்னார். அதுதானே ஆபாசம். நான் வேணாம்னு சொன்னேன். என்னைச் சேர்த்

துண்டு – முரட்டுத்தனமாத்தான் – இதுல என்ன தப்புன்னார். உனக்குத்தான் புருஷன் சரியில்லையேன்னார். புருஷன் சரியில்லைன்னு பெண்டாட்டிகள் சீரழிய ஆரம்பிச்சா அதுக்கு முடிவுதான் ஏது? பத்துக்கு ஆறு புருஷன்காரன் சரியில்லை. என்னடியம்மா ஆகும்? என் புருஷன் சரியில்லேன்னு உன்கிட்டே வந்து அழுதேனா? கேட்டேன். 'ஹி... ஹி...'ன்னு கனைச்சான், குதிரை கணக்கா. என்னென்னமோ பண்ணத் தொடங்கினான். நாயே, கையை எடுன்னேன், கறாரா. உடம்பைச் சுத்தின பாம்பு விலகிடுச்சு. அந்தக் கோபத்தை மனசுக்குள்ளே வச்சுண்டு, காலனி முழுக்க, அந்தக் கட்டேலே போறவன் என்ன பண்ணான் தெரியுமோ? நான், அவன் கையைப் பிடிச்சு இழுத்ததா, சொல்லிட்டுத் திரிஞ்சான். என் புருஷன் ஒண்ணாம் நம்பர் கேப்மாரிதான். டகல்பாஜிதான். முடிச்சு மாறிதான்... குடிகாரன்தான்... கூத்திக் கள்ளன்தான். ஆனாலும், இந்த அக்கப்போரை நம்பலை. இந்தப் பாவியைப் பார்த்து, 'அடே சண்டாளா... என் வீட்டுக்காரியோட நான் வாழலைதான், நான் எச்சக்கலை நாய்தான், ஆனா என் பெண்டாட்டி நெருப்புடா... நாக்கு சுட்டுடும்னார். அந்த ஒரு வார்த்தைதான்டி, எனக்கு கிடைச்ச பேறு, விருது, மரியாதை எல்லாம். என் கன்னிமையை அழிச்சவன்தான். என் பொழைப்பை நாறப் பண்ணினவன்தான் என் புருஷன்... ஆனாலும், அன்னைக்கு சபை நடுவில சொன்னானே அந்த வார்த்தை, அதுக்காகத்தான்டி, இன்னிக்கும் அந்த நாய்க்கு தெவசம் பண்ணி, திதி கொடுக்கறேன்... அப்படியாக்கொத்தவன் இந்த சுந்தா சார். எல்லாத்திலேயும் ஒழுங்கு, மரியாதை, நேர்மைன்னு சொல்லிட்டுத் திரிஞ்சவர்தான் இந்த சுந்தா... அதே சமயம், இன்னொண்ணையும் நான் சொல்லி ஆகணும். என்கிட்ட மோசமா நடந்துக்கிட்டிருக்கலாம், இந்த சுந்தா. அது சின்ன பலவீனம். மன்னிச்சுடலாம். மத்தபடிக்கு, நம்ம காலனிக்கே தகப்பனார் மாதிரி, வாத்தியார் மாதிரி இருந்தவர் இல்லையோ, அந்த மகானுபாவன்? அதுக்கு நம்ம 'ரெஸ்பெக்ட்' பண்ணி ஆகணும். யார்தான் உலகத்துல மோசமானவர்? யாரும் இல்லை. சாட்சாத் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் மோகாவஸ்தை இருந்ததுன்னா, நம்மை மாதிரி கேவலம் மனுஷப் பூண்டுகள் எம்மாத்திரம்..."

இருவரும், இந்தச் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள தேவகியின் வீட்டுக்குச் சென்றார்கள்.

தேவகி, ஒரு கிராமத்து ஆளுக்கு சோறு படைத்துக் கொண்டிருந்தாள். கூடத்தில் சம்மணம் போட்டு அமர்ந்து, இறந்த மார்போடும், அளவுகளில் அழியாது பளிச்சென்று துலங்கும் விபூதிப் பூச்சோடு, கணுக்கால் வரை இழுத்துச் சொருகப்பட்ட வேஷ்டியோடு, சம்பிரமமாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான், ஒரு கிராமத்து இளைஞன். அவன் முன்னால் இருந்த இலை, சகலவிதமான பக்கவாத்தியங்களோடு இருந்தது. கொசுறு மாதிரி சோறு, தொண்டர்களுக்கு மத்தியில் இருக்கிற தலைவர் மாதிரி, விளங்கியது.

"வாங்கோ, ஜானு மாமி, பிந்து. இவன் என் தம்பி... கிராமத்துல இருந்து வந்திருக்கான். அவன் இவன்னு சொல்றது எனக்கே சங்கடமாத்தான் இருக்கு. இவன் என் மருமவனாகப் போறான்..."

"மருமகனா?"

"என் மவ ஜனனியைக் கட்டிக்கிறவன், எனக்கு மருமகன்தானே?"

"ஜனனிக்கு சம்மதமா, தேவகி?"

"மாட்டைக் கேட்டுக்கிட்டு யாரும் கொட்டா கட்டறது இல்லை."

"ஜனனி, மாடா?"

"ஆமா... அவ இஷ்டம் போல விட்டுத்தான். ஊர் சிரிச்சுட்டுதே. போவட்டும் பழைய கதை. என்ன திடீர்னு?"

"ஜனனி இல்லையா?"

"ஒரு பிரண்டுகிட்டே, நோட்ஸ் வாங்கி வரப் போயிருக்கா."

"சரி, நாங்க வர்றோம்."

"சாப்பிடறியளா?"

"வேணாம், தேவகி."

அவர்கள் போன பிறகு, தேவகி சொன்னாள்.

"சனிக் கிரகங்கள். இந்தக் காலனியையே கெடுத்துக்கிட்டு அலையறாடா, இந்தக் கிழவி. சரியான சூனியக்காரக் கிழவி. கூட வந்தாளே, கை இல்லாத ரவிக்கை போட்டுண்டு, அந்தக் கடன்காரியை, 'காலனி சில்க்'குன்னு, இங்க இருக்கிறவா சொல்லுவா."

"சில்க்குன்னா?"

"அதாண்டா... அந்தச் சினிமாக்காரி... என்னத்தைச் சொல்லறது...? அசிங்கம் பிடிச்ச ஜென்மங்கள். நீ மோர் போட்டுக்கோ.... என்னடா அதுக்குள்ளே எழுந்துட்டே?"

"போதும்க்கா."

இருட்டுக் கட்டடத்துக்குள்ளே, இருட்டு அறைக்குள் இருப்பது போல உணர்ந்தான், சபேசன். நடக்க நடக்க எந்தப் பக்கமும் இருட்டாகவே இருந்தது. இருட்டே தெருவாக, சாலையில் நடந்து கொண்டிருந்தான் அவன். 'தோற்றுப் போய் விட்டோம்' என்று அவன் நினைத்தான். அவன் திருமணம் தோல்வியைத் தழுவி விட்டதா? அவன் எதிரே, ஒரு பார வண்டி வந்து கொண்டிருந்தது. இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டு வந்தது ஒரு மாடு. அதன் கண்கள், இருட்டில், மயில் கண், தீப் பற்றி எரிவது போல் எரிந்தது. வண்டியின் சக்கரங்கள். மண்ணில் அரைத்துக் கொண்டு

செல்வது, பஸ்ஸில் அரைபட்ட கற்கள் எழுப்பும் சப்தம் போல நரநரத்தது.

கீற்றுக்கொட்டகை போட்ட, ஒரு சிறிய டீக்கடைக்கு முன் நின்றிருந்தான் சபேசன்.

"டீ போடட்டுமா சார்?" என்றார் கடைக்காரர்.

"சரி, போடுங்க" என்றபடி அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்தான் அவன். டீ வந்தது. அதன் சூடும், தேயிலைச் சுவையும், இனிய கசப்பும் அவனுக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது. சுரைக்காய் மாதிரி, விளக்கொன்று தொங்கி, வெளிச்சம் தந்து கொண்டிருந்தது. கர்ப்பிணியின் அழகிய வயிறு போல, ஒரு பெரிய பலூன் கடையின் நடுவாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

அந்த இடத்துக்கு, நகரத்து வியாபாரியைப் போல ஒருத்தன் வந்து அமர்ந்தான்.

"பக்கிரி, பத்து நாள் பாக்கியை வச்சு இருக்கியேப்பா..." என்றான் அந்த ஆள்.

பக்கிரி என்று அழைக்கப்பட்ட கடைக்காரர், சின்ன மேசையின் அலையத்தைத் திறந்தார்.

"ஏம்மா, பச்சிம்மா... இங்க வச்சிருந்த ரூவா எங்க?"

"சாயங்காலம், இடத்துக்காரர் வந்தாரு. வாடகை கொடுத்திட்டேன்."

"அட... என்னண்டை ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா?" என்று சாக்கு மறைப்பைப் பார்த்தபடி கேட்டார், பக்கிரி.

"என்னத்துக்குச் சொல்லணும்?"

"இப்போ. காய்கறிக் கடைக்காரர் வந்திருக்காருடி... என்ன பதில் சொல்ல?"

"நாளை மறுநாள் வரச் சொல்லு..."

பக்கிரி, வந்த நபரிடம், "கோவிச்சுக்காதீங்க சார்... ரெண்டு நாள் பொறுத்து வாங்க... தர்றேன்."

"கொடுத்திடு" என்றபடி அந்த நபர் எழுந்து போனார்.

பக்கிரி, சபேசனிடம் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னார்.

"பாவம் பச்சிம்மா... சார்... நான் சும்மா டீயை ஆத்திக்கிட்டு நிக்கறேன்... குடும்பத்தை நடத்தறதே என் பெண்டாட்டிதான் சார்... பாவம் பச்சிம்மா... நாலு பிள்ளைகளையும் படிக்க வச்சுக்கிட்டு, சோறும் ஆக்கி, என்ன பாடுபடறா, பொம்பிளை..."

சபேசனுக்கு, ஏதோ அந்த நிகழ்ச்சியில் பாடம் இருப்பது போலத் தோன்றியது. டீக்கடையின் கூரை, போதிமரமாக மாறிப் போனது போல அவன் உணர்ந்தான். சில்லறையைக் கொடுத்துவிட்டு நகர்ந்தான்.

காற்றில் பறக்கும் கூந்தலைத் தள்ளிவிட்டுக் கொண்டாள் ஜனனி. ஆடையையும் ஒழுங்குபடுத்திக் கொண்டாள், அவள். எதிரில் இருந்த ஆல்பர்ட், வெட்கம் கெட்ட பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

தெரு நாய் செய்த சாதனை!

"மைக்கேல் என்ற நாய் "பெக் ஓ மை ஹார்ட்" என்னும் நாடகத்தில் 1250 முறை நடித்தது. "நாடக அரங்கின் அழியாத் துணைவன் என்ற பட்டம் பெற்ற இந்த ஐரிஷ் நாய், லாஸ் ஏஞ்சல்ஸில் தெருநாய்களை அடைத்து வைக்கும் சிறையிலிருந்து ஒரு பவுண்ட் விலைக்கு வாங்கப் பட்டது. இந்த நாய் வாங்கப்படாமல் இருந்திருந்தால் மற்ற நாய்களுடன் இதையும் சிறையில் கொன்றிருப்பர்!"

– 'பேசும் ஆவி'களிலிருந்து
தகவல் : வி. பி. காந்தி



"ஜனனி, ஒரு கேள்வி."

"என்ன?"

"ஒரு நாளைக்கு எத்தனை முறை, இழுத்து விட்டுக் கொள்வாய்?"

"சீ.. பொறுக்கி."

"சும்மா ஒரு கணக்குத்தான். என் கணக்குப்படி, பத்து நிமிஷத்துக்கு ஒருமுறை இழுத்து விட்டுக் கொள்கிறாய். அதுக்கு சரியாக ரெண்டு வினாடிகள் ஆகுது. ஒருநாளைக்கு சுமார் ஐம்பது தடவை இதைப் பண்றே. அதாவது நூறு வினாடிகள். சுமார் இரண்டு நிமிஷம். ஒரு நாளைக்கு, ரெண்டுலேர்ந்து அஞ்சு நிமிஷம். ஒரு மனுஷி, தன் வாழ்நாளிலே, எத்தனை நாட்களை இழுத்து விடறதுலே செலவழிக்கிறது?"

"தம்பி, மண்ணுக்கு வா... என்னைக் கட்டிக்க முறைமாமன் வந்திருக்கான்."

"பட்டாக்கத்தி மீசையும்.. வேஷ்டியுமாவா?"

"வெள்ளைக் குதிரை விட்டுட்டியே..."

"என்ன சொல்றான், என் வில்லன்."

"அவன் வில்லனா, நீ வில்லனான்னு இன்னும் ஒரு வாரத்துல முடிவாயிடும்."

"என்னப்பா சொல்றே?"

"எனக்கும் என் மாமனுக்கும் நிச்சயதார்த்தம் நடக்கப் போகுது."

"நான் என்ன பண்ணணும்?"

அவன் சுற்றிலும் பார்த்தான். அங்கொருவர் இங்கொருவராகச் சிலர், உணவையே பார்த்திராதவர்கள் போல கருமமே கண்ணாக இருந்தார்கள்.

"விளையாடாதே. என்ன பண்ணணும்னு, மகாபலிபுரம் லாட்ஜிலே என்னைக் கேக்கலையே.. நாளைக் காலையே, உன் அக்காவை, நானே பார்த்துப் பேச உன் வீட்டுக்கு வர்றேன்.."

திடுக்கிட்டான் ஆல்பர்ட்.

எழுந்து போய்க் கொண்டிருந்த ஜனனியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான் அவன்.

(தொடரும்)

மீண்டும் மத்யமர் கதைகள் - 3

பதவி உயர்வு

ஜனவரி முதல் தேதி பதவி உயர்வுகளை அறிவித்தார்கள். தலைமைச் செயலகத்திலிருந்து அரசாணை 3 இ எண் 1134 என்று உணர்ச்சியற்ற தலைப்பிட்டு, மிகுந்த நெருக்கத்துடன் "கீழ் வரும் சிப்பந்திகள் அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட பதவிகளுக்கு உயர்வு பெறுகிறார்கள். சம்பளம் முதலியன வழக்கத்துக்குரிய நிதித்துறை அரசாணை பொ. நு/96 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது."

பட்டியலில் சீனிவாசனின் பெயர் இல்லை.

பழனிகுமாரின் பெயர் இருந்தது. இஸ்மாயில் இருந்தது. ஊர்மிளாவின் பெயர் கூட இருந்தது. சீனிவாசன் பெயர் இல்லை.

"ஏதோ மிஸ்டேக் ஆயிருக்கு சார். உங்க பெயர் எப்படி இல்லாம போகும்? நீங்க இவங்க அத்தனை பேருக்கும் சீனியர் இல்லையா" என்ற அவர் பி.ஏ. சாவித்ரியின் கண்களில் கண்ணீர் தெரிந்தது.

சீனிவாசனுக்கும் விளங்கவில்லை. ஏதோ தப்புத்தான் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று ஏ.எஸ்.ஸுக்கு போன் செய்தான். பி.ஏ. எடுத்தார். "பார்த்துச் சொல்றேன் சார். இதெல்லாம் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ல தான் பார்க்கறாங்க. எதுக்கும் நீங்க பெரியவரை ஒரு வார்த்தை கேட்டுருங்க. இல்லை நேராவே பார்த்துருங்களேன். வாங்களேன், நாலுமணிக்கு ஃப்ரீயா இருப்பார்."

"இல்லைப்பா. முதல்ல போன் பேசறேன். இதில எதாவது தப்பு இருக்கான்னு பாத்துறணும்."

"அனேகமா இருக்காது சார். ரெண்டு தடவை செக் பண்ணிட்டுத்தான் ரிலீஸ் பண்ணுவாங்க. கெஜட்டுக்கு போறதில்லையா?"

ஊர்மிளா அறைக்குள் வந்து "சீனி சார், ஐ காண்ட் பிலீவ் இட். என் பேர் இருக்கு, உங்க பேர் இல்லை?"

"அதான் புரியலை."

"டைப்பிங் மிஸ்டேக்கா?"

"லெட்ஸ் ஹோப் ஸோ. எனிவே கங்கிராஜுலேஷன்ஸ். ஆட்சி மொழியில் சொல்லணும்னா நல்வாழ்த்துக்கள். இந்த ஆர்டர்படி இனிமே நான் உனக்குக் கீழே ஒர்க் பண்ணணும்" என்று கண்கள் ஒத்துழைக்காமல் சிரித்தார்.

"சேச்சே! நினைச்சுக் கூட பார்க்க முடியாது அதை. உங்களுக்குக் கிடைக்காம எனக்கு எதுக்கு ஸார் ப்ரமோஷன். என்ன ஆர்டர் வந்தாலும் நீங்கதான் பாஸ்."

"உன் எண்ணங்களுக்கு மிக்க நன்றி" என்ற போது தொண்டையை அடைத்தது.

நாலு மணிக்கு செக்ரட்ரிக்கு போன் போட்டதில் அவர் இன்னும் மீட்டிங்கில் இருக்கிறார் என்ற அவர் பி.ஏ.யைக் கேட்டான். "ராமனாதன், ப்ரமோஷன் லிஸ்ட்ல எம் பேர் இல்லை. எதாவது டைப்போவா, இல்லை சப்ளிமெண்டரி வரதா?"

"இல்லை சார். இந்த லிஸ்ட் எல்லாம் இ.எம்.மும் சி.எம்.மும்தான் க்ளியர் பண்ணது. உங்க பேர் இல்லையா? சரியா பாத்திங்களா?"

"இல்லைப்பா."

"ஆச்சரியமா இருக்குதே!"

"சி.ஆர்ல ஏதாவது கோளாறா, தெரியுமா?"

"நான் சி.ஆரைப் பார்க்கறதே இல்லை சார் பார்க்கக் கூடாது. எல்லாம் ஏ.எஸ். டாக்டர் கோபால் ரூம்லதான் காத்ரெஜ் அலமாரில வச்சிருப்பார். எதுக்கும் அஞ்சு மணிக்குள்ள லிஸ்ட்ல பேர் விட்டுப் போச்சான்னு எஸ்டாப்ளிஷ்மெண்ட்ல கேட்டுச் சொல்லிடறேன் சார்."

ஆறு மணி வரை போன் வரவில்லை. ஊர்மிளாவும் இஸ்மாயிலும் பழனியும் தற்சமயத்துக்கு பேக்கரியிலிருந்து கேக் வாங்கி வந்து எல்லாருக்கும் விள்ளல் கொடுத்து ஒருவருக்கொருவர் புகட்டிக் கொண்டு செக்ஷனே உற்சாகமாக அறைக் கண்ணாடி வழியாகத் தெரிந்தது. இஸ்மாயில் உள்ளே வந்து, "ஸார் உங்களுக்கு இல்லைங்கறதை கேக்க வருத்தமா இருக்குது. கொண்டாடவே தயக்கமா இருக்கு. இந்தாங்க."

"எனக்கு டயபடிஸ்ப்பா. கேக்கெல்லாம் சாப்பிடக் கூடாது."

"பரவால்லை, இன்னிக்கு ஒருநாள் சாப்பிடலாம்" என்றான்.

வெளியே லேசாக கைதட்டல் கேட்க

சுஜாதா

ஊர்மிளாவுக்கு சாவித்திரி காக்கடாப் பூமாலை அணிவித்துக் கொண்டிருந்தாள். துரோகி! சீனிவாசனுக்கு ஒற்றைத் தலைவலி துவங்கியது. அவனுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. தன் பெயர் நீக்கம் பிழை அல்ல, தீர்மானித்த நீக்கம். நிராகரிப்புத்தான். ஏன்? என்ன காரணம்? முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, பழனியையும் இஸ்மாயிலையும் வாழ்த்தி விட்டு, காரில் புறப்பட்டான்.

டிரைவர் மௌனமாகவே வந்தான். சாதாரணமாக நிறைய பேசுவான். அவனுக்கும் தெரிந்திருக்க வேண்டும். இந்தச் செய்திகள் எல்லாம் எவ்வளவு வேகமாகப் பரவுகின்றன?

வீட்டுக்குப் போய் ஷூவைக் கழற்றுவதற்குள் மனைவி, "உங்க பேர் லிஸ்ட்ல இல்லையாமே!" என்றாள். காப்பியை ஊஞ்சல் மேல் வைத்தாள்.

"இல்லை பாகீரதி."

"என்ன அநியாயம், உங்களைப் போல அரசாங்கத்துக்கு உழைச்சவர் வேற யார் இருக்கா?"

"தெரியலை பாகீரதி. புரியலை. இவங்க மனசில என்ன வெச்சுண்டிருக்கான்னு தெரியவே இல்லை."

"அப்பாவி ஒருத்தன் அகப்பட்டா அவன் தலையில மொளகாய் அரைக்கணும்னு. ஊர்மிளாக்கு கெடைச்சிருக்காமே?"

"ஆமாம்."

"அவ உங்களை விட நாலு பாட்ச் ஜூனியர் இல்லையா..."

"மூணு பாட்ச்."

"என்ன அநியாயம்!"

"ஆமா இந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரிஞ்சது?"

சாவித்ரியைக் கூப்பிட்டுக் கேட்டேன். அவதான் எல்லாம் சொல்லிட்டா. எப்படிப்பட்ட அநியாயம்! இந்த டிபார்ட்மெண்ட்டுக்கு நீங்க எதுக்கு உழைக்கணும்?"

"அவசரப்பட்டு எதையும் செய்ய வேண்டாம். முதல்ல கன்ஃபர்மேஷன் கேட்டிருக்கேன். அப்புறம் எதாவது க்ளெரிக்கல் எர்ரரான்னு."

"இல்லையாமே! உங்க பி.ஏ. செக் பண்ணிட்டாளாமே."

"பி.ஏக்கெல்லாம் அதுப் பத்தி தெரியாது."

"வேற யாருக்குத்



தெரியும்?"

"நிதானமா இரேன், படபடன்னு பொறியாதே."

"நிதானமா எப்படி இருக்க முடியும்? நீங்க உழைச்சதெல்லாம் இதுக்கா? பண்ண தியாகமெல்லாம்? ஒருநாளைப் பாத்தாப்பல பதினோரு மணிக்கும் பன்னண்டு மணிக்கும் ஆபீஸ்லருந்து திரும்பி வந்துண்டு... என்ன ஒரு துரோகம். முதுகில கத்தி."

"ஒரு நா ரெண்டு நா, பட்ஜெட்டின் போது ராத்திரி கொஞ்சம் லேட்டா வந்திருக்கேனே தவிர, நீ சொல்றாப்பல தினம்...."

"சும்மாருங்கோ. இந்த ஊர்மிளா அஞ்சு மணிக்கு மேல ஆபீஸ்ல ஒருநாள் தங்கிருக்காளோ?"

"குழப்பாதே போட்டு."

"இப்ப நீங்க அந்த பொம்மனாட்டிக்குக் கீழ ஒர்க் பண்ணணுமா? அதைவிட அவமானம் வேற உண்டா?"

"பாரு பாகி, ப்ரமோஷன் என்கிறதுக்கு ஆபீஸ்ல ரூல் எல்லாம் இருக்கு. வேக்கன்ஸி இருக்கணும். சி.ஆர். சரியா இருக்கணும்."

"சி ஆர்னா..."

"கான்பிடென்ஷியல் ரிப்போர்ட். என் வேலையைப் பத்தி மேலதிகாரியோட அந்தரங்க ரிப்போர்ட்டு."

"அது உங்களுக்குச் சரியா இருக்காதுங்கறீங்களா?"

"அப்படி எதாவது காரணமான்னு தெரிஞ்சுக்கணும்."

"அந்தரங்கம்னா உங்ககிட்ட சொல்வாளோ?"

"அட்வர்ஸ் ரிப்போர்ட்னா சொல்லி ஆகணும்."

"உங்க வேலைய யாரால குத்தம் சொல்ல முடியும்? எவ்வளவு சின்ஸியரா உழைச்சேள். ஆபீஸ்லருந்து குண்டூசி கூட எடுக்காம... ஆபீஸ் கார்ல என்னை ஒருதரம் ஏற விட்டிருக்கேளோ?"

"அதெல்லாம் அவாளுக்குப் பெரிசில்லையோ என்னவோ!"

"பின்ன எதுதான் பெரிசு? உங்களை விட சின்னவாளெல்லாம் ஓவர்டேக் பண்ணா சும்மா பார்த்துண்டு இருப்பீங்களா?"

"என்ன பண்ணச் சொல்றே?"

"உங்க மேலதிகாரிய கேளுங்கோ. உங்களுக்கு தைரியமில்லைன்னா நான் கேக்கறேன். அவன் பேர் என்ன?"

"டாக்டர் கோபால். மருந்து டாக்டர் இல்லை."

"எந்த டாக்டரா இருந்தா எனக்கென்ன? நான் கேக்கறேன்."

"அதுக்கெல்லாம் தேவை இருக்காது."

"நாளைக்கு உங்க பேர் லிஸ்ட்ல வந்தாகணும்."

"பார்க்கலாம்" என்று க்ளப்புக்குப் போனார்.

பழனிகுமார் பாரில் உட்கார்ந்திருந்தான். மதுசூதன் பில்லியர்ட்ஸ் ஆடிக் கொண்டிருந்தான். இஸ்மாயில் ரம்மி ரூமில் இருந்தான்.

பழனி ஏற்கெனவே மூன்றாவதில் இருந்ததால் அவரை அழைத்து ழகரம் மிகுந்த குரலில் "ஷீனி ஷார் எனக்கு ப்ரமோஷன் வந்தது பெரிசில்லை. மயிழே போச்சு. உங்களுக்குக் கொடுக்கலை பாழுங்க, செழுப்பால அடிக்கணும். கம் ஹேவ் எ பெக். எல்லாத்தையும் மழந்துழலாம்."

"இல்லைப்பா நான் சந்த்ருவை பார்க்க வந்தேன். இப்ப மூட்ல இல்லை. மேலும் நான் ஆல்கஹால் எடுத்துக்கக் கூடாதுன்னு டாக்டர் ஸ்ட்ரிக்டா சொல்லியிருக்கார்."

சந்துரு பாரின் அரையிருட்டில் தனி நாற்காலியில். அவர் எதிரே உட்கார்ந்து கடலைக் கொட்டையை பியர் சிப்பல்களுக்கு இடையே வாயில் ஒவ்வொன்றாகச் செலுத்திக் கொண்டு, "உங்களுக்கு ஏன் கெடைக்கலைன்னு எனக்குத் தெரியும். சீனி சார், பழனி ரிசர்வ் போஸ்ட். எஸ்.சி. போறது! இந்த மோர் மிளகா ஊர்மிளாக்கும் பத்தமடை இஸ்மாயிலுக்கும் எப்படி கொடுக்கலாம்? அதும் இஸ்மாயில் அஞ்சு நாளும் டெஸ்ட் மாச்ல பட்ஜெட் டைம்ல உக்காந்திருக்கான். பொண்டாட்டி பேர்ல டீவி சீரியல் எடுக்கறான். இவனையெல்லாம் கேக்கறதுக்கு ஆள் இல்லையா? எல்லாருக்கும் ஹெட் ஆபீஸ்ல ஒரு காட் ஃபாதர். கொஞ்சம் தாழ்வான குரலில், "டி. எப் இவன் கம்யுனிட்டி."

இஸ்மாயில் உள்ளே வர, "வா இஸ்மாயில் உன்னைப் பத்தித்தான் பேசிக்கிட்டு இருக்கோம். கை குடு, கங்ராட்ஸ்! டிஸர்விங் ப்ரமோஷன்" என்றான்.

"எனக்கு சாருக்குக் கெடைக்காததுதான் பெரிய ஏமாற்றம் சந்த்ரு. சிம்மம் இவரு. இவருக்கு இல்லைன்னா எப்படி?" என்றான் இஸ்மாயில்.

"எப்ப பார்ட்டி? ஜூஜ்பி பார்ட்டி எல்லாம் கூடாது. டாஜ்ல - இல்லை அடையார் பார்க் தக்ஷிண்ல. ஆமா ஊர்மிளாவுக்கு எப்படிப்பா கிடைச்சது?"

இஸ்மாயில் கைவிரல்களை உள்ளங்கையில் புரட்டிக் காண்பித்தான்.

"ஓ அப்படியா!" என்றான் சந்த்ரு.

"செக்ரட்ரியைப் போய்ப் பார்த்தா எதாவது நடக்குமா சந்த்ரு?"

சந்த்ரு, "சீனி சார் இது சீனியர் அப்பாயிண்ட்மெண்ட். இஎம்.டி பார்த்துருங்க. நான் ஏற்பாடு பண்ணட்டா?" என்றான்.

"சொல்றேன்" என்றான்.

குவார்ட்டர்ஸுக்குத் திரும்பியபோது, ரெட்டி வீட்டு நாய் அவனைப் பார்த்து என்றுமில்லாமல் குரைத்தது. இதுக்குக் கூட தெரிஞ்சு

போச்சோ... வாசல் கதவைத் திறந்ததும், "என்ன இளப்பா?" என்றாள் பாகீரதி.

"ஆமாம், என்ன ஓடிண்டிருக்குன்னு விசாரிக்கத்தான் போனேன்!"

"ஏதாவது தெரிஞ்சுதா?"

"தெரியலைம்மா. சிபாரிசு மூலமா அவங்க வந்திருக்காங்க. ஒரு போஸ்ட் ரிசர்வ் போஸ்ட். பழனி ஒருத்தன்தான் எலிஜிபிள். மத்த ரெண்டிலயும் ஏதோ முன்னபின்ன ஆயிருக்கு."

"நான் ஊர்மிளாவைப் போய்க் கேக்கட்டுமா? இங்கதான், ஈ டென்லதான் இருக்கா."

"வேண்டாம். எதும் பிரயோசனமில்லை. பாரு, உனக்கு ஏன் இதைப் பத்தி கவலை? எல்லாம் ஆபீஸ் விஷயம். எனக்கு ப்ரமோஷன் வரலைன்னு நீ எதுக்கு அல்லல்படணும்?"

"அல்லல்படணுமே. அதான் இந்த காலனில ஒவ்வொரு மனைவியும் தனக்கு ப்ரமோஷன் வந்தாப்பலே பிகு பண்ணிப்பாளுகளே. இப்பவே மிஸஸ் இஸ்மாயில் போன் பண்ணி உங்க வீட்டுக்காரருக்குக் கிடைக்கலையாமேனு துக்கம் விசாரிக்கறா. பாரதிங்கறவளுக்கு கழுத்து நிக்கலை. கோஆப்பரேட்டிவ் ஸ்டோர்ல பாக்காம திருகிண்டு போறா."

"பாரதி யாரு?"

"பழனி குமாருடைய மனைவி, நம்படவா. அவன் எஸ்ஸி."

"அப்படியா?"

"ஆமா கல்யாணத்துக்கு மட்டும் உயர் ஜாதி. ப்ரமோஷனுக்கு கீழ்ஜாதி."

"சேச்சே! அதெல்லாம் சொல்லக் கூடாது."

"உங்களுக்குத் தெரியாது. இந்தக் காலனியில் அக்கப்போரை கேட்டிங்கன்னா... உங்க ஊர்மிளா இருக்காளே.... அவளைப் பத்தி ஒண்ணு சொல்லட்டுமா? தினம் அவ வீட்டில சிமெண்டு கலர்ல ஒரு மாருதி தௌசண்டு நிக்குமே, அது யாரு வண்டிங்கறேள். அப்புறம் இந்த டாக்டர் கோபால்ங்கறவன் டாக்டரே இல்லையாமே?"

"சூ! சும்மாரு."

"நான் உங்க பாஸை ரிபப்ளிக் டே பார்ட்டில கேக்கத்தான் போறேன்."


"வேண்டாம். கார்த்தால சீக்கிரம் ஆபீஸ் போகணும். மீட்டிங் இருக்கு."

"மீட்டிங்கெல்லாம் ப்ரமோஷன் ஆனவா பார்த்துப்பா. நாளைக்கு ஆபீஸ் போக வேண்டாம் நீங்க."

"இல்லைம்மா. அவாளுக்கு கேஸ் தெரியாதும்மா."

பாகீரதி கோபத்தில், "எதுக்காக இந்த நன்னி கெட்ட டிப்பார்ட்மெண்ட்டுக்கு இப்படிப் போய் உழைக்கறேள். யானை சுமந்துதாம் நரி மூக்கின்டே வந்ததாம்னு வேலை செய்யறது ஒருத்தர், ப்ரமோஷன் வாங்கறது ஒருத்தரா?"

"எல்லாம் நல்லதுக்குத்தான் பாகீரதி.



"கவர்ச்சிகாட்டி நடிக்கமாட்டேன்னு போனவாரம்தான் பத்திரிகை பேட்டியிலே சொன்னீங்க. இப்ப இந்தப் படத்துல கவர்ச்சி நடனம் ஆடறீங்களே?"

"தயாரிப்பாளர் இப்படி திடீர்னு கவர்ச்சிகரமான சம்பளம் தருவார்னு எதிர்பார்க்கலையே, சார்!"

– பாஸு

கீதைல சொல்லிருக்கு, கடமையைச் செய்; பலனை எதிர்பாராதேன்னு."

"ஆமாம், பாழாப் போற வேதாந்தம். கீதைல ஒண்ணும் ப்ரமோஷனை கோட்டை விடுன்னு கிருஷ்ணன் சொல்லலை."

"பகவான் நமக்கு நல்லதுக்குத்தான்...."

"இப்படியே கோட்டை விடுங்கோ தஞ்சாவூர் ராஜா துளசியை போட்டாப்பல."

"என்ன பண்ணச் சொல்றே நீ?"

"சண்டை போடுங்கோ! ஏன் ப்ரமோஷன் வரலைன்னு கேளுங்கோ. கேஸ் போட வக்கிலை பாருங்கோ. இதுவும் கடமைதான்."

"யோசிக்கிறேன்" என்றான்.

ராத்திரி இரண்டு மணி வரை அவருக்குத் தூக்கம் வரவில்லை. எப்போதும் ப்ரமோஷன் சமயத்தில் டென்ஷன்தான். அதிர்ஷ்டம் இல்லை. ஆனால் ஏன் வரவில்லை என்று கேட்டதே இல்லை. அப்படி கேட்காததால்தான், எதிர்க்க மாட்டார் என்றுதான் வேண்டப்பட்டவர்களுக்குக் கொடுத்திருப்பார்களோ, இல்லை ஏதாவது பெரிய லஞ்சம் விளையாடுகிறதா, இல்லை ஜாதியா? நாளை கேட்டு விடப் போகிறேன்.

'டாக்டர் கோபால் என்ன இது அநியாயம்? என் மேல் என்ன குறை என்று பதவி உயர்வு கொடுக்காமல் என்னை அவமானப் படுத்தியிருக்கிறீர்கள். நான் ட்ரிப்யுனலுக்குப் போகப் போகிறேன். இது எந்தவிதத்திலும் எந்த ரூல்படியும், செல்லுபடியாகாது.' காலை முதல் காரியமாகக் கேட்கத்தான் போகிறேன். தூக்கத்தில் பாச்சா மாமா போன்ற ஒருவர் டை மட்டும் கட்டிக் கொண்டு, 'வாசன் நீங்க இனிமே இந்த நாற்காலில உக்கார்தீங்களா, அங்க ஊர்மிளா உக்காரணும்.'

'ஏன் எதுக்கு நான் இங்க உக்காரணும்?'

'உங்க ரூமை பழனிக்குக் கொடுக்கணும்.'

'முடியாது.'

'டேய் இவரை நகத்துங்கடா...'

அவன் நாற்காலியில் பதிய உட்கார்ந்து கொண்டு, அருகே இருந்த காத்ரஜ் அலமாரியின் கைப்பிடியை பிடித்துக் கொண்டு, இடுப்பு வேஷ்டி அவிழ்ந்தாலும் விடவில்லை. அவர்கள் மூன்று பேர் இழுக்க, அலமாரி சரிவதற்குள் எழுந்திருந்தான்.

பக்கத்தில் மனைவியைப் பார்த்தான். அவளும் தூக்கமில்லாமல் புரண்டு கொண்டிருந்தாள்.

"என்ன பெரிசா கத்தினேள்?"

"கெட்ட சொப்பனம்."

பாகிரதி தெளிவாகச் சொன்னாள். "கவலைப்படாதீங்க. ப்ரமோஷன் வராட்டா என்ன? வேற வேலை பாத்துக்கலாம். உங்க திறமைக்கு இரண்டு மடங்கு சம்பளம் கெடைக்குமாமே! நாக்கை புடுங்கிக்கறா மாதிரி நாலு வார்த்தை கேட்டுட்டு கால் கடுதாசி எழுதிக் கொடுத்துட்டு வந்துருங்கோ. நான் கிருஷ்ணமூர்த்திகிட்ட சொல்லிடறேன், ஒரு வருஷமா கேட்டுண்டிருக்கார். அந்த நார்ட்டன் கம்பெனி வேலையை எடுத்துண்ருங்கோ."

"பார்க்கலாம்" என்றான்.

பாகிரதி சொன்னாற்போல ஆபீசுக்கு போகவில்லைதான். மத்தியானம் போன் வந்தது. பாகிரதிதான் எடுத்தாள். "அலோ அவர் இல்லையே இப்ப. நீங்க யார் பேசறது?"

"நான்தாம்மா டாக்டர் கோபால்."

"யாரோ டாக்டர் கோபாலாம்" என்றாள். போனைப் பொத்தி, "இவன்தானே?"

சீனிவாசனுக்கு சகலமும் பரபரக்க "அடிஷனல் செக்ரட்ரிடி."

சரேல் என்று பாய்ந்து வந்து போனைப் பிடுங்கி, "எஸ்ஸார், சீனிவாசன் ஸ்பீக்கிங் ஸார்."

"சீனிவாசன், மீட்டிங்குக்கு வரலைய்யாமே, என்ன விஷயம்?"

"நாட் ஃபீலிங் வெல் ஸார்."

"இல்லை, உங்களுக்கு ப்ரமோஷன் கிடைக்கலைன்னு கோபமா?"

"..........."

"நாலு மணிக்கு ஆபீசுக்கு ஷார்ப்பா வந்து என்னைப் பாருங்க சொல்றேன்."

போனை வைத்து விட்டு, "நாலு மணிக்கு வரச் சொல்லிருக்கான். பயந்துட்டாங்க" என்றான்.

"பாத்தீங்களா அவாளுக்கே உறுத்தறது. நானும் கூட வரட்டுமா."

"சேச்சே! வேண்டாம் பாகி. என்னால சமாளிக்க முடியும்."

"பளிச்சன்னு கேட்டுருங்கோ. சரியா பதில் வரலைன்னா, கால் காயிதத்தில ராஜினாமா எழுதி மூஞ்சில விட்டெறிஞ்சுட்டு வந்துருங்கோ."

"சரி எழுதிண்டே போய்டறேன்."

"Dear Sir,

Due to personal reasons I herewith submit my resignation."


"பர்சனல் என்ன பர்சனல்! எனக்கு ப்ரமோஷன் கொடுக்கலை, அது அநியாயம். அதனால மனசொடிஞ்சு ரெசிக்னேஷன் கொடுக்கறேன்னு எழுதுங்கோ. நன்னா உறைக்கட்டும். மேலதிகாரிகளுக்குத் தெரிஞ்சு, அவன் வேலை போகட்டும்!"

செக்ரட்ரியின் வெளி அலுவலகத்தில் பி.ஏ.வின் மேசை மேல் ஏகமாக டயரிகளும் காலண்டர்களும் பிரப்பங் கூடையில் பழங்களும் விரிந்திருந்தன. பார்வையாளர் நேரம். பலர் காத்திருந்தார்கள். டெலிபோன் சிணுங்கிக் கொண்டே இருந்தது. சீனிவாசனைப் பார்த்ததும் பி.ஏ. எழுந்திருந்து, "உங்களை உடனே உள்ள அனுப்பச் சொன்னார்" என்றான்.

"சீனிவாசனுக்குப் பெருமையாக இருந்தது. கோபால் சன்னல் பக்கம் திரும்பி, போன் பேசிக் கொண்டிருந்தார். சீனிவாசனைச் சாடையால் உட்காரச் சொன்னார். அவரையே வியந்து பார்த்துக் கொண்டு இருவர் எதிர் நாற்காலிகளில் உட்கார்ந்திருக்க, "ஐல் டாக் டு யு லேட்டர் தயான்" என்று சொல்லிவிட்டு, காத்திருந்தவர்களையும், "நீ என்னப்பா, எனிதிங் அர்ஜெண்ட்?"

"நோ ஸார் இட் கன்வேய்ட்!"

"ரெண்டு பேரும் அரை மணி கழிச்சு வாங்க" என்று அவர்களை அனுப்பிவிட்டு, சீனிவாசனை தீர்க்கமாகப் பார்த்து, "உங்களுக்காகத்தான் அப்பாயிண்ட்மெண்டெல்லாம் கான்ஸல் பண்ணிட்டுக் காத்திருக்கேன். என்ன சாப்பிடறீங்க சக்கரை போடாம



"நீயும் குழாயில் தாண்டா பிறந்தே! ஆனா சோதனைக் குழாயில்லே! இந்த பைப்புல தான்!"

—பாஸு

காப்பி?"

"எனிதிங் ஸார்" என்றான்.

சிகரெட் பற்றவைத்துக் கொண்டு, "சீனிவாசன் உங்களுக்கு ஏன் ப்ரமோஷன் கெடைக்கலை தெரியுமா?"

"தெரியலை ஸார். என்னை விட ஜூனியர்க்கெல்லாம் கெடைச்சிருக்கு."

"நீங்க என்ன நெனைக்கறீங்க? என்ன காரணமாயிருக்கும்."

"சொல்லத் தெரியலை ஸார். ஒருவேளை ஸி. ஆர்ல அட்வர்ஸ் ரிமார்க் இருந்தா எனக்குத் தெரிவிச்சிருக்கணுமே..."

"சேச்சே! உங்க சி.ஆர்ல பழுதே இல்லை." சிகரெட்டை அவசரமாக அணைத்தார்.

"அவங்க மூணு பேரையும் மாத்தப் போறேன், ஒருத்தனை கல்கத்தாவுக்கு. ஒருத்தனை பால்காட்டுக்கு. அந்த லேடி பேர் என்ன?"

"ஊர்மிளா."

"ஊர்மிளாவை எங்க தெரியுமா, ஒரிஸ்ஸா!" என்று நமுட்டலாகச் சிரித்தார்.

"அப்படியா!"

"ப்ரமோஷன் கொடுத்தா உங்களை ட்ரான்ஸ்ஃபர் பண்ண வேண்டி வரும். நீங்க இந்த ஆபீசுக்கு ரொம்ப முக்கியம். அதனால தான் உங்களை ப்ரமோஷன் கொடுக்காம இந்த ஆபீஸ்ல வேக்கன்ஸி வர்ற வரைக்கும், செப்டம்பர்ல திருவேங்கடம் ரிட்டயர் ஆறார், அப்ப உங்களை கன்ஸிடர் பண்ணப் போறோம். வேற ஒரு காரணமும் இல்லை. நௌ ஆர் யு ஹாப்பி?" என்று அவர் கையைக் கேட்டுக் குலுக்கினார். பி.ஏ.வை இண்டர்காமில் கூப்பிட்டு, "சாம்பமூர்த்தியை வரச் சொல்லுப்பா" என்றார்.

சீனிவாசன், "தாங்க்யு ஸார். இப்பத்தான் நிம்மதி வந்தது" என்றான்.

"போய் உங்க வேலையைச் செய்யுங்க. ப்ரமோஷனை பத்தி கவலைப்படாதீங்க. நாங்க பாத்துக்கறோம். ஆஃப்டர் ஆல் என்ன கிடைக்கும்? இருநூத்தம்பது ரூபா?"

"இல்லை சார் ப்ரெஸ்டீஜ்னு ஒண்ணு இருக்கே."

"அதெல்லாம் உங்களுக்கு முக்கியமில்லைன்னு நினைச்சேன்."

"இல்லை சார். காலனில பேசிக்கிறாங்க. ஒய்ஃப்க்கு சங்கடமா..."

"பாருங்க பொண்டாட்டிகிட்ட இதெல்லாம் டிஸ்கஸ் பண்ணாதீங்க. காலனியிலிருந்து வேணா மாத்திப் போய்டுங்க. சிட்டில வீடு எடுத்துக்கங்க. எச்.ஆர்.ஏ. வாங்கிக்கங்க."

"தாங்க்ஸ் ஸார்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான். தலைமைச் செயலக வளாகத்தை விட்டு வெளிவந்து பதினெட்டுப் படிகளில் இறங்கும் போது சட்டென்று நின்றான். யோசித்தான். திரும்ப ஓரிரண்டு அடி மேலே



"தம்பி, அப்பா எங்கே?"

"உள்ளே இருக்கார்."

"காலையிலதானே பார்த்தேன், எப்ப அரெஸ்ட் பண்ணாங்க?"

"யோவ் பேஜார் பண்ணாதே, வீட்டுக்குள்ளே இருக்காருன்னு சொன்னேன்!"

–முஹம்மது ஷிப்லி

சென்றுவிட்டு மனம் மாறி இறங்கினான்.

பாகிரதி ஆவலுடன் காத்திருந்தாள்.

"என்ன சொன்னான்?" காப்பி ஆற்றுவதை நிறுத்திக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லைம்மா. காரணம் ரொம்ப சிம்பிள். எனக்கு இப்ப ப்ரமோஷன் கொடுத்தா மாத்த வேண்டி வருமாம். ஒரிஸ்ஸா பால்காட்னு."

"அதனால பரவால்லை கொடுங்கன்னு சொல்றதுதானே?"

"கேனத்தனமா பேசாதே. நான் இந்த ஆபீசுக்கு முக்கியமா வேணுமாம். அதனால் இந்த ஆபீஸ்லயே வேக்கன்ஸி வரவரைக்கும் ப்ரமோஷனை நிறுத்தி வெச்சிருக்காராம், அவ்வளவுதான் காரணம்."

"அவனும் சொல்றான்னு நீங்களும் நம்பிண்டு வந்திங்களே. ஏன் அவா நினைச்சா அந்த ஒரிஸ்ஸா வேக்கன்ஸியை இங்க மாத்திக்க முடியாதா? கேட்டுக்கங்க! இன்னிக்குச் சொல்றேன். அவா மூணு பேரும் மாத்தி போய்டுவான்னு நெனைச்சுண்டிருக்கேளா? நிச்சயமாக நடக்காது! எல்...லாரும் இங்கதான் இருப்பா. பாருங்கோ, அவனும் சொல்றான்னு நீங்களும் கேட்டுண்டு..."

சீனிவாசன் மிகுந்த கோபத்துடன், "அரைகுறையா, ரூல்ஸ் தெரியாம ஏதாவது உளறாதே!" என்று அவள் கொண்டு வந்த காப்பியைத் தட்டினார். அவள் முகத்தில் தெளித்தது.

"கோபால் சொன்னது சரிதான். பொண்டாட்டிகிட்ட இதெல்லாம் டிஸ்கஸ் பண்ணக் கூடாது. அது வாஸ்தவம்தான்!"

"ஏன்னா, அவ நிஜத்தை கட்டிக் காட்டுவா..." புடைவைத் தலைப்பால் முகத்தை - காப்பியையும் கண்ணீரையும் நிதானமாக துடைத்துக் கொண்டு, "எம்மேல மட்டும்தான் உங்களுக்குக் கோபம் வரும்" என்றாள்.

அரிசி விலை உயர்வு பற்றியே நினைத்து அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் தமிழர்கள் கொஞ்சம் வடக்கே பார்வையைச் செலுத்தினால் நிச்சயம் 'கூல்' ஆகிவிடலாம். கோதுமை விலை ராக்கெட்டில் ஏறிப் பயணம் செய்கிறது! கோதுமை விளைச்சல் ரொம்ப ரொம்ப பாதிக்கப்பட்டிருப்பது மிக மிக நன்றாகத் தெரிந்தும் (பதுக்கல்வாதிகள் பதுக்கிவிட்டார்கள் என்றும் சி.பி.எம்மின் குற்றச்சாட்டு) கௌடா அரசு 'கொர் கொர்' விட்டு, விலை உயர அனுமதித்ததற்கு என்ன காரணம் என்கிறீர்கள்? அரிசி விலை உயர்வால் காபரா அடைந்திருக்கும் தமிழர்கள் கோதுமை விலை உயர்வைக் கண்டேனும் கவலையை விட்டொழித்துக் களிப்படைய வேண்டும் என்ற பெருநோக்கில்தான்! அப்புறம் வடமாநிலத்தவரும் 'குய்யோ முறையோ' என்று அடித்துக் கொள்ளவே, போனால் போகட்டும் என்று கோதுமை இறக்குமதி செய்ய அரசு முற்பட்டது. கோடி கோடியாக வரிப்பணத்தைக் கொட்டிக் கொடுத்து இறக்குமதி செய்யப்பட்ட அந்தக் கோதுமை

செம்பியன்

இங்கே கப்பலேறி வந்து சேர்வதற்குள், அடுத்த கோதுமை அறுவடை நடந்து, விலைகளும் குறையத் தொடங்கினால் அதற்கு மத்திய அரசு எப்படி பொறுப்பாக முடியும்? மோசமான விளைச்சலால் ஏற்பட்ட ஏமாற்றத்தை விழுங்கி விட்டு, மனம் தளராமல் மறுபடி பயிர் செய்த சிக்கிய விவசாயிகள் தாம் பொறுப்பு ஏற்க வேண்டும். ஆக மொத்தத்தில் அரிசி விலை உயர்வு பற்றிய கவலை தீர்ந்ததோ இல்லையோ? அது போதாதா!

நமக்குள்ள கெட்ட பழக்கமே இது தான். கோயம்பேட்டில் புதிய காய்கறி மொத்த வியாபார அங்காடி உருவான பிறகும் காய்கறி விலை இப்படி உச்சாணிக் கிளைக்கு ஏறிக் கொண்டதே என்று 'லபோதிபோ' என்று அலுத்துக் கொள்வோமே தவிர, அண்மையில் தான் உயர்த்தப்பட்ட பெட்ரோல் விலை மேலும் உயராது என்று நம் தலை மேல் அடித்து பிரதமர் சத்தியம் செய்திருக்கிறாரே, அதை எண்ணி சந்தோஷப்பட மாட்டோம். நாளைக்கே இந்த வாக்குறுதியை மீறி ஒரு வேளை காரியம் நடந்தால்தான் என்ன? சர்வதேச எண்ணெய்க் குட்டைக் கணக்கு (புரியவில்லை எனில் தமிழ்க் குடிமகனைக்



கேட்கவும்) பனாசினாவை நிர்ப்பந்தித்தது என்று அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் தமிழனுக்கு இல்லையா என்ன?

மளிகை பில் போன மாதத்தை விட இந்த மாதம் ஐம்பது சதம் அதிகரித்து

விட்டதே என்று பெண்டாட்டியிடம் சண்டைக்குப் போகும் அசடுகள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் மத்திய அரசின் ஒரு மேதாவித்தனமான சலுகை காரணமாக தங்கத்தின் விலை குறைந்து வருவதை நினைத்துப் பார்ப்பதே இல்லை. 'தங்கத்தை சமைத்துச் சாப்பிட முடியுமா?' என்று விதண்டாவாதம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். சசி - ஜெக்கு போட்டியாக உங்கள் மனைவியின் மேனிக்கும் செட்டு செட்டாக நகைகள் செய்து கொடுத்தால் அவற்றை அணிந்து கொண்டு ஜொலிக்க மறுத்து விடுவாளா என்ன? அதைக் கற்பனைக் கண் கொண்டு பார்த்தாவது மகிழக் கற்றுக் கொள்ளுங்களேன்!

தமிழனுக்குப் பொழுது விடிந்தால் காப்பி பற்றிய கவலை வந்து விடும். காப்பிக் கொட்டை விலை ஏற்றத்தால் கடுப்பாகிப் போவதை விடுத்து ஒரு மாறுதலுக்காகவேனும் ஷேர்மார்க்கெட்டில் பங்குகளின் விலைகள் சரிவதை நினைத்து ஆனந்தப்படுங்களேன்! ஐ.மு. அரசும் அதன்

கேளுங்கள். ஆனால் அன்றைக்கு தாத்தாவுக்கு என்ன சம்பளம் என்பதை மட்டும் மறந்து போயும் கேட்டுத் தொலைத்து விடாதீர்கள்!

இன்னொரு பிரமாதமான யோசனையும் இருக்கிறது. அதுதான் பேரம் பேசுதல். கத்தரிக்காய், "கிலோ பதினாறு ரூபாய்" என்று கடைக்காரர் சொன்னால், "எட்டு ரூபாய்க்குத் தருகிறாயா" என்று கேளுங்கள். "உன் மச்சான் கடை வைச்சிருந்தா போய்க் கேளு" என்று அவன் சீறுவான். "மச்சான் கடை வைச்சிருந்தா மச்சு வீடு கட்டியிருப்போமே" என்று பதில் சொல்லிவிட்டு நகருங்கள். ஆனால் போய் விடாதீர்கள். அடுத்ததாக ஒரு அம்மணி காரில் வந்து இறங்குவார். அவரிடம் கிலோ பதினெட்டு ரூபாய்க்கு கத்தரிக்காய் விற்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருங்கள். திரும்பவும் போய் பதினாறு ரூபாய் ரேட்டில் கால் கிலோ வாங்கிக் கொண்டு புறப்படுங்கள். கத்திரிக்காய் விலையைக் கிலோ ரெண்டு

விலைவாசியை சமாளிக்க டக்கரான வழிகள்...


தொழில் - வர்த்தக - நிதி அமைச்சர்களும் எவ்வளவோ முயன்றும் பங்குகளின் விலை மட்டும் உயராமல் பாதாளத்துக்கே பாய்கிறதே, அது உங்களுடைய அதிர்ஷ்டம்தானே! அதை நினைத்தால் காப்பி கூட கழுநீராகக் கசந்து போய் விடாதோ? அப்புறம் அதன் விலை உயர்வு பற்றி நீங்கள் ஏன் கவலைப்படப் போகிறீர்கள்?

மேற்சொன்ன சூப்பரான யோசனைகளில் எதுவுமே உங்களுக்குப் பிடிக்கவில்லையா? அப்படியானால் அக்கம்பக்கத்திலுள்ள ஒரு தொண்ணூறு வயதுப் பாட்டியிடம் போய் அவள் பன்னிரண்டு வயதில் கல்யாணமாகி குடித்தனம் நடத்தியபோது விலைவாசிகள் எப்படி இருந்தன என்று கேளுங்கள்! காலணாவுக்குப் பூ வாங்க வேண்டாம் என்று சிக்கனம் பிடித்து, தம்பிடிக்கு முழம் பூ வாங்கி சூடிக் கொண்டதையெல்லாம் கதை கதையாகச் சொல்வாள். ஆனந்தமாகக்

ரூபாய் குறைத்து விட்ட திருப்தி உங்களுக்குக் கிடைக்கும்!

'அந்த அம்மா மட்டும் எப்படி என்ன விலையானாலும் கண்ணை மூடிக் கொண்டு வாங்குகிறார்?' என்று நீங்கள் யோசிக்க ஆரம்பித்தால் உங்கள் அறியாமைக்கு 'ஐயோ பாவம்' சொல்ல வேண்டியதுதான். அதெல்லாம் 'நெம்பர் டூ' அகவுண்ட் ஐயா! அப்படி நீங்களும் நோட்டுக்களை விட்டெறிந்து பொருள்களை வாங்க ஆசைப்பட்டால் 'கருணாநிதிக்கு பெப்பே, அவருடைய மிரட்டலுக்கும் பெப்பே' என்று துணிந்து உள்ளங்கையைச் சொறியலாம்!

இந்த யோசனைகளில் எதையுமே ஏற்க உங்களுக்கு இஷ்டமில்லை என்றால் கடைசி கடைசியாக ஒரு டாப் டக்கர் ஐடியா இருக்கிறது. எப்படியாவது தேர்தலில் நின்று ஜெயித்து தலைவரின் தயவில் மந்திரியாகி விடுங்கள். அப்புறம் விலைவாசி உயர்வு உங்களை பாதிக்கவே செய்யாது! ஏன், அந்த உணர்வே உங்களுக்கு ஏற்படாது! ஜாலிதான்!



குறை




மஹாலக்ஷ்மி, பகவானிடத்திலே நமக்காக சிபாரிசு செய்வதனாலே, அவள் சரணாரவிந்தத்தைப் பற்றி, அதன் மூலம் நாம் மஹா விஷ்ணுவைப் பற்ற வேண்டும்.

லக்ஷ்மி இல்லாமல் நாராயணன் இல்லை. இவர்களை ரொம்ப சூட்சுமமான 'இரட்டை' என்று சொல்லுகின்றன உயர்நூல்கள். ஆதியிலிருந்தே அப்படித்தான் இருந்து வருகிறது, லக்ஷ்மி நாராயண தத்துவம். ஆதலால், ஒன்றை இட்டே ஒன்றைச் சொல்ல வேண்டும். ஒன்றின் பெருமை ஒன்றின் இடத்திலே உள்ளது. லக்ஷ்மியின் பெருமை நாராயணனிடத்திலும் நாராயணனின் பெருமை லக்ஷ்மியினிடத்திலும் உள்ளது.

- இரண்டும் சேர்ந்திருக்கும்படியானதைத் தான் நாம் வரிக்க வேண்டும். ஸ்ரீ சூக்தம் இருக்கிறது. -லக்ஷ்மியைக் குறித்த சூக்தம்.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



37

யொன்றுமில்லை



ஆனால் அதில் உள்ள பிரார்த்தனை யாரிடத்திலே செய்யப்படுகிறது என்று பார்க்க வேண்டும்...

'ஹே ஜாதவேதா, மஹாவிஷ்ணு! உன்னுடைய தர்மபத்னியான மஹாலக்ஷ்மியை எப்போதும் என்னிடத்தில் இருக்கும்படியாக நீ பண்ணு...' ஸ்ரீ சூக்தம்தான் இது! பிரார்த்தனை மகாவிஷ்ணுவினிடத்தில் இருக்கிறது. அவளை நம்முடன் இருக்கப் பண்ண வேண்டுமானால் அவனுடைய அனுமதி வேண்டுமில்லையா...? அதனால்தான் ஜாதவேதா!

நன்றாக கவனிக்க வேண்டும். இவனுடைய பெருமையை அங்கே சொல்ல வேண்டும். அங்கே இருக்கிற பெருமையை இவனிடத்திலே சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் பெருமை கிடைக்கும் என்கிறார்கள்...

- இது ஏதோ அங்கே உள்ளதை இங்கே சொல்லி, இங்கே உள்ளதை அங்கே சொல்லி கலகம் விளைவிக்கிற விஷயமில்லை. ரொம்ப உத்தமமான நிலை.

இந்தப் பெருமையை அங்கேயும் அந்தப் பெருமையை இங்கேயும் எடுத்துச் சொன்னவர் யாரென்றால், ஆஞ்சநேயர். ஆசார்ய ஸ்தானத்தை வகிக்கிறார் இந்த ஆஞ்சநேயர்! ஏனென்றால், அந்த ஆஞ்சநேயரிடத்தில்தான் தூதயம் என்கிற தூது போகும் கலையைக் கற்றுக் கொண்டானாம் ராமன். அவ்வளவு உயர்ந்த முறையிலே, தூது போதல் என்பதை நடத்திக் காட்டினார் ஆஞ்சநேயர்!

ராமன் ஏன் ஆஞ்சநேயரிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு கேள்வி... அடுத்த அவதாரத்தில்– கிருஷ்ணாவதாரத்தில்– தூது போக வேண்டியிருந்ததனாலே... அதைக் கற்றானாம் பகவான்.

ஆஞ்சநேயரின் தூது பூரண பலனைக் கொடுத்தது. ஆனால் கிருஷ்ணனின் தூது பூரண பலனைக் கொடுக்கவில்லை! பகவான் காரியம் கூடத் தப்பிப் போகலாம்– ஆனால் ஆசார்யர்கள் பண்ணக் கூடிய காரியம் ஒரு நாளும் கெடாது... என்பதை இந்த இரண்டு இதிகாசங்களும் காட்டிக் கொடுக்கின்றன.

இவ்வாறு ஆஞ்சநேயரின் ஆசார்ய ஸ்தானத்திலே இருப்பதை சங்கல்ப்ப சூர்யம் என்கிற நூலில் ஸ்வாமி தேசிகன் அதி ஆச்சர்யமாக விளக்கிக் காட்டுகிறார்.

அப்படிப்பட்ட ஏற்றமுடைய ஆஞ்சநேயன், ராமனுடைய ஏற்றங்களையெல்லாம் சீதையிடம் எடுத்துச் சொன்னான்:

"ராமபிரானுக்குத் தூக்கமே வராது. எப்போதாவது ஒரு சமயம், அவனையுமறியாமல் அப்படி கண்ணை இழுக்கும்... உடனே விழித்துக் கொள்வான். என்ன சொல்லிக் கொண்டு எழுந்திருப்பான்...? 'சீதா சீதா' என்று அழைத்தபடியே எழுந்திருப்பான். அம்மா, எப்போதும் உங்களுடைய நினைவாகவே இருக்கிறான். அதைத் தவிர வேறொன்றுமில்லை..." என்று ராமனுடைய பெருமைகளை அங்கே போய்ச்

சொன்னான்.

சிதையினுடைய பெருமை மொத்தமும் இங்கே வந்து சொன்னான். அதனால் அவனுக்கு என்ன பலன்..? இப்படி உத்தம மான முறையில் இரண்டு பேர் மனத்தையும் சேர்த்து வைத்தானே... அந்த ஆஞ்சநேயனுக்குப் பெரிய வெகுமானம் கிடைத்தது. அப்படியே எம்பெருமான் ராமன் கட்டி அணைத்துக் கொண்டு ஆனந்த பாஷ்பத்தினாலே ஆஞ்சநேயனை மஞ்சனமாட்டிவிட்டான். உயர்ந்த ரீதியிலே அவனை அப்படியே குளிப்பாட்டி விட்டான். வேறு யாருக்கு இதைப் போன்ற இன்பம் கிடைக்கும்...?

கடைசியில் எல்லோரும் கிளம்பிப் போகும்போது, 'வைகுண்டத்துக்கு வருகிறாயா...?' என்று ராமன் ஆஞ்சநேயனிடம் கேட்டானாம்.

'அங்கே ராமாயண பிரவசனம் உண்டா?' என்று கேட்டாராம் ஆஞ்சநேயர்!

'அங்கே சுவாமியாக பகவான் உட்கார்ந்திருப்பான்– மஹாவிஷ்ணு– அதைத்தான் சேவிக்க வேண்டும்'என்றார்கள்.

அந்த எம்பெருமான் ராமனைத் தவிர மற்றொன்றை நினையாத, அந்த வடிவழகைத் தவிர மற்றொன்றைப் பார்க்காத உத்தமன் ஆஞ்சநேயன்!

இந்த இஷ்ட தெய்வ ஆராதனையின் மேன்மை குறித்து வேதமே சொல்கிறது.

ரொம்ப ரொம்ப பூர்வ பரம்பரையிலேயிருந்து வரக்கூடிய விக்ரஹ ஆராதனை ஒரு கிரஹத்திலே நடக்கிறது. பூஜை பண்ணுகிறார் ஒருத்தர். ஆனால் அங்கே ஏகமாய் தாரித்ரியம்! சொல்லத்தரமன்று அந்த ஏழைமை. ஒவ்வொரு நாளும் நடப்பதே ரொம்ப சிரமமாக இருக்கிறது.

ஒரு நாள் அந்த கிரஹத்துக்கு ஒருத்தர் வந்தார். "இந்த விக்ரஹம் உங்களுக்கு எதற்கு... இதை எடுத்து வீதியிலே போட்டுவிடும். இதைப் பூஜை பண்ணுவதால்தான் உங்களுக்கு தாரித்ரியம் வடியாமல் இருக்கிறது. நான் ஒரு விக்கிரகம் கொடுக்கிறேன். அதை வைத்துக் கொண்டு பூஜை பண்ணுங்கள்..." என்று பழைய விக்ரகங்களை தூர எடுத்து வைக்கச் சொல்லிவிட்டார். ஒரு புது விக்ரஹத்தையும் கொடுத்துவிட்டு புறப்பட்டுப் போய்விட்டார்!


புதிதாக வந்த மூர்த்தியை வைத்துக் கொண்டு பூஜை பண்ண ஆரம்பித்தார் அந்த கிரஹஸ்தர். இன்னும் தாரித்ரியம் அதிகமாய்ப் போய்விட்டதாம்!

'ஏன் அப்படி ஆயிற்று...?' என்று கதை கேட்கிற நமக்கு ஒரு சந்தேகம் உதிக்கிறது.


புதிதாக வந்திருக்கும் தெய்வம் ஒரு நல்ல பயனைக் கொடுக்கக் கூடாதோ...? அது கொடுக்க மாட்டேன் என்கிறது! ஏன் கொடுக்கவில்லை...?

'தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா என்று தலைமுறை தலைமுறையாக வந்த மூர்த்திக்கே இந்த கிரஹத்தில் கதியில்லை; தூக்கி தெருவிலே போட்டுவிட்டான்! நாளைக்கு நம்மையும் தூக்கிப்போடும்படி யாராவது சொன்னால், போட்டுத்தானே விடுவான்! ஆகையினால் இவனுக்கு ஸ்திரமான ஒரு பிரக்ஞை இல்லை– தன்னுடைய பாப விமோசனத்துக்காக சிரமப்படுகிறோம் என்கிற ஞானமில்லை. அதனால் தான் நம்முடைய சக்தியை இவன் அளவிடுகிறான். தெய்வத்துக்கு சக்தி இல்லை என்று அவன் நினைக்கலாமா...'– புதிய தெய்வம் இப்படி எண்ணமிட்டே முடிவுக்கு வந்ததாம்!

"ஒரே ஒரு சிகரெட்தான் தினமும் பிடிக்கணும்னு டாக்டர் ரொம்ப கண்டிப்பா சொல்லிட்டாரு!"



"யாரோ யோகாசன நிபுணரோட சிலையாம்! சிரசாசனம் செய்யறமாதிரி அமைச்சிருக்காங்களாம்...!"
– பாஸ்ரீ



ஹ்ருதயத்திலே ராமனைத் தவிர வேறு யாரையும் நினையாத ஆஞ்சநேயனுக்கு, ஏற்ற முடைய சிறந்த மஹாலக்ஷ்மியின் அனுக்கிரஹம் ஏற்பட்டது. அதே மாதிரி ராமனுடைய அனுக்கிரஹமும் ஏற்பட்டது.

ஆனால், ராமனையும் சீதையையும் பிரித்தவளான சூர்ப்பனகை, மூக்கறுபட்டு காதறுபட்டு பங்கப்பட்டுப் போனாள். ராவணனோ, ராமனை விட்டு சீதையைப் பற்றினான்; கிளையோடு மாண்டான்!

இரண்டு பேரையும் (ராமன்-சீதை) சேர்த்து வைத்து வணங்கினான் விபீஷணன். ராஜ்யத்தோடும் சகல போக்யத்தோடும் விளங்கினான்.

ஆகையால், ஒரு நாளும் இந்த தம்பதிகளை நாம் பிரிக்கக் கூடாது.

இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகிய சிங்கர் சொல்லுவார்:

நமக்கு ஆசார்யன், அவருக்கு ஆசார்யன் அவருக்கு ஆசார்யன் என்று இப்படி ஆசார்ய பரம்பரையை நாம் வகுத்துக் கொண்டே போனோமானால் லக்ஷ்மியோடு கூடிய நாராயணனின் திருவடிகளில் போய் அது முடியும். அவனைத்தான் நாம் பற்ற வேண்டும் என்கிற தர்மத்தை வால்மீகி ராமாயணம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இரட்டை என்றாலே ரொம்பவும் சிறப்பு வாய்ந்தது. மந்த்ரத்திலே கூட இரட்டை மந்த்ரம் என்று ஒன்று உண்டு. திவ்ய மந்த்ரம் என்று பெயர். வைகுண்டத்திலேயே அதை பகவான் உபதேசம் பண்ணினார்- மஹாலக்ஷ்மிக்கே உபதேசம் பண்ணினார்! மஹாலக்ஷ்மி அதை விஷ்வக்சேனருக்கு உபதேசம் பண்ணினார்.

விஷ்வக்சேனன்தான் பூலோகத்தில் நம்மாழ்வாராய்ப் பிறந்தார். அவர் திருவாய்மொழியிலே இந்த திவ்ய மந்த்ரத்தைப் பூரணமாய் விவரித்தார்.

ராமாயணம் மொத்தமும் திவ்ய விவரணம் தான். இது சீதையினுடைய சரித்திரம்- உயர்ந்த சரித்திரம் என்று வால்மீகி கொண்டாடியிருக்கிறார். அதிலே பகவானுக்குக் கூட கொஞ்சம் வருத்தம் என்று வேடிக்கையாய்ச் சொல்வார்கள்.

'மரமே கண்டாயா? மட்டையே கண்டாயா? ஹா சீதே! ஹே சீதே! என்று தேடி அலைந்தோமே- நாமல்லவா அலைந்தோம். இதை சீதை சரித்திரம் என்று வால்மீகி எழுதிவிட்டுப் போய்விட்டாரே! எதனால் இருக்கும்...?' என்று யோசனை பண்ணினானாம் பகவான்.

நாமும் யோசிப்போம்- அடுத்த வாரம் வரைக்கும்.

(தொடரும்)

அருள்வாக்கு

ஒரு பெரிய ராஜா இருந்தால், எல்லாரும் ராஜாவிடமே நேரில் போக முடியுமா? அந்த ராஜாவின் பரிபாலனத்திற்கு உட்பட்ட உத்தியோகஸ்தர்களிடம், குடிமக்கள் நெருங்கித் தங்களுக்கு வேண்டிய அநுகூலங்களைப் பெறுகிறார்கள். உத்தியோகஸ்தர் தாங்களாகச் செய்வதில்லை; அரசன் உத்தரவுப்படி ஜனங்களுக்கு அநுகூலம் செய்கிறார்கள். 'அரசன்தானே செய்கிறான்?' என்று அரசனிடத்தில் குடிமக்கள் நேராகப் போக முடியாது.



அப்படித்தான் நம் மதத்தில் சில வழக்கங்கள் இருக்கின்றன. பரமேசுவரன் மகாசக்ரவர்த்தி. ஜனங்கள் குடிமக்கள். வருணன், அக்கினி, வாயு போன்ற பல தேவதைகள்தாம் உத்தியோகஸ்தர்கள். இவர்கள் மூலமாக நாம் பல நன்மைகளை அடையவேண்டும். அதற்காகவே, தேவர்களுக்குச் சக்தி அளிக்க யாகம் பண்ணுகிறோம். அக்னி முகமாக நாம் கொடுக்கிற ஹவிஸ்கள் தேவர்களுக்குச் சேர்ந்து ஆஹாரமாகின்றன.

அக்நிமுகா: தேவா:

'நம்முடையது அன்று' என்று நாம் கொடுக்கிற பொருள்கள் தேவதைகளுக்குப் போய்ச் சேருகின்றன. அக்கினியில் போடுவதுதான் நம்முடையது இல்லை என்று எரிந்து போகும். போடும்போது 'ந மம' என்று சொல்லிப் போடுகிறோம். 'ந மம' என்றால், என்னுடையது அல்ல என்று அர்த்தம். தேவர்களுக்கு ஆகாரம் போய்ச் சேருகிற வழிதான் அக்னி.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சென்ற இதழ் கவர்ஸ்டோரியை ஒருதரம் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ம.வே. சிவகுமார் சொன்ன சம்பவத்தை கிருத்திகா எப்படி கதையாக மாற்றியிருக்கிறார்? அந்த கிளைமாக்ஸில் அப்படி என்னதான் இருக்கிறது விசேஷம்?

கதையைப் படியுங்கள், புரியும்.

ஐ ஸ்பை

கிருத்திகா

மண்டபத்தின் வாசலில் பழைய ஸ்டாண்டர்ட் காருக்கு அவசரமாய் பூச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். டிரைவரிடம் பெரிய மாமா கோவிலுக்கு வழி சொன்னார். நல்ல அருமையான கல்யாண மண்டபம். மாப்பிள்ளை அழைக்கிற கோவில், அருகில் இல்லை என்பதுதான் இந்த மண்டபத்தின் ஒரே குறை. சரசரக்கும் பட்டுப் புடைவைகளில் பெண்களிடையே அறிவிக்கப்படாத அழகிப் போட்டி சற்று முன் தொடங்கியது. தனியே பிரம்பு நாற்காலியில் கிரிதரன் உட்கார்ந்திருந்தான். அவன் கண்கள் மட்டும் ஷைலஜா நகர்கிற இடங்களில் நகர்ந்து கொண்டிருந்தன. தொலைவில் ஷைலஜா சட்டென்று திரும்பி கிரிதரனை ஒருதரம் பார்த்தாள். நாற்காலியில் கிரிதரன் மனத்தில் நாதஸ்வரம் பலக்க ஒலித்தது.

எப்போதுமே ஷைலஜா ஒரு 'Enthu' கேரக்டர் (Enthusiastic) என்பதன் சுருக்கம். துறுதுறுப்பு என்பது சரியான தமிழ் வார்த்தையாய் இருக்கலாம். வித்தியாசமானவள். எல்லோரையும் போல் இல்லாமல் சௌகரியமாய் சுரிதாரில் துள்ளிக் கொண்டிருந்தாள். கிரிதரன் மனத்தில் சிறு வயதிலிருந்தே அவளின் நடனம் ஆரம்பித்து விட்டது. ஒரே தெருவில் எதிர் எதிர் வீடுகளில் இருவரும் வளர்ந்தார்கள். எதிர் வீட்டில் கீற்றுக் போட்ட மொட்டை மாடியில் தெருவின் எல்லா குழந்தைகளும் ஐ ஸ்பை (கண்ணாமூச்சி) விளையாடுவார்கள். முதல் கட்டமாய் கீற்றுக் கொட்டகை இருட்டாக்கப்படும். புகைக் கூண்டு, அழுக்குக் கூடை கட்டில், பீரோ என்று யதார்த்தமான மறைவுகளில் ஒளிந்து கொள்ளலாம்.

எப்போதும் கிரிதரனும், ஷைலஜாவும் சேர்ந்தே ஒளிந்து கொள்வார்கள். யாரும் கண்டுபிடிக்கக் கூடாதென்று ஒளிந்து கொள்ள புதிய இடங்களை கிரிதரன் யோசித்துத் தேர்ந்தெடுப்பான். அடுக்கிய மெத்தைகளின் மறைவில் மெத்தையோடு மெத்தையாய் போர்வைக்கடியில் இருட்டில் கிரிதரனைப் பார்த்து ஷைலஜா சிரிப்பாள். கிட்டத்தில் அவள் கண்களின் பளபளப்பில் கிரிதரன் கிரங்கிப் போவான். ஷைலஜாவின் அப்பா ஒருமுறை விளையாட்டாய் 'மாப்பிள்ளை' என்று அவனை அழைத்து விட்டார். அதிலிருந்து அவன் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. புத்தகத்தைப் பிரித்தால் அதில் ஷைலஜா சிரித்தாள். அவளுடைய கர்சீப், உடைந்த கண்ணாடி வளையல் துண்டு என்று ஒரு கலெக்ஷனே தேறி விட்டது. அவளுக்கும் அவன் வயதுதான். ஏழு வயதில் கிரிதரன் பிள்ளையாரை வேண்டிக் கொண்டான்.

"பிள்ளையாரப்பா, எனக்குப் படிப்பு முடிஞ்சு வேலை கிடைக்கிற வரைக்கும் ஷைலஜாவிற்கு கல்யாணம் நடக்கக் கூடாது." வேண்டுதல் பலித்தால் ஒரு தேங்காய் உடைப்பதாக கிரிதரன் வேண்டிக் கொண்டான். பாவம் பிள்ளையார். அந்த ஒரு தேங்காய்க்காக அவர் எத்தனை வருடங்கள் காத்திருக்க வேண்டும்?

"என்னடா வேணும்?

சாப்பாடு பரிமாறும் போது அம்மா கேட்டதற்கு கிரிதரன் ஒருதரம் 'ஷைலஜா என்று பதில் சொன்னான்.

நோட்டுப் புத்தகத்தில் ஸ்ரீராமஜெயம் போல ஷைலஜாவின் பெயரை அவன் எழுதியிருந்தது. ஆதாரபூர்வமாய் அவன் தம்பிக்குத் தெரிந்து போய் ரொம்ப வருடங்களுக்குக் கிரிதரனின் தம்பி அவனை பிளாக்மெயில் செய்திருக்கிறான்.

ஆனால் எல்லா சந்தோஷங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி போல ஷைலஜாவின் அப்பாவுக்கு அவர் அலுவலகத்தில் வெளிநாடு செல்ல திடீரென்று வாய்ப்பு கிடைத்தது. யாருமில்லாத எதிர் வீட்டு



மொட்டை மாடியில் கிரிதரன் அவளிடம் ஓவென்று அழுது விட்டான். ஷைலஜா அவனை மறக்க மாட்டேன் என்று காட் ப்ராமிஸாகச் சொன்னாள். பசுமையாய் கிரிதரனுக்கு ஞாபகம் இருக்கிறது. அவ்விடத்தில் எப்படி என்றுதான் தெரியவில்லை.

"புறப்படலியா?"

நாற்காலியில் கிரிதரன் திடுக்கிட்டு நிமிர்கிறான். அவனுடைய தில்கிராணி அருகாமையில் சிரிக்கிறாள். கல்யாணம் முடிந்து வேலை கிடைத்து விட்டது. நல்ல வேளையாய் இன்னும் ஷைலஜாவுக்குத் திருமணம் ஆகவில்லை.

"என்ன கிரி, உன் தம்பிக்குக் கல்யாணம். நீ இன்னும் கல்யாணம் பண்ணிக்காம அப்படியே இருக்கே. யாருக்காவது வெயிட பண்றியா?"

சட்டென்று கிரிதரனுக்கு வார்த்தைகள் வரவில்லை. பதிலுக்குக் காத்திருக்காமல் ஷைலஜா மேலும் தொடர்ந்தாள்.

"தெரியாமதான் கேக்கறேன். ஏன் கிரி... வேலைக்கெல்லாம் போறே– எனக்கு ஒரு ட்ரீட் கிடையாதா?"

"ஷைலஜா, உன்னிடம் எனக்கே கொஞ்சம் தனியா பேசணும்."

கோவிலில் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் புறப்பட்டது. எல்லோருக்காகவும் கிரிதரனும், ஷைலஜாவும் கொஞ்ச தூரம் ஊர்வலத்தின் கூடவே நடந்து யாரும் கவனிக்காத போது திருப்பத்தில் வேறு தெருவில் இணைந்து நடந்தார்கள். ஷைலஜா தன் வெளிநாட்டுப் பழக்கத்தில் ஆங்கிலம் அதிகம் கலந்து சம்பிரதாய விசாரணைகளில் இருந்தாள்.

அட ஷைலூ... கிட்டத்தில் கண்கள் பளபளக்க போர்வைக்கடியில் ஒன்றாய் ஒளிந்து ஐ ஸ்பை விளையாடின ஞாபகம் உனக்கு இருக்கிறதா?

"என்னவோ பேசணும்னு சொன்னியே?"

"கொஞ்சம் இரு. ஆட்டோ."

கிரிதரன் ஆவேசமாய் கை தட்டியும் ஆட்டோ நிற்கவில்லை. இத்தனை நேர சம்பிரம் குறைந்து சட்டென்று கணநேரம் கிரிதரனுக்கு அசடு தட்டியது. அங்கேயே கொஞ்ச நேரம் நின்றார்கள். மவுண்ட்ரோடில் அதிகம் கும்பலில்லாத ஹோட்டலுக்குப் போவதாய்த் திட்டம்.

"நான் ட்ரை பண்ணட்டுமா?"

சற்றும் எதிர்பாராதவண்ணம் தெருவில் இறங்கி ஷைலஜா கையின் கட்டை விரலை உயர்த்தினாள். தெருவில் வேகம் குறைந்த கார் ஒன்று அவளருகில் உரசி நின்றது.

ஜாலி போட்டி - 22; முடிவு!

கிறிஸ்துமஸ் மரத்தில் ஒளிந்திருந்த பாடலின் முதல் வரி, 'எல்லாம் ஏசுவே, எனக்கெல்லாம் ஏசுவே!'

இதை எக்கச்சக்கமான வாசகர்கள் கண்டுபிடித்து எழுதியிருந்தாலும் அவர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.5000 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

என். கிருஷ்ணமூர்த்தி,
4/116, ஹவுசிங்போர்டு காலனி,
விருதுநகர் - 626 001.

வாழ்த்துக்கள்!

அதிர்ச்சி தரும் போலீஸ் துறை!

யிர்களை மேய்ந்ததாக வேலிகள் மேல் வழக்கு! கொலை, கற்பழிப்பு, திருட்டு, அடிதடி, ஆதாரங்களை அழித்தல் என்று பல குற்றச்சாட்டுகளின் பேரில் 213 போலீஸ்காரர்களின் மீது வழக்கு; கேரளாவில்! இவர்களில் 180 பேர் இன்னும் ஹாய்யாக வேலை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது அதிர்ச்சி தரும் விஷயம்! இவர்களில் ஆறுபேர் இன்ஸ்பெக்டர்கள்; 12 பேர் சப்இன்ஸ்பெக்டர்கள்; 5 பேர் உதவி சப்இன்ஸ்பெக்டர்கள்; 18 பேர் ஹெட்கான்ஸ்டபிள்கள்; 135 பேர் கான்ஸ்டபிள்கள், நான்கு பேர் போலீஸ் வேன் டிரைவர்கள்!

திருவனந்தபுரத்திலிருந்து:
எஸ்.எஸ்.மணி

"எந்த ஹோட்டல்?"

திறந்த முன் சீட்டுக் கதவில் திரும்பி கிரிதரனிடம் கேட்டாள். கம்மிய குரலில் பெயர் சொல்லி கிரிதரன் பின்சீட்டில் தயக்கத்துடன் ஏறிக் கொண்டான். ஜன்னல் காற்று முகத்தில் வீசியது. கார் இளைஞன் முன்சீட்டில் ஷைலஜாவிடம் சிரித்துக் கொண்டே ஏதோ கேட்கிறான். பதிலுக்குச் சிரித்து அவளும் பேச்சைத் தொடர்கிறாள். கிரிதரனுக்கு பேயறைந்த மாதிரி இருக்கிறது. பாவம், அவன் சரியான மெட்ராஸ்வாலா. எத்தனையோ வருடங்களாக அவன் செல்லமாய் வளர்த்த அவனுடைய மானசிக மனைவி ஒருபோதும் கண்டவன் காரையெல்லாம் கட்டை விரல் நீட்டி நிறுத்த மாட்டாள்.

மவுண்ட்ரோடு நியான் சைன் அணைந்து எரிகிறது. சிக்னலில் இளம்பி கார் ஹோட்டல் முன்நிற்கிறது.

"தாங்க்யூ."

சிரித்துக் கொண்டே கைகுலுக்கி விடைபெறுகிறார்கள்.

"போகலாமா?"

துள்ளல் நடையில் ஹோட்டல் வருகிறது. வெளிநாட்டில் இதுபோல் அவள் எத்தனை பார்த்திருப்பாள்? கிரிதரன் வாயடைத்து ஒரு ரோபோ போல் அவள் பின்னால் நடக்கிறான்.

"நிறைய காசு இருக்குல்லே?"

மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பளபளக்கிற அந்தக் கண்கள் மெனுகார்டின் வெவ்வேறு அயிட்டங்களில் தாவுகிறது. மூலையில் வெல்வெட் இழைகிறது. பழைய ஞாபகங்கள் போல் ஆர்டர்கள். ஒவ்வொன்றாய் டேபிளில் நிறைகின்றன. வேஃபர் செருகிய ஐஸ்கிரீம் கடைசியில் வருகிறது. ஆழ்ந்த சிவப்பு நிற செர்ரி பழத்துக்கும், அவள் உதடுகளுக்கும் கொஞ்ச நேரம் வித்தியாசமே தெரியவில்லை. கிரிதரன் சுய இரக்கத்தோடு அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"சாப்பிடலே?"

"நீ சாப்பிடு."

குரல் கரகரத்து பதில் வந்தது.

தம்ளரில் விசிறி போல் அடுக்கிய பேப்பர் நாப்கின் ஒன்றை எடுத்து ஷைலஜா மேலுதட்டைத் துடைத்துக் கொண்டாள். மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அவள் ஐஸ்பை கண்களையே ரொம்ப நேரம் கிரிதரன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னவோ பேசணும்னு சொன்னியே?" என்றாள் ஷைலஜா.

"ப்ச்... ஒண்ணுமில்லே" என்றான கிரிதரன்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்!

✉ இந்தியக் கிரிக்கெட் பெருமை
எரியவே வந்த போகி;
விந்தையாய்ப் பொங்கல்பானை
விலைவாசிப் பூதம்பொங்க
முந்தியே மோதும் தேர்தல்
மிரட்டுமாம் கட்சிக்காளை;
விந்தையாம் நிலையே இன்று
விளக்கவே கார்ட்டூன் மூன்று!

சென்னை - 14, அய்யாறு வாசுதேவன்.

✉ தங்களது ஆட்சிக் காலத்தில் ஒழுங்காக நிறைவேற்றப்பட்ட அரசு திட்டங்களுக்கோ, மக்கள் நலப்பணிக்கோ, அவற்றை நிறைவேற்ற வேண்டியது தங்களது கடமை என்பதை உணராமல், அதனை தங்களது சாதனையாக பிரகடனப்படுத்திக் கொள்ளும் அரசியல் வாதிகள், தங்கள் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த முறைகேடுகளுக்கு மட்டும் தங்களுக்குத் 'தெரியாது' என பதிலளிப்பது, மக்களை முட்டாளாக்கும் முயற்சியே. இதனை, தெளிவாகத் தெரிவித்தது தலையங்கம்.

கள்ளிப்பாடி, கே. ஸ்டாலின்.

✉ பெங்களூர் ஸ்பாஸ்டிக் சொஸைடிக்குத் தருவதாக பகிரங்கமாய் அறிவித்த நன்கொடை அறுபது லட்ச ரூபாயைத் தராமல் "ராவ் பாணியில்" மௌனம் காத்து இழுத்தடிக்கும் அமிதாப்பச்சன், அவரது ரசிகர்களின் மதிப்பில் 'கிடு..கிடு' என்று சரிந்து வருகிறார். வாக்குறுதி தருவதென்பது அதை மீறுவதற்குத்தானா? விஷயத்தை ஃபோகஸ் செய்த கல்கி பாராட்டிற்குரியது.

மதுரை - 14, எஸ். வைத்தியநாதன்.

✉ தங்களுக்கு இருக்கும் அரைகுறை செல்வாக்கை வைத்துக் கொண்டே தலைகால் புரியாமல் ஆடும் சில இளைஞர்களுக்கு மத்தியில், பொறுமைசாலியாகவும் அடக்கத்துடனும் நடந்து கொள்ளும் மாணவர் "உதயநிதி" பாராட்டுக்குரியவர். வெல்டன் உதயநிதி, கீப் இட் அப்!

தாராபடவேடு, தணிகைமுருகன்.

✉ கல்கி 5.1.97 இதழில் ச. முத்துக்குமரன் கடிதம் பார்த்தேன். ஜூலை 1989-ல் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் கல்லூரி ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட ஓர் ஆற்றுப்படுத்தும் பயிற்சியின் நிறைவு விழாவில் அப்போதைய துணைவேந்தரான முத்துக்குமரன் கலந்து கொண்டு ஆங்கிலத்தில்தான் பேசினார். அவரது பேச்சில், "இங்கு பேசிய எல்லா ஆசிரியர்களுமே தமிழில்தான் பேசினார்கள். குறிப்பாக அரசு கல்லூரி ஆசிரியர்கள் தமிழில் மட்டுமே பேசினார்கள். இவர்கள் ஏன் ஆங்கிலத்தில் பேச முன்வருவதில்லை அல்லது பயப்படுகிறார்கள்?" என்று நையாண்டித்தனமாக சிரித்தபடியே எல்லோரது மனமும் புண்படும்படி குறிப்பிட்டது என்றைக்கும் என் மனதை விட்டு அகலாது. ஒரு நிறைவு விழா மேடையில் தமிழில் பேசுவதை இழிவாகக் கருதும் அளவுக்கு ஆங்கிலத்தின் மீது அலாதிப் பிரியம் கொண்ட பெரியவர், திடீரென்று ஞானோதயம் பெற்று, தமிழ் மீது பயங்கரப் பாசம் கொண்டு பேசுவது (யாரையோ குளிப்பாட்டி) தம் இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளத்தானோ என்ற நியாயமான ஐயத்தைத் தோற்றுவிக்கிறது.

திருச்சி - 20, ரா.கோ.

✉ கர்நாடக சங்கீதக் காற்றையே உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் செம்மங்குடி, ஜெயஸ்ரீ, பட்டம்மாள் போன்றவர்களைப் பற்றி, 'பாடும் புகைப் படங்கள்' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டதற்கு என் நன்றி!

நாகூர், எ. காதர்.

வட்ட மேஜை

சரியான நேரத்தில் கொடுத்த சர்க்கரைப் பொங்கல்!

✉ தமிழர் திருநாளும் அதுவுமாக ஆறு புதிய பகுதிகளையும், மூன்று தொடர்களையும் (சுஜாதா, இந்திரா சௌந்தர்ராஜன், வி.கே. ராமசாமி எழுதுபவை) வெளியிட்டு எங்களுக்குச் சரியான நேரத்தில் சர்க்கரைப் பொங்கல் கொடுத்த உம்மை என்ன சொல்லிப் பாராட்டலாம்?

ஜெயங்கொண்டம், இராம. சேதுராமன்.

✉ ஜெ. ஜாமீனில் விடுதலை ஆன செய்தியை சன் டீ.வி.யில் அன்று மதியமே 'பிளாஷ் நியூஸ்' ஆக ஒளிபரப்புச் செய்து விட்டனர்.

வேலூர் - 1, ஷங்கரிஸ்.

✉ சுஜாதாவின் "இசை விழா" படித்தேன். அமெரிக்க வசதிகளுக்காக ஆசைப்பட்டுப் போய், டாலரை பறந்து பறந்து சம்பாதித்து, இரத்தத்தில் ஊறிப் போன இந்தியக் கலாசார எண்ணங்களையும் ஆசைகளையும் விட முடியாமல், அமெரிக்கக் கலாசாரத்தால் சந்ததிகளின் ஒழுக்கம் சரிந்து விடக்கூடாதே என வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு... அருமையான சித்திரிப்பு!

கீழ்நத்தம், முகதி. சுபா.

பெருமைமிக்க திருவையாறின் நிஜமுகம்!


அப்பர் பெருமாள், தம் தல யாத்திரையினிடையே தென் கைலாயம் என்றழைக்கப்படும் காளத்திக்கு வந்தபோது, ஒரு ஆசை அவரைப் பற்றிக் கொண்டதாம். எப்படியாவது வட கைலாயத்தைப் போய்ப் பார்த்துவிட வேண்டும் என்பதே அவ்வாசை! தள்ளாத வயதில் அவர் வைராக்கியத்துடன் புறப்பட, உடன் வந்த அடியார்களெல்லாம் சோர்ந்து போய் காசியிலேயே தங்கி விட்டார்களாம். அப்பர் மட்டும், எப்படியாவது கைலாச தரிசனம் செய்து விடுவது என்று, கால் தளர்ந்தாலும் மார்பினால் புரண்டு போய்ச் சேர முடிவு கொண்டாராம்.

பரமசிவன் பார்த்துக் கொண்டு சும்மாயிருப்பாரா...?

ஒரு முனிவர் உருவில் தோன்றி, ''உனக் கண்ணால் கைலாசத்தைப் பார்க்க முடியாது. திரும்பிப் போய்விடு'' என்று சொல்லிப் பார்த்தார். ஊஹூம்! அப்பர் கேட்பதாயில்லை! சிவன், தடுத்தாட் கொண்டார் அடியவரை.

ஒரு பொய்கையைக் காட்டி, அதில் மூழ்கி எழும்படி சொன்னார். அப்பரும் அப்படியே செய்ய, மூழ்கியவர் எழுந்தது எங்கே தெரியுமா...? தமிழகத்தின் தஞ்சை மாவட்டத்துத் திருவையாற்றிலுள்ள திருக்குளத்திலே!

அவ்விடத்தில் பரமன் அவருக்குக் கைலாசத்தைக் காட்டி அருள் செய்தார் என்பது புராணம். அந்தத் தலத்திலிருந்த அத்தனை உயிர்களையும் அப்பர் சக்தியும் சிவனுமாகவே கண்டநாகக் கதை.





* பஞ்சநதீஸ்வரர் உலா

இக் கதையை விவரிக்கும் பாஸ்கர தொண்டைமான், அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவருமே இத்தலத்துக்கு வந்ததையும் பாடியதையும் கூட குறிப்பிடுகிறார்.

'மாதர் பிறைக் கண்ணியானை...' என்று தொடங்கி, 'கண்டறியாதன கண்டேன்' என்று அதிசயித்தார் அப்பர்.

சம்பந்தரோ, 'வேதியாகி,



* ஆராதனைக்குத் தயாராகும் தியாகராஜர் சமாதி....

விண்ணாகி, மண்ணோடு எரிகாற்றுமாய், ஆதியாகி நின்றாலும் ஐயாறுடை ஐயனே' என்று போற்றுகிறார்.

சுந்தரர் தம் தோழர் சேரமான்பெருமாள் நாயனாருடன் இவ்வூர் வர, காவிரியில் வெள்ளம்!

'தங்கும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறுடைய அடிகளோ?' என்று உரிமையுடன் கூவி சிவனை அவர் அழைக்க, ஐயாறப்பன் ஆலயத்து விநாயகர் எதிர் ஓலமிட, காவிரி வழிவிட்டிருக்கிறது! (இன்று அவ் விநாயகர் ஓலமிட்ட விநாயகர் என்றழைக்கப்படுகிறார்!)

மாணிக்கவாசகரும் திருவையாற்றை விட்டு வைக்கவில்லை! இவ்வூர் கோவிலில் பூஜை செய்து வந்த ஆதி சைவர் ஒருவர் காசி யாத்திரை போயிருந்த போது, அவருடைய உறவினர்கள் அவரது உரிமைகளை அபகரிக்க முயன்றார்களாம். அப்போது சிவனே அந்த ஆதி சைவர் வடிவில் தோன்றி உரிமைகளுக்குப் போராட, அந்த நேரத்தில் காசி போனவரும் வந்து சேர, 'கூட்டு உடைபட்டதில்' சிவன் உண்மையை ஒப்புக் கொண்டு மாயமானாராம்! - இந்த வரலாற்றை மனத்தில் கொண்டே மாணிக்க வாசகர் 'ஐயாறதனில் சைவனாயினன்' என்று பாடியிருக்கிறார்.

இத்தனை பெருமைகள் போதாது என்று, திருவாரூரில் பிறந்த தியாக பிரம்மம் வேறு திருவையாற்றில் குடியேறி, தமது இஷ்டதெய்வமான ராமனை மட்டுமல்லாது, அங்கே கோயில் கொண்டிருக்கும் ஐயாறப்பனையும் தர்மசம்வர்த்தனியையும்



• தியாகராஜர் வாழ்ந்த திருமஞ்சன வீதி...



• சமாதியில் தியாகராஜர் திருஉருவம்



• தியாகராஜர் வாழ்ந்த வீடு...

கூட இசையால் ஆராதித்திருக்கிறார். ஐயாறப்பன் பேரில் நான்கு, அம்பாள் பேரில் எட்டு என்று ஒரு டஜன் கீர்த்தனைகள் அவர் மட்டும் பாடியவை!

இன்று 'திருவையாறு' என்று சொன்னதுமே, அனைவருக்கும் நினைவு வருவது தியாக பிரும்மமும் அவருக்கு ஆண்டுதோறும் அங்கே நடத்தப்படும் இசையஞ்சலியும்தான் என்கிற அளவுக்கு ஆகிவிட்டது. இவ்வாண்டு பகுள பஞ்சமி திதியில் (தை மாதம் பஞ்சமி திதி) இந்த தியாகராஜ ஆராதனை 150வது முறையாக நடைபெறவுள்ளது.

அப்பரையும், சுந்தரரையும், ஏன்... தியாகராஜரையும் கடந்து நாம் வெகுதூரம் வந்து விட்டோம். இந்நிலையில், பெருமைகளின் குவியலான ஒரு சிற்றூர் எப்படி இருக்கிறது...? நேரில் போய்ப் பார்க்கலாமே என்று புறப்பட்டோம்.

தஞ்சையிலிருந்து பதின்மூன்று கிலோ மீட்டர் தூரம்... வெண்ணாற்றையும் குடமுருட்டியையும் கடந்து பயணம் செய்த போது, வழியில் தென்பட்ட தென்னஞ்சோலைகளும், பச்சைப் பசேல் வயல்வெளிகளும், அவற்றின் மேல் யோசித்து யோசித்துப் படர்ந்த இளம் வெய்யிலும்... திருவையாறு ஓர் அழகான கிராம ஓவியமாக இருக்கும் என எதிர்பார்க்க வைத்தன.

ஊரை அடைந்தபோது, அது எல்லா இரண்டுங்கெட்டான் டவுன்களையும் போலத்தான்... டீக்கடைகளில் ரேடியோ, பஸ் ஸ்டாண்ட் அசுத்தம், சந்தடி, அவசரம், இரைச்சல், கனேபரம் என்று சராசரி 'நவீன'ங்களைத் தாங்கிக் கொண்டிருந்தது.

ஒருவேளை 150வது ஆராதனையையொட்டிய சுறுசுறுப்பான பணிகளால் இந்த நிலையா...?

'இல்லை... எப்போதுமே இப்படித்தான் இருக்கும்...' என்றனர் உள்ளூர்க்காரர்கள். மருந்துக்குக் கூட ஓரிடத்திலும் சங்கீதம் ஒலிக்கவில்லை... சற்று ஏமாற்றத்துடன் கோயில் தரிசனத்துக்குப் போனோம். சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஐயாறப்பன் தர்ம சம்வர்த்தனி ஆலயங்களைப் பார்க்க ஆறுதலாய் இருந்தது.

ஐயாறப்பர் என்கிற பஞ்சநதீசுவரர் கோயிலில் பஞ்சநதிகள் எவை என்று விளக்கினார் வேங்கடசுப்ரமண்ய சிவாசாரியார் : "சூர்ய ஒளியில் உண்டான நதி, சந்திரன் ஒளியில் உண்டான நதி, நந்திகேசுவரரின் வாய்நுரை நீர், பரமேசுவரனின் சடையிலிருந்து சிந்தும் கங்கை, அம்பாளின் ஸ்தன க்ஷீரம் என ஐந்தும் சேர்ந்தவை."

பிரும்மாண்டமான கோவில். நடக்க நடக்க, பிராகாரங்கள் விரிந்து கொண்டே போகின்றன. முக்தி மண்டபத்தில், நவக்கிரஹங்களுக்கு ஒன்பது ஒன்பதாக ஏற்றி வைக்கும் அகல் விளக்குகள் சுடர்விட்டு அடங்குகின்றன.

"காசிக்கு நிகரான முக்தி ஸ்தலம் இது! தியாகராஜர் இங்கேதான் 'நாத தனும் அனிசம்' முதலிய பல கீர்த்தனைகளை இயற்றினார்" என்கிறார் சிவாசார்யார்.

மணியோசை குலுங்க யானை வருகிறது. பின்னாலேயே ஐயாறப்பர், ரிஷப வாகனத்தில் வலம் வந்து பிரவேசிக்கிறார். யமனை சம்ஹாரம் செய்ததைக் (இதற்கும் ஒரு புராணம் இருக்கிறது) கொண்டாடும் 'மிதி பாதம்' என்னும் உத்ஸவம் நடக்கிறது.

அம்பாள் சந்நதியில் நிற்கும்போது, தியாகராஜருடன் முத்துஸ்வாமி தீக்ஷிதரும் நினைவுக்கு வருகிறார். 'தர்மஸம்வர்த்தனி' என்று கம்பீரமாக மத்யமாவதி ராகத்தில் அவர் இயற்றியிருக்கும் கீர்த்தனையின் நாயகியைக் கண்டு கரமும் மனமும் குவிகின்றன.

தியாகராஜரின் சமாதியை நோக்கி நடக்கையில், ஆராதனைக்காக வரவிருக்கும் குடியரசுத் தலைவர் முதலான வி.ஐ.பி.க்களுக்காக சாலைகள் செப்பனிடப்படுவதைப் பார்க்கிறோம். மண்டபத்துக்கருகே கார்களும் ஜீப்களுமாக அமர்க்களப்படுகின்றன. பிரும்மாண்டமான தென்னங்கீற்றுப் பந்தலுக்கு வேலை நடக்கிறது. இயற்கையான பழுப்பு நிறத்தில் கீற்றுகளை விட்டு வைக்காமல் வேலை மெனக்கெட்டு அவற்றுக்குப் பச்சையும் சிவப்புமாகப் பெயிண்ட் அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த 'வண்ணப் பூச்சு' பூசும் தொழிலாளிகளின் வியர்வை சொட்டும் தேகத்தை, உள்ளிருந்து விக்கிரக ரூபமாய்ப் பார்க்கும் தியாகராஜர்! தத்துவார்த்தமாக ஓர் அருமையான கீர்த்தனையைத் தூண்டிவிழுக்கக்கூடிய சூழல்!

ஒவ்வொரு மாதமும் பஞ்சமி திதியில் சமாதியில் இசை அஞ்சலி நிகழ்த்த ஏற்பாடாகியிருக்கிறது. சென்னை அல்லது வேறு ஊர்களிலிருந்து வித்வான்கள் வந்து கச்சேரி செய்கிறார்கள்.

தியாகராஜரின் சகோதரர் ஒருவருடைய பரம்பரையில் வந்த குடும்பத்தாரிடம் இந்த சமாதியில் நித்ய ஆராதனை செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தினமும் பூஜை செய்யும் ராஜு, இன்னமும் உஞ்ச விருத்தி (வீதி வீதியாகப் பாடியபடி போய் யாசகம் கேட்பது) மூலம் கிடைக்கும் அரிசியில் தான் நைவேத்யம் சமர்ப்பிக்கிறார்.

சமாதியை ஒட்டி வறண்ட காவிரி! ஆராதனையின்போது கல்லணையைத் திறந்துவிட்டு நீர் 'நிரப்பி' விடுவார்களாம்!

திருமஞ்சன வீதியில், அறுபது வருடங்கள் தியாகராஜர் வாழ்ந்த வீடு. உள்ளே – சின்னத் தாழ்வாரம், நீண்ட சதுர கூடம். நடுவே

தியாகராஜரின் விக்கிரகம். அவசர அவசரமாக வர்ணம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள் - மரச்சட்டங்கள், சுவர்கள் என்று ஒன்று விடாமல்!

இந்த இல்லத்தில்தானே ராமரும் சீதையும் லக்ஷ்மணனும் ஹனுமாரும் தியாகேசருக்குத் தரிசனம் தந்தார்கள்? இங்கே அல்லவா தியாகராஜர், ராமர் பட்டாபிஷேகம் நடத்தியபோது, முத்துஸ்வாமி தீக்ஷிதர் 'மாமவ பட்டாபிராம' பாடினார்...?

வெளியே வந்து, வீதிகளில் எங்காவது சங்கீதச் சுவடு தெரிகிறதா என்று மீண்டும் தேடுகிறோம்... ஏதாவதொரு வீட்டில் பழைய தம்பூரா...? சிப்ளா கட்டை... ஸரளி வரிசை, ஸரகுண பாலிம்ப...? ஏமாற்றமே மிஞ்சுகிறது!

பாரதி இளைஞர் சங்கம் பாரதியார் தினம் கொண்டாடிக் கொண்டிருப்பதைப் பார்க்க கொஞ்சம் ஆறுதலாய் இருக்கிறது.

ஆராதனை பற்றி உள்ளூர்க்காரர்களிடம் பேச்சுக் கொடுத்தால், 'வெறும் ஷோவாகி விட்டது; 'அம்மா கூட்டம்', என்றெல்லாம் சலித்துக் கொள்கிறார்கள். சுகன்யாவை அனுமதித்ததைக் குறித்து இன்னமும் புலம்புகிறார்கள்! உள்ளூர் வித்வானான கணேச அய்யர் தஞ்சாவூருக்குக் குடிபெயர்ந்து விட்டதைச் சொல்லுகிறார்கள்.


தஞ்சை திரும்பும் வழியில் பனிச்சென்று ஒரு சுவர் வாசகம் கண்ணில் படுகிறது கண்டியூர் அருகே :

திருவையாறில் பார்ப்பனீய ஆதிக்க உணர்வு எதிர்ப்பு தமிழிசை விழா - ஜனவரி 25-ஆம் தேதி!

- சாருகேசி

படங்கள் : **யோகா**

முட்டைகளை வீணாக்கலாமா?



கறிக்கோழிகளின் விலை குறைவு காரணமாக - கறிக்கோழிகள் வளர்க்கும் தொழில் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காகச் சமீபத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கோழி முட்டைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் அழித்தார்கள். இப்படி அழித்து வீணாக்குவதற்குப் பதில் ஏழைக் குழந்தைகளுக்கு அந்த முட்டைகளைத் தந்து புண்ணியம் கட்டிக் கொண்டிருக்கலாமே!

இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்டிருந்தார் சென்னையைச் சேர்ந்த நமது வாசகர் ஜோ. பன்னீர்செல்வம். இந்தக் கேள்வியை நபார்டு வங்கியின் துணைப் பொது மேலாளர் (டெக்னிகல்) டாக்டர் பி. சேதுராமனிடம் கேட்டோம்.

''கோழிகளில் இரண்டு வகை. ஒன்று 'லேயர்' என்ற முட்டைக் கோழி வகை. இரண்டாவது 'பிராய்லர்' என்கிற கறிக் கோழி வகை. லேயர் இனக் கோழிகளின் முட்டைகளும், பிராய்லர் இனக் கோழிகளின் இறைச்சியும்தான் மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்றன.


''லேயர் இனக் கோழிகள் சேவலின் துணையின்றிச் செயற்கை முறையில் முட்டையிடுவதால் அந்த முட்டைகளில் உயிர் கிடையாது. அதனால் அதிலிருந்து குஞ்சுகளைப் பெற முடியாது. இதைத்தான் நாம் வாங்கிச் சாப்பிடுகிறோம்.

''ஆனால் வீரிய முறையில் உருவாக்கப்பட்ட பிராய்லர் இனக் கோழிகளின் முட்டைகளிலிருந்து செயற்கை முறையில் அடைகாக்கப்பட்டுக் குஞ்சுகளைப் பெறுகிறோம். சில காலம் முட்டை இட்ட பிராய்லர் இனக்கோழிகளின் இறைச்சிதான் விற்பனைக்கு வருகின்றன! இவற்றின் முட்டைகள் குஞ்சு பொரிக்கும் தன்மையுடையதால் விற்பனைக்கு வராது.

''சமீபத்தில் கோழித் தீவன விலையுயர்வு மற்றும் தேவைக்கு அதிகமான பிராய்லர் இனக் கோழிகளின் உற்பத்தி ஆகியவற்றால் இந்தத் தொழிலே பாதிக்கப்படும் நிலை. இதைத் தவிர்க்க முடிவு செய்தனர். அதன் காரணமாகவே செயற்கை முறையில் அடைகாக்கப்பட்டுக் கொண்டிருந்த இந்த இனக் கோழி முட்டைகளை அழிக்க முடிவு செய்தனர்!

''அந்த முட்டைகள் பாதி அடைகாக்கப்பட்ட நிலையில் இருந்ததால் அதை எடுத்து ஆம்லெட் போட்டுச் சாப்பிட முடியாது. ஒன்று குஞ்சு பொரிக்க விடவேண்டும்; இல்லையேல் குப்பையில் போட வேண்டும். உற்பத்தியைத் தவிர்ப்பதற்காக இரண்டாவதைச் செய்தார்கள் அவர்கள்; அவ்வளவுதான்!''

சந்திப்பு : மௌலி



3 அதிக நீள அகலமில்லாத குச்சு வீடு அது. சிவப்பான அரை வட்ட நாட்டு ஓடுகளெல்லாம் கறுத்து பலமிழந்து விட்ட நிலையில், உத்திரம் கூட உளுத்துக் கிடக்கிறது.

இருந்தாலும் கயிற்றைக் கட்டி தூக்கு மாட்டிக் கொள்ள ஆயத்தப்பட்டபடி இருக்கும் பானுவை தாங்கிக் கொள்ளும் போல தெரிகிறது.

கதவை சாத்திக் கொண்டு தூக்கு மாட்டிக் கொண்டவள் என்ன காரணத்தாலோ ஜன்னலை மூடத் தவறி விட்டாள். அதிலும் ஆளுயர அந்தக் கால ஜன்னல் அது. அதனால் மோகன்ராமால் வீதியில் இருந்தே பார்க்கவும் முடிந்தது. பதறிப் போய் கதவை உதைத்துத் திறந்து, கிட்டத்தட்ட கழுத்து எலும்புகள் ஒடியும் நிலைக்குப் போனவளை ஓடிப் போய் தாங்கிப் பிடிக்கவும் முடிந்தது.

சப்தம் கேட்டு ஓடிவந்து நிற்பவர்கள் எல்லாம் கிழடு கட்டைகள். எதற்கோ வெளியே போயிருந்த மந்தாகிழவி கூட அடித்துப் பிடித்தபடி ஓடி வருகிறாள்.

"பாவி மகளே... பாவி மகளே என் தலையில நெருப்ப அள்ளி கொட்டத் தெரிஞ்சியே..." என்ற பிலாக்கணத்தோடு... நரம்பு புடைத்த அந்தக் கிழவியின் கரங்களில் அப்படி ஒரு நடுக்கம். அது மோகன்ராமின் கரத்தை தேடிப் பிடித்துக் கொண்டு நடுக்கம் நீக்கிப் பார்க்கிறது.

"மோகா.... தெய்வம் மாதிரி வந்தேப்பா, தெய்வம் மாதிரி வந்தே... இவளுக்கு நா ஒரு குறை கூட வைக்கலைப்பா - இவ இப்படி செஞ்சுக்கலாமா? நீயே கேளு..."


- மந்தாவின் தூண்டுதல் மோகன்ராமை அவள் பக்கம் திருப்புகிறது. அவளோ முழங்கால் மடித்து அதனுள் முகம் புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருக்கிறாள்.

"ஏன் பானு இப்படி நடந்துக்கிட்டே?" - அவன் மெலிதான குரலில் கேட்கிறான். அவளிடம் விசும்பலின் தொடர்ச்சி.

"கேக்கறேன்ல..."

- ஊஹூம் அவளிடம் பதிலில்லை. அவள் முகம் கூட இப்பொழுது மாறி விட்டிருக்கிறது. அவளிடம் மன்றாடி விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் விருப்பம் இல்லாத மாதிரி தெரிகிறது. "பாட்டி ஜாக்கிரதையா பார்த்துக்கோ... நான் அப்புறமா வரேன்" என்று ஈன சுரத்தில் சொல்லிவிட்டு திரும்பவும் வீதியில் இறங்குகிறான். திரும்ப வீடு நோக்கி நடக்கிறான். அவன் மனக்கண்ணில் அக்கான் பத்மாவதி தூக்கில்

இந்திரா சௌந்தர்ராஜன்



"கிழவியின் சோகப் புலம்பலில் கூட ஒரு வகை ரசனை இருக்கும். பேத்தி சாக ஆசைப்பட்டது தெரிந்து நொந்து போய்ப் புலம்புபவளின் பேச்சில் தான் எத்தனை பெரிய புதிர்? 'எங்கம்மா புடைவையை மடிக்க முடியாது; எங்கப்பா பணத்தை எண்ண முடியாது'ங்கற மாதிரி என்னைவிட்டு நீயும் போக முடியாதுடி. போக முடியாது!"

தொங்கிய அந்தக் காட்சியின் விரிவு இப்போது. எதை நினைக்கவோ பிடிக்காதோ அதை பானு தூண்டி விட்டுவிட்டாள்.

வீட்டுக்குள் நுழைபவனை மகாலட்சுமி ஆச்சரியமாய்ப் பார்க்கிறாள்.

"என்னடா கோபமா வெளியே போனே அதுக்குள்ளே வந்துட்டே...?" – கேள்வியோடு கொண்டை சுற்றிக் கொண்டிருக்கிறது அவள் கை.

அவனிடம் பதிலில்லை.

மூங்கில் பரணில் இருந்து ஒரு பாயை உருவி எடுக்கிறான்.

சாணி மெழுகிய தரைப் பரப்பில் விரிக்கிறான். அப்படியே சட்டையைக் கூட கழற்றாமல் சயனிக்கத் தொடங்குகிறான்.

கால் கழுவாமல், சட்டையைக் கழற்றாமல் பாயில் ஒருபோதும் படுத்திராத மோகன்ராமா இப்படி?

மல்லாக்கப் படுத்திருப்பவனின் பார்வை வீட்டுக் கூரையின் நடுவரந்தர உத்திரத்தின் மேலேயே இருக்கிறது. கருமருது மரக் கட்டை அது. பத்மாவதியை கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் புடைவைக் கயிற்றால் சுமந்து கொண்டிருந்த கட்டை அது– அதுவும் விடிந்தால் திருமணம் என்கிற நிலையில்! மோகன்ராமின் நினைவலைகளை கொழுக்

ஆசை நெசவு

கொம்பில் பிடித்துக் கட்ட முடியவில்லை. அது அக்கா அக்கா என்று அறுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்து விட்டது. அதிலும் பின்னோக்கி...

பத்மாவதி நல்ல சிவப்பு!

மைதாவை உருட்டிப் பிசைந்து துளி குங்குமப் பூவை தூவிக் கலந்தால் வருமே ஒரு வகை நிறம்? அதுபோலவும் என்று சொல்ல லாம்.

மரவள்ளிக் கிழங்கும், சேப்பங்களியும்தான் பிரதான உணவென்றாலும் யோகாசனம் போன்ற நெசவுப் பணியால் நல்ல திடகாத்திர சித்தம், அவளது ஏழைமையை மீறி அந்த கும்பகோணத்து மாப்பிள்ளையை மிகவும் கவர்ந்து விட்டது.

மாப்பிள்ளை நல்ல காசுக்கார ஆசாமி. பட்டு சொஸைட்டிக்கெல்லாம் தலைவர் என்று கூட கேள்வி. ஆனாலும் நாற்பது வய தாகி விட்டது. முதல் தாரம் போய் விட்டதால் இது இரண்டாவதற்கான முயற்சி என்பதை யெல்லாம் பத்மாவதி பொருட்படுத்தவே யில்லை.

'கல்யாணம் என்ற ஒன்று தன் வரையில் நடப்பதே பெரும்பாடு' என்பது அவள் தீர் மானம்.

சரி என்று சொல்லி விட்டாள்.

சுருக்கிச் சுருக்கி செலவழித்தாலும் நாற்ப தாயிரம் தேவைப்பட்டது.

ஒரு தறி முதலாளியிடம் ஐந்து வருடத்துக்கு மாதம் ஒரு தறி அறுக்கும் கட்டாயத்துடன் மோகன்ராம் கூட ஒப்பந்தமெல்லாம் செய்து கொண்டு விட்டான்.

தன் முகூர்த்தப் பட்டைக் கூட பத்மாவதி தானே நெய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டாள். கடையில் வாங்குவதற்கு பாதிக்குப் பாதி மிச்சமாகும் என்பது மட்டுமல்ல... பார்த் துப் பார்த்து நெய்து கொள்ளலாம்.

நன்கு அழுத்தம் கொடுத்தும் நெய்யலாம்.

புட்டா, பேட் எல்லாம் விருப்பம் போல்... மயில்தோகை பார்டரிலிருந்து, கஜலக்ஷ்மி சொரூபம் வரை எதை வேண்டுமானாலும் பிடித்துப் போட்டுக் கொள்ளலாம்.

ஆசை ஆசையாக அங்குலம் அங்குலமாக வளர்ந்த அந்தத் தறிக்கு மகாலட்சுமியும், மோகன்ராமும் கூட நல்ல ஒத்தாசை செய் தனர்.

துளி அழுக்குப் பட்டு விடாமல் இன்டென் சிவ்கேரில் உள்ள ஒரு ஜீவனை பார்த்துக் கொள்கிற மாதிரி பார்த்துக் கொண்டார்கள்.

மகாலட்சுமி கெண்டை சுற்றிப் போடுவாள். மோகன்ராம் பிசிறு எடுத்து விடுவான். நெய் யாத வேளைகளில் மறக்காமல் பாலிதீன் தாளால் மூடி வைப்பான்.

ஆசை ஆசையாக நெய்த அந்தப் புடை வையைக் கூட உடுத்திக் கொண்டு மணவறை யில் உட்காரும் வேளை வந்து விட்டது.

முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பில் விரதம் நலுங்கு, கை பார்த்தல் என்று ஏக கலாட்டாக்கள்.

'ஓய் மாப்பிள்ளை...

நீர் இதுநாள் வரை சரியில்லை.

இனிதான் எங்கள் பெண்ணால் கடைத் தேறப் போகிறீர்.

எங்கள் பெண் யாராம்?

சாட்சாத் அந்த மகாலட்சுமி ஸ்வாமி.

இவளைப் பெண் கேட்டு ஒரு பட்டாளமே வந்தது.

ஆயினும் இந்த தேவதைக்கு உங்களைத் தான் பிடித்திருக்கிறது.

பார்த்து ஸ்வாமி...

இனி இவள்தான் உங்கள் சொர்க்க பூமி.

இவள்தான் உங்கள் மோட்சப் பாதை.

இவள்தான் எல்லாம்.

இனி பாரும் உங்கள் வாழ்க்கையை, பிடியுங் கள் இவளது பூக்கரத்தை...'

கை பார்த்தல் எனும் சடங்கில் இப்படி பெண் சார்பில் கித்தாப்பான பேச்செல்லாம் உண்டு. பெண்ணும் கூட அதையெல்லாம் கேட்டு, நாணிக்கோணி நெளிந்தபடி அந்தக் கரத்தை பிடித்துக் கொள்ள வேண்டும்.


பத்மாவதியும் பிடிக்கிறாள்!

அந்நிய ஆண் மகன் ஒருவனின் முதல் ஸ்பரிசம்.

கிட்டவே கிட்டாது என்று எண்ணிய ராஜ உணர்ச்சி.

மேடை என்றும் பாராமல் மாப்பிள்ளை

வித்தியாசமான பிரார்த்தனை!



உலக சமாதானத்துக்காக சர்வதேச மாநாடுகள், கூட்டங்கள் மட்டும்தான் நடத்தமுடியுமா? இதோ ஓர் அன்பர் வித்தியாசமான விரதத்தை மேற்கொண்ட சம்பவம்: உலக அமைதிக்காக பிரார்த்தனை செய்த குளித்தலை பக்தர் எஸ். நாகராஜன், அவ்வூருக்கருகேயிருக்கும் அய்யர்மலை ரத்தினகிரீஸ்வரர் கோயிலின் 1018 படிக்கட்டுகளில் உருண்டு உருண்டே ஏறியிருக்கிறார். இப்படி ஏறிச் சென்று தரிசித்ததுடன் பிரார்த்தனை முடிந்து விடவில்லை... உருண்டு உருண்டே இறங்கியும் வந்திருக்கிறார் நாகராஜன்! இத்தனைக்கும் அன்று கொட்டும் மழை!

– பிரசன்னா குமார்

பத்மாவதியின் காதோரமாகக் கேட்கிறான்.

"என்ன பிடிச்சிருக்குதானே?"

"ரொம்ப..."

"நிஜமா?"

"சத்யமா..."

"நான் ரொம்பக் கொடுத்து வெச்சவன்."

"நானும்தான்."

– இருவரின் குசுகுசுப்பு கூட்டத்தை குதூகலப்படுத்துகிறது.

"பாருடா... அதுக்குள்ள ஒட்டிக்கிறதை..."

"தாயே நாளைக்கு ராத்திரி கட்டாயமா பால் சொம்போட உள்ள விடுவோம்மா..."

"ச்சீ... போங்க பாவா..."

– பத்மாவதி அப்படிச் சிவந்து மோகன்ராம் பார்த்ததில்லை. அவளிடம் அப்படி ஒரு சந்தோஷத்தையும் பார்த்ததில்லை.

நாலு மணிக்கு விழிப்பு, வாசல் தெளிப்பு, கோலம், சமையல், கெண்டை சுற்றுதல், துணி துவைத்தல், தறிமேடையில் நெசவு நெய்தல், பின்பு பத்துப் பாத்திரம் தேய்த்தல், வீடு கூட்டல் என்றே வாழ்ந்து பழகிவிட்ட செக்கு மாட்டிடம் இப்போது குதூகலம் – கொண்டாட்டம்.

தனக்கொரு தனிவாழ்க்கை என்பதாலா?

இல்லை ஒவ்வொரு பெண்ணுக்கும் புருஷ சேர்க்கைதான் வாழ்வின் உண்மையான ஆரம்பமா?

எது? எது?

கண்ணில் நீர் திரையிட கேள்வியோடு பார்த்துக் கொண்டிருக்கிறான் மோகன்ராம்.

'அக்கா நீ இனி இங்க இருக்க மாட்டே. போயிடுவே...'

– நினைத்துப் பார்க்கக் கூட முடியாமல் தொண்டை கமற விம்முகிறது அவன் மனது.

மழையில் நனைகையில் தாவணி முந்தானையை குடையாகப் போர்த்தும் அந்த அன்பை...


பாடம் படிக்கையில் சுக்குக் காப்பி போட்டுத் தந்து, தலை நீவி விட்டு, 'நானிருக்கேன்' என்று ஆதரவாக அணைத்துக் கொள்ளும் அந்தப் பாதுகாப்பை...

கோயிலுக்குப் போகும்போதெல்லாம் எனக்கும் சேர்த்து வேண்டும் அந்தப் பாசத்தை...

சீட்டுப் போட்டு சேமித்த காசில் பேண்ட் சட்டை வாங்கித் தந்து போட்டுப் பார்த்து ரசித்த அந்த நெகிழ்ச்சியை....

மோகன்ராம் மனத்தில் அக்காவின் எண்ணங்கள் கொடி பிடிக்காத குறையாக ஊர்வலம் போக, வெளியில் பத்மாவதியும் மாப்பிள்ளையும் கூட ஜானவாச காரில்...

"ஜானவாச செலவு என்னது..." என்று ஏற்றுக் கொண்ட மோகன்ராமின் நெசவுத் தறியின் முதலாளி, காருக்கு முன்னால் நாதஸ்வரத்தை ரசித்தபடி அதோ...



"ஆமாம்! என் மனைவி துணிமணிகளை பாத்திரக்காரரிடம் போட்டு புது எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கியிருக்கிற விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

– பாஸு

ஊரே பார்க்கிறது. வியக்கிறது. பத்மாவதி அதிர்ஷ்டக்காரி என்கிறது.

'நல்ல பொண்ணுல்லியா, அதான் மனம் போல மாங்கல்யம்' என்று அவள் காதுபடவே பேசுகிறது.

ஊரே கண்பட்ட மாதிரி ஒரு ஊர்வலம்.

ஒருவழியாக முடிகிறது.

மாப்பிள்ளை தன் அறையில் மாலையைக் கழற்றிவிட்டு ஃபேன் காற்றில் மார்பைக் காட்டி வியர்வைக் கசகசப்புக்கு ஒரு வழி பார்க்கும்போது நெருங்குகிறது ஒரு கூட்டம்.

"என்ன மாப்பிள்ளை, ஒரு குறையுமில்லாம போய்க்கிட்டிருக்கற கல்யாணத்துல அந்தக் குறை இருக்கலாமா?" – ஒருவன் பீடிகையுடன் ஆரம்பிக்கிறான்.

"என்ன சீட்டாட்டமா?"

"அட அது இல்லீங்க... இது அதுக்கும் மேல..." – சொல்லி விட்டு ஒருவன் முழங்கையை உயர்த்திக் காட்டி பாட்டில் ஞாபகத்தை மூட்டுகிறான்.

"அட ஆமாம்.... நான் அப்பவே அதுக்கு ரூவா கொடுத்துட்டேனே. சரக்கு வரலியா இன்னும்...."

"எங்க... மணி இப்ப பன்னெண்டு – எந்தக் கடை இப்ப திறந்திருக்கும்?"

"ஏன் உங்களுக்கு சீமை சரக்கு குடிச்சாத்தானா? நம்ம மலைச்சரக்கை விடவா அது கிக்கு?"

"அதானே... என்ன மாப்ளை, அதை வாங்கிட்டு வந்துடவா... ஆட்சேபணையில்லையே...?"

"ஏதோ ஒண்ணு..."

"உங்க கும்பகோணத்துல எப்படி?"

"இந்தியாவுல எல்லா கோணத்துலயும் கிடைக்கற ஒரே சரக்குங்க அது. இங்க மலைன்னா அங்க ஆத்தங்கரை, அவ்வளவுதான் வித்தியாசம்."

உடனே எல்லோரும் கலகலவென சிரிக்க, ஒருவன் உற்சாகமாக ஓடுகிறான். சற்றைக்கெல்லாம் ஓர் ஐந்து லிட்டர் கேனில் துண்டு போட்டு மூடி எடுத்துக் கொண்டு திரும்பு

கிறான்.

மாமிசக் கறி முன் சிறகு விரிக்கும் கழுகுக் கூட்டம் போல எல்லோரும் வட்டம் கட்டி கேனை காலி செய்யத் தொடங்குகின்றனர்.

கேலியும் கிண்டலுமாக ஆரம்பித்த முதல் ரவுண்டில் ஒரு ஐந்து நிமிட அளவிற்குப் பிறகுதான் ஆரம்பித்தது அந்த விபரீதம்!

மாப்பிள்ளை அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருண்டு விழ, அதன்பின் ஒவ்வொருவராக அதே போல் விழ....

தூக்கக் கலக்கமாயிருந்த கல்யாணப் பந்தலே கதிகலங்கி விழித்துக் கொண்டது. அம்பு போல் சீறி வந்து நின்ற ஒவ்வொரு ஆட்டோவிலும் ஒவ்வொரு உடல்.

பெரிய ஆஸ்பத்திரிக்கே இந்த வருகையால் ஜுரம் காண ஆரம்பித்து விட்டது.

ஒருவரல்ல

இருவரல்ல

வரிசையாய் ஒன்பது பேர்...

டாக்டர்கள் முடிந்த மட்டும் போராடியும் எமன் விடுவதாக இல்லை.

குறிப்பாக மாப்பிள்ளையின் உயிரை அவர் பத்மாவதியின் கழுத்தில் எந்த முகூர்த்தத்தில் தாலி கட்ட வேண்டுமோ, அந்த முகூர்த்தத்திலேயே வந்து தனது பாசக் கயிற்றால் கட்டி அழைத்துக் கொண்டு போனான்.

'பாழாப் போன சாராயம்

நாசமாப் போன சாராயம்

எந்தப் பாவி கண்டுபிடிச்சான் இந்த விஷத்தை...'

– ஆஸ்பத்திரிக்கு வெளியே குமுறும் எரிமலையாக ஒரு சுவர் ஓரமாக அப்படியே முடங்கிக் கிடந்த மோகன்ராமை ஒருவர் தோளைத் தொட்டுத் திருப்புகிறார்.

"சீக்கிரமா வீட்டுக்குப் போ..."

"இங்க உடம்பை வாங்கணுமே..."

"நாங்க பாத்துக்கறோம் அங்க போய் ஒரு உடம்பை. வாங்கப் பாரு..."

"என்ன சொல்றீங்க..."

"போய்ப் பாருப்பா.... தெரியும்!"

ஓடினான் மோகன்ராம் வீடு நோக்கி...

பத்மாவதி தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள்....

கயிறாக அந்த நாகவல்லி பட்டுப் புடைவை!

புதிய புடைவை. கயிற்றை இறுக்கி அறுத்து ரத்தம் ஓடவிட்டு... அந்த ரத்தம் கூட உறைந்து, காய்ந்து போய்!

தொங்கும் சடலத்துக்குக் கீழே கால்மாட்டில் ஒரு கடிதம்.

'தம்பி...

ஊரறிய ஒருவரோடு உட்கார்ந்து வலம் வந்து விட்டு, இனி அவரில்லை என்ற நிலையில் நானும் வாழ விரும்பவில்லை. நம் அப்பாவை எந்தச் சாராயம் கூட்டிச் சென்றதோ அதே சாராயம் இப்போது என்னையும் கூட்டிச் சென்று விட்டது.

நீயும் என் வழி வந்து விடாதே.

அந்தச் சனியனை விரட்டி அடி. நமது இனத்தின் பலவீனத்துக்கு நீயும் பலியாகி விடாதே. அந்த அரக்கனை விரட்டி அடி.

அப்போதுதான் மோகன் என் ஆத்மா அடங்கும். அக்கா உன்னுடன் ஆவி சொரூபமாய் எப்போதும் இருப்பேன்.'

அன்று பத்மாவதி எழுதிய கடிதம் இப்போதும் மோகன்ராம் மார்பின் மேல்! பார்வையோ அவள் தொங்கிய அந்த உத்தரத்தின் மேலேயே...

பானு அவன் மனநிலையையே தலைகீழாக மாற்றி விட்டாள். அது தெரியாமல் மகாலட்சுமி கேட்கிறாள்.

"அக்கா ஞாபகம் வந்துடிச்சா மோகன..."

– அவனிடம் பதிலில்லை.

"இப்படி இருந்தா எப்படிடா... ஏன் ஒருமாதிரி இருக்கே?"

– ஊஹூம், இதற்கும் பதிலில்லை.

"என்னப்பா நடந்துச்சு. ஏன் ஒருமாதிரி இருக்கே...?"

அடப்பமாக மௌனம் சாதிப்பவன் மூக்கில் இப்போது சாராய வாசம். பாம்பை அடித்துப் புரட்டிப் போடுவது போல் குடலைப் புரட்டும் அதே வாசம்... அன்று குடும்பத்தையே குப்புறத் தள்ளி குழியில் மூடிய வாசம். சிருட்டென்று எழுந்து வாசல்புறம் பார்க்கிறான். காளியப்பன் இரண்டாவது ரவுண்ட் சரக்குடன் போய்க் கொண்டிருந்தான்.

மோகன்ராமின் பார்வையில் நெருப்பெரிய ஆரம்பித்தது. பந்து போல் எம்பி எழுந்து உடனேயே வெளியே ஓட ஆரம்பித்தான்.

"டேய்ய்ய்ய்...!"

(தொடரும்)

அரசியல்வாதி: என்னங்க இது இன்ஸ்பெக்டர், வெள்ளித் தட்டில வெத்திலை பாக்கோட! கல்யாணப்பத்திரிகையா?''

இன்ஸ்பெக்டர்: இது குற்றப்பத்திரிகை. நீங்க அதையும் வெள்ளித்தட்டுல வச்சி தட்டோட வாங்கிப் பழக்கமாயிட்டீங்களேன்னு இந்த ஏற்பாடு!''

– அனிதா



"வெள்ளிக்குட்டி"

இன்று எப்படியாவது அந்தக் கதையை ரப்பாக எழுதி முடித்துவிட வேண்டும். அதற்கு லோசிக்குட்டி தூங்கியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தான் அவன்.

"அப்...ப்பா... ஆ...ப்பிள் ஜூஸ் வாங்கி வந்திங்களா..." லோசிதான் எதிரே வந்தாள்.

இவனுக்கு ஆர்வம் தடை பட்டது. இன்னும் தம்மை எழுத விடமாட்டாள். புத்தக அலமாரியைத் திறந்தால் போதும்! புக், பேனா எடுக்காமல் விடமாட்டாள்.

புத்தகங்களைக் கடை விரித்து பால் பாயிண்ட் பேனாவால் ஒரே கிறுக்கல்தான். அப்பா... இங்க பாரு குதுர போட்டிருக்கேன்... ஆட்டுக்குட்டி போட்டிருக்கேன்... கோழி போட்டிருக்கேன்... என்று எழுத்துத் தெரியாத அளவிற்கு கிறுக்கி வைப்பாள்.

இதுவரை இருபது பேனா நுனி உடைந்து கிடக்கிறது. இன்றும் அவளிடம் மல்லுக்கு நிற்க வேண்டி வரும்.

இவள் இப்படி எதிரே வந்ததற்கு வேறு நேரமாக இருந்தால்... "அடியே... என் தங்கம்" என்று தூக்கி முத்தம் கொடுத்து ஃப்ரூட்டி கவரில் ஸ்ட்ராவை சொருகி அவள் வாயில் வைத்துப் பருகும் அழகை ரசித்திருப்பான்.

இன்று அவளிடம் பேசி விளையாடுவதற்கு நேரமில்லை. அந்த இலக்கிய பத்திரிக்கையின் ஆசிரியர் மாவட்ட சிறப்பிதழுக்காகச் சிறுகதை கேட்டு கடிதம் எழுதியிருந்தார். இம்மாத இறுதிக்குள் அனுப்ப வேண்டும் என்று கடிதத்தில் அடிக்கோடிட்டு எழுதியிருந்தது. தபால் ஊழியர்கள் ஸ்டிரைக்கினால் கடிதம் தாமதமாகக் கிடைக்க... இன்னும் இரண்டு தினங்களுக்குள் பிரதி எடுத்து அனுப்ப வேண்டும்.

வழக்கமாக இவன் வண்டி வேலை முடிந்து செட்டில் நிறுத்திவிட்டு, வீட்டுக்கு வர இரவு பத்து மணியாகிவிடும்.

லோசி விழித்திருக்கும் நேரத்தில் வீட்டுக்கு வரலாம் என்றால் அவனுக்கு நேரம் கிடைக்காது. அவன் காலை எழுந்து இயந்திரமயமாய்க் கிளம்பி ஏழுமணி பஸ்ஸை பிடிக்க ஓடும்போது தூங்கிக் கொண்டிருப்பாள். இரவு பத்து மணிக்கு அவன் வீடு திரும்பும் போதும் அவள் தூங்கி கொண்டிருப்பாள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் வெளி வேலை இல்லாமல் இருந்தால்... அவனுடன் பேசி... விளையாடுவதுடன் சரி...

"ஏய்... தனம் என்னது, மணி பத்தாவது... இன்னும் புள்ளய தூங்கப் பண்ணாம...?"

"ம்... நா, என்ன பண்ண? எங்கப்பா ஜூஸ் வாங்கி வரும்... உனக்குத் தரமாட்டேன்னு பலுப்பு காமிச்சுக்கிட்டுருக்கா...?"

"ஆமாம்... போ! நேத்தி மாதிரி இன்னைக்கும் எழுதினாப் போலதான்..."

"யப்பா... குடுப்பா ஆ...ப்பிள் ஜூஸ்."

அவன் பேக்கை திறந்து எடுப்பதற்குள் அவள் இழுத்து அதில் உள்ள ஃப்ரூட்டியை எடுத்துக் கீழே வைத்து விட்டு ஸ்ட்ராவை தேடினாள்.

"யப்பா... இன்னிக்கி, நா... குதுர பாத்தேன்."

"எப்பம்மா..?"

"காலலப்பா.."

"எந்தினி குதுரம்மா?"

"ரெண்டு குதுரப்பா... டக்கு, டக்குன்னு ஓடுதுப்பா..."

"நாளைக்கி எனக்குக் காமிப்பியா..?"

"....."

"அப்பா... நம்ம ஆடு... மூணு குட்டி போட்டிருக்குப்பா..."

"எங்கம்மா...?"

"வா...! காமிக்கிறேன்." –வாசலை நோக்கி ஓடுகிறாள்.

"யப்பா... அரிசாந்தி என்ன கில்லிட்டுப்பா... இங்க, இங்க"... என்று கன்னத்தைக் காண்பிக்கிறாள்.

"ஏய்.. வந்ததும், வராததுமா... நைய்... நைய்ன்னு பேசிக்கிட்டு..."

அவனுக்கு அவசரம். மணி பத்தரையாகியது. உடைமாற்றி, கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு பேனா, பைல் நோட்டுடன் பெஞ்சில் உட்கார்ந்தான்.

இன்னும் இரண்டு நாள். நாளை பிரதி எடுத்து அனுப்ப வேண்டும். வலுக்கட்டாயமாக நேரம் கிடைக்கும்போது... கதை எழுத உட்கார்ந்தால் அவனுக்கு எழுத வராது. கதை அனுபவ ரீதியாக உயிரோட்டமாய் அமைய வேண்டும்.

பத்திரிகை ஆசிரியரின் கடிதம் அவனுக்கு யோசிக்க நேரம் தரவில்லை. சமீபத்தில் கிராமத்தில் நடந்த இரண்டு சாதிக்காரர்களிடையே மோதிக் கொண்ட பிரச்னைக்கு இவனாகத் தீர்வு கண்டு அதை எழுத வேண்டும் என்ற ஆர்வத்துடன் இப்போது ஆரம்பிக்

கிறான்.

கீழே ஃப்ரூட்டியுடன் உட்கார்ந்திருந்தவள் இவன் பேனா, நோட்டுடன் உட்காருவதைப் பார்த்ததும்... "யப்பா.. நானும் எழுதணும் குடுப்பா..." என்று ஃப்ரூட்டியைக் கீழே போட்டு விட்டு பெஞ்சில் ஏறினாள்.

"ஏய்...மூட... கெடுக்குற பாரு..."

"எப்பா... நானும் எழுதணும்..."

"லோசி... கண்ணு, நல்ல புள்ளயாம். பேசாம ஃப்ரூட்டிய குடிச்சிட்டுத் தூங்குவியாம்..."

"போப்பா... நானும் எழுதணும்.."

"நாளைக்கி உனக்கு குதுர பொம்ப வாங்கி வாறேன்..."

-அவள் மசியவில்லை. அவன் கையில் உள்ள பேனாவைப் பிடுங்கி விட்டு, எழுதுவதற்கு பேப்பரை தூக்கினாள்.

அந்த பேனாவை அவளிடமே கொடுத்து விட்டு அவளை இறக்கி விட்டு... "நீ...கீழ உட்காந்து எழுதும்மா..."என்றான்.



"இல்லப்பா நா மேலதான் உக்காரணும்..!!

"சரி வா நீ எழுது..." என்று அவளைத் தூக்கி மேலே உட்காரவைத்து விட்டு இவன் கீழே உட்காந்து எழுதத் துவங்கினான்.

சுமார் பத்து நிமிஷம் போல் கிறுக்கி விட்டு... "யப்பா... யனக்கு இந்த பேனா எழுத மாட்டங்குது. அந்த பேனாதான் வேணும்..." என்று கையில் இருந்த பேனாவைத் தூக்கி எறிந்து விட்டு, மீண்டும் கீழே இறங்கினாள்.

இவனுக்கு எழுத்து தடைபட ஆத்திரம் பொங்கியது. "சனியனே! மணி பன்னிரண்டாவது இன்னும் தூங்காம, என்னையும் எழுத விடாம..." 'நச்'சென்று முதுகில் அடி விழுந்தது.

"அ...ம்மா..." என்று பெரும் குரலெடுத்து அழ ஆரம்பித்தாள் லோசி.

தூக்கத்தில் இருந்த தனம், "யா புள்ளய அடிச்சீங்க... உங்களுக்கு புள்ளய விட கத எழுதறதுதான் முக்கியமா போயிட்டு... உப்பு பொறாத கத..."

"நீயும் இப்ப அடி..."

"இந்த வேலதா... என்னுட்ட வேணாங்குறது..."

"அப்புறம் என்ன... மனுசன் எழுதணுமுங்கற வெறியில நா பறக்குறேன்... இவ ரெண்டு நாளா எழுதவுடாம... தெனமும் இதே வேளையா இருக்கு..."

"நீ... படும்மா... காலையில ஒனக்கு ரெண்டு பேனா வாங்கித் தாறேன்.." என்று லோசியை சமாதானம் செய்து அணைத்துத் தட்டிக் கொடுக்கிறான்.

இவன் மீண்டும் அந்த சம்பவத்தை நினைவுபடுத்தி எழுத... எழுத... ஒருவித அடித்தல் திருத்தலுடன் எழுதி முடிக்கவே மணி இரண்டானது.

திரும்பப் படித்தான். அவனுக்கு அதில் முழு நிறைவு இல்லை. நாளை திரும்பப் படித்து, சேர்க்க வேண்டியதைச் சேர்த்து, எடுக்க வேண்டியதை எடுத்து, அப்புறம் பிரதி எடுத்து அனுப்ப வேண்டும்.

"அப்பாடா..." என்று கையை உயரே தூக்கி சோம்பல் முறித்துக் கொண்டு, கொட்டாவி விட்டுக் கட்டிலுக்குப் போகும் போது தான்... லோசி கிறுக்கிக் கொண்டிருந்த அந்த பேப்பர் கண்ணில் பட்டது.

முழு வெள்ளைத் தாளில் அந்தக் கிறுக்கல், பல்வேறு தாளில் அந்த கிறுக்கல், பல்வேறு உருவங்களாய் இருந்தது. குதிரை உருவம் போலவும், காக்காய் உருவம் போலவும், கோழி உருவம் போலவும் கோடுகள் இழுத்து, கண், காது, வாய் என்று புள்ளி வைத்து நிரப்பி இருந்தான். உருவங்களின் இடையில் அ.ஆ.இ என்று எழுத்துக்கள் பல்வேறு கோணங்களாய் இருந் தாலும், எழுத்து முழுமையாக வராமல் பாதி படிந்த நிலையில் எழுதாமல் இருந்தது.

ஆனாலும் என்ன ஆச்சர்யம்! தன்னுடைய கதையில் காணமுடியாத முழுமையை குழந்தையின் படைப்பிலே அவனால் பார்க்க முடிந்தது.

அவன் மனசெல்லாம் மகிழ்ச்சி பொங்க... கீழே தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை சந்தோஷத்தோடு பார்த்தான்.

சத்திய சந்தன்

மூழ்காத ஷிப்!


கிரிக்கெட் வீரர் சரத் சொல்கிறார் :

என் நெருங்கிய நண்பர்கள் என்று கோகுல கிருஷ்ணன், ஷண்முகம், விஜய்சங்கர் ஆகியோரைக் கூட சொல்லலாம். என்றாலும் மாண்ட்போர்ட் பிரபரேடரி பள்ளியில் முதல் வகுப்பிலிருந்தே எனது நண்பனாகி, தமிழ்நாடு ரஞ்சிகோப்பை அணியின் கேப்டனாகத் தேர்வு செய்யப் பட்டுள்ள இன்றுவரை, தொடர்ந்து என் வகுப்புத் தோழனாக விளங்கும் ஜார்ஜ் ஜானைப் பற்றிச் சொல்வது அதிகப் பொருத்தமாக இருக்கும்.

ஆரம்பப் பள்ளி நாட்களில் ஓடிப் பிடித்தல், கண்ணாமூச்சி போன்ற பல விளையாட்டுகளையும் நாங்கள் ஆடியது உண்டு. நடுநடுவே சண்டை போடுவது வெகு சகஜம். இதைத் தொடர்ந்து பல வாரங்கள் பேசாமல் இருந்ததும் உண்டு. பெரும்பாலும் நான்தான் முதலில் 'பழம்'விட்டு, வெள்ளைக் கொடியைப் பறக்க விடுவேன்.

எட்டாம் வகுப்பு வந்தவுடன் கொஞ்சம் தெளிவு வந்தது. ஹோட்டலுக்கெல்லாம் சேர்ந்து போகத் தொடங்க, நட்பு இறுகியது. அப்போதே எனக்கு கிரிக்கெட்டில் ரொம்ப ஆர்வம். 'அண்டர்-15' பிரிவில் தமிழக அணியில் இடம்பெற்றேன். இதற்கு இரண்டு வருடங்கள் கழித்துத் தான் ஜார்ஜ் ஜான் கிரிக்கெட்டில் தீவிர கவனம் செலுத்தினான். பிறகு 'அண்டர்-19' அணியில் அவனும் இடம் பெற்றான். கான்பூரில் நடைபெற்ற ஒரு போட்டியில்தான் தமிழக அண்டர்-19 அணி முதல் முறையாக இறுதிச் சுற்றை எட்டியது. உத்திரபிரதேச அணியை எதிர்த்து விளையாடிய அந்த மேட்சில் நானும் ஜார்ஜ் ஜானுமாக சேர்ந்து 130 ரன் பார்ட்னர்ஷிப் எடுத்தது மறக்க முடியாத விஷயம். பேட்டிங்கில் அவனிடம் உள்ள சிறு சிறு குறைகளைச் சொன்னால் ஏற்றுக் கொள்வான்.

அதே சமயம் கிரிக்கெட்டில் என் சாதனைகளைப் பற்றி ஏதாவது பேசினால் அதைக் கண்டுக்க மாட்டான். 'இது பெரிய விஷயமா?' என்பது போல் வெறுப்பேற்றுவான்



"முகத்துக்கு முன்னால் பாராட்டமாட்டான்; மற்றவரிடம்தான் பாராட்டுவான்!"

ஆனால் எனக்குப் பின்னால், மற்றவர்களிடம் அவன் என் திறமைகளை வானளாவப் புகழ்ந்தது என் காதுகளை எட்டியிருக்கிறது.

என்றாலும் எங்கள் பேச்சில் கிரிக்கெட் அதிகம் இடம்பெற்றதில்லை. வாழ்க்கையின் பல கோணங்களையும், அவற்றை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் அவன் பலமுறை எடுத்துக் கூறியதுண்டு. ஒரு தீர்மானத்தை எப்படி எடுக்க வேண்டும் என்பதையும் அதன் அவசியத்தையும் கூறி எனக்கு அவன் நம்பிக்கை ஊட்டியதுண்டு.

பள்ளி நாட்களிலிருந்தே நாங்கள் சேர்ந்து சினிமா போவதுண்டு. ஆங்கிலப் படங்கள் – முக்கியமாக யுத்தப் படங்கள் எங்கள் இருவருக்குமே ரொம்பப் பிடிக்கும். நாளடைவில் கயாமத் ஸே கயாமத் தக், ஈரமான ரோஜாவே போன்ற காதலை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்களுக்கு அதிகம் போகத் தொடங்கினோம். நடிக – நடிகையரைப் பொறுத்தவரை எங்கள் இரண்டு பேரின் ரசனையுமே ஒரே மாதிரிதான். இருவருக்குமே அமீர்கான், மாதுரி தீட்சித் ஆகியோரை ரொம்பப் பிடிக்கும்.

ஜார்ஜ் கேரளாவைச் சேர்ந்தவன். என்றாலும் அவர்கள் வீட்டில் மலையாளம் அதிகம் பேசி நான் பார்த்ததில்லை. ஆங்கிலம்தான். அவன் அம்மாவும் அக்காவும் என்னிடம் ரொம்பப் பாசத்துடன் இருப்பார்கள்.

ஜார்ஜின் ஆங்கிலப் புலமை என்னை வியக்க வைக்கும். சொல்லப் போனால் பத்தாம் வகுப்பு படித்தபோது, கிரிக்கெட்டின் காரணமாக அடிக்கடி டூர் செல்ல நேரிட, திரும்பி வந்தவுடன் ஜார்ஜின் நோட்ஸைத்தான் ஆங்கிலம் மற்றும் பொருளாதாரப் பாடங்களுக்கு மலைபோல் நம்பியிருந்தேன்.

புத்தகங்கள் படிப்பதற்கெல்லாம் எனக்குப் பொறுமை இருந்ததே இல்லை. ஆனால் ஜார்ஜோ தீவிர புத்தகப் புழு. பெரும்பாலும் ஆங்கில சுயமுன்னேற்ற புத்தகங்களைத்தான் படிப்பான். அதில் உள்ளவற்றை அவன் கடைப்பிடிப்பதோடு, எனக்கும் எடுத்துச் சொல்லுவான். சின்ன விஷயங்களுக்குக் கூட எக்ஸைட் ஆகிவிடும் குணம் எனக்கு நிறைய உண்டு. இப்போது அது குறைந்திருக்கிறது என்றால் அதற்கு ஜார்ஜ்தான் காரணம்.

ஜார்ஜ் காதல் வயப்பட்டிருக்கிறான். அவன் தேர்வு சரியாகத்தான் இருக்கும். அவனுக்கு 'ஆல் தி பெஸ்ட்' சொன்னதோடு, 'எந்த உதவி வேண்டுமானாலும் தயங்காமல் கேள்!' என்றிருக்கிறேன். மற்றபடி இந்த விஷயத்தில் நான் இதைவிட அதிகமாக மூக்கை நுழைக்க வேண்டுமென்று அவனோ நானோ எண்ணவில்லை.

'இந்தியாவின் பிரதிநிதியாக ஒருமுறையாவது ஆடவேண்டும்' என்று நான் ஏக்கப்படும் போதெல்லாம், 'பொறுமையாக இருரன்களில் மட்டும் கவனம் செலுத்து. தானாக உயர்வு வரும்!' என்று சமாதானப்படுத்துவான்.

சென்னையில் இருக்கும்போது இரண்டு நாளைக்கு ஒருமுறையாவது பட்டினப்பாக்கத்திலிருக்கும் அவன் வீட்டுக்கு நான் போகாமல் இருக்க மாட்டேன். வேறு ஊர் அல்லது வேறு நாட்டுக்குச் சென்றிருந்தபோதும் அவனை அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வேன்.

(சரத்தோடு சேர்ந்து நாமும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தமது புகைப்படம் பிரசுரிக்கப்படுவதை ஜார்ஜ் விரும்பவில்லை; அத்தனை கூச்சம்!)

சந்திப்பு : **அருண்சரண்யா**

3

வி.கே. ராமசாமி

எங்கு போனாலும் விடமாட்டேன் என்று அப்பாவும் அண்ணனும் என்னைத் துரத்திக் கொண்டு, பொன்னமராவதி கேம்ப் புக்கு வந்து விட்டார்கள். வேஷமெல்லாம் போட்டுக் கொண்டு நான் தயாராக இருந்தேன். நல்லவேளையாக நாடகம் தொடங்கிவிட, என் அப்பாவும் அண்ணனும், முடிந்தபின் பேசிக் கொள்ளலாம் என்று நாடகம் பார்க்க உட்கார்ந்து விட்டார்கள்.

பாகவதர் நடித்த அந்த நாடகத்தில் எனக்கு சும்மா வந்து போகும் 'பார்ட்'தான். வசன மெல்லாம் ஏதும் கிடையாது.

என் அப்பா எரிச்சலடைய இது இன்னொரு காரணமாயிற்று.

"இது என்னடா, சும்மா வந்து போயி, ஒரு வார்த்தை கூடப் பேசாம நிக்கறதுக்குத்தானா இந்த ஓட்டம் ஓடி வந்தே?" என்று நாடகம் முடிந்ததும் கேட்டவர், மேற்கொண்டு என்னை ஏதும் பேசவிடாமல், என் சின்னம்மா மகனி



டம் சொல்லிவிட்டு, என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி விட்டார்.

எனக்கு ரொம்ப வருத்தமாகி விட்டது. எத்தனை சிரமப்பட்டு வந்து சேர்ந்து, முதல் நாளே வேஷம் கிடைத்து, நடித்து, கையோடு ஊருக்குத் திரும்பிப் போவதென்றால்?

"இந்தக் கூத்தாடற வேலையெல்லாம் இனி வெச்சிக்காதே. ஒழுங்கா படிச்சி, முன்னுக்கு வர்ற வழியைப் பாரு!" என்று கறாராகச் சொல்லி விட்டார் என் அப்பா.

நான் தீவிரமாக யோசித்தேன். நிச்சயம் எனக்குப் படிப்பில் நாட்டம் இல்லை. நடிக்கிற வெறியோ, மேலோங்கி நிற்கிறது. இந்த நிலையில் அப்பாவுக்குப் பயந்து எத்தனை நாட்கள் பள்ளிக்குப் போவதாக 'பாவ்லா' காட்டிக் கொண்டிருக்க முடியும்? என்றோ ஒருநாள் மறுபடியும் ஓடிப் போகத்தான் போகிறேன். அதை உடனே செய்தால் என்ன?

மறுநாள் வீட்டிலிருந்து பள்ளிக்குப் போவதாகக் கிளம்பியவன், நைஸாக பஸ் ஏறி, மதுரை வந்து, வேறு பஸ் மாறி, பொன்னமராவதி வந்து சேர்ந்து விட்டேன்.

இந்த முறை என் சின்னம்மா மகன் என்னைப் பிடித்துக் கொண்டான்.

"ஏன் இப்படி சொல்லிக்காம கிளம்பி வந்துடறே? ரொம்பத் தப்பு. மறுபடி உங்கப்பா வரப் போறார் பாரு. உன்னோட சேர்த்து எனக்கும் பாட்டு விழும்!" என்று அவன் என்னைக் கடிந்து கொண்டாலும், எதிர்பார்த்தது போல இம்முறை என் அப்பாவோ, அண்ணனோ வரவில்லை.

'சோறு தண்ணி இல்லாம கொஞ்ச நாள் அலைஞ்சான்னா, புத்தி வந்து தானா திருந்திடறான்' என்று பேசாமல் இருந்து விட்டார்கள்.

நானும் ஒருவழியாக நாடக கம்பெனியில் செட்டில் ஆகி இருந்த நேரம், பொன்னமராவதியில் நாடகங்களை முடித்துக்கொண்டு, முசிறிக்கு எங்கள் 'கேம்ப்' இடம் மாறியது.

ஏ.பி. கிருஷ்ணமூர்த்தி என்பவர் என் நடிப்புலக ஆசானாக அன்று அமைந்தார். நடிப்புக் கலையின் நுணுக்கங்கள் பலவற்றை அவரிடம் பயின்று கொண்டபடியே வழக்கமான பால பார்ட் வேஷங்களும் போட்டுக் கொண்டிருந்தேன்.

முசிறியில் எனக்குக் கிடைத்த இன்னொரு பொக்கிஷம் - ராமசாமி பாகவதர் என்கிற சங்கீத மேதையின் தொடர்பு. இயல்பாகவே ஓரளவு நன்றாகப் பாடக்கூடியவன்தான் நான். ராமசாமி பாகவதரின் பாடங்களால் என் இசை ஞானம் மேலும் மெருகேறியது.

தேரோட்டம்



ஆனால் அது நீடிக்கவில்லை. எங்கள் குழுவிலிருந்த சக்கரபாணி என்கிற நண்பர், "இதோ பார் ராமசாமி, உனக்கு காமெடி நல்லா வரும். அதுலதான் உன் பிழைப்பே இருக்குது. அதுல கவனம் செலுத்தறதை விட்டுட்டு, இப்படி சங்கீதத்துல கவனம் செலுத்தினால் உனக்கு அதுவும் இல்லாம, இதுவும் இல்லாமப் போயிடப் போகுது, பார்த்துக்க!'' என்றார்.

எனக்கு பயம் வந்து விட்டது. அன்றோடு என் இசைப் பயிற்சியை மூட்டை கட்டி வைத்துவிட்டு, முழு மூச்சாக நடிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன்.

ஆனால் அந்தக் காலத்தில் நாடக கம்பெனிகள் பொருளாதார ரீதியில் வளமாக இல்லை. வசூல் மிகக் குறைவாகவே இருக்கும். முசிறியில் எங்கள் நாடகங்களுக்கு ஆன வசூல், சாப்பாட்டுக்கே காணவில்லை.

எங்கே, அப்பா சொன்னபடி மறுபடி ஊர் திரும்பி விட நேருமோ என்று லேசாக பயந்தேன்.

முசிறி கேம்ப் முடிந்து ஸ்ரீரங்கம் போன போதும் வசூல் மோசமாகவே இருந்தது.

எங்கள் முதலாளி பொன்னுசாமிப் பிள்ளையின் உறவினர் ஒருவர் அப்போது உறையூரில் இருந்தார். அவர் பெரிய கருட்டு ஃபாக்டரி ஓனர். அவரிடம் சென்று பொன்னுசாமிப் பிள்ளை, தம் நிலைமையைச் சொல்லி உதவி கேட்க, அவர் உதவுவதாக ஒப்புக் கொண்டார்.

நானும் இன்னொரு நண்பரும்தான் ஆற்றை நடந்தே கடந்து, அவர் வீட்டுக்குப் போய் கம்பெனியில் உள்ளோருக்கான உணவு, பிற தேவைகளைப் பெற்று வந்து அளிப்போம்.

சாப்பாடே ஒரு பிரச்னை என்று ஆன போது, குழுவில் சிலர் "நிறைய சின்னப் பையன்கள் இருக்கிறார்களே, சிலரை நீக்கி விட்டால் சுமை குறையுமே?'' என்று என் முதலாளியிடம் யோசனை சொன்னார்கள்.

நான் அடிவயிறு கலங்க, முதலாளி என்ன பதில் சொல்லப் போகிறார் என்று காத்திருந்தேன்.

"அடடே! அதெல்லாம் ஒண்ணும் வேணாமய்யா. பசங்க இருந்துட்டுப் போகட்டும். இந்தா போயிட்டு வரேன்... எல்லாம் சரியாயிடும்!'' என்று எழுந்து வெளியே போனார்.

அவர் எங்கு போனாரோ, யாரைப் பார்த்தாரோ – அவருக்குத்தான் வெளிச்சம்! அன்றைய பொழுதுக்கு அறுசுவை உணவு கிடைத்து விட்டது!

பல சமயங்களில் இப்படித்தான். உணவு கிடைக்கத் தாமதமாகுமே தவிர, இல்லாமல் போகாது. அதுவும் எப்போதும் விருந்துணவுதான்! பொன்னுசாமிப் பிள்ளையின் மனஉறுதியும் விடாமுயற்சியும் எப்படியும் நாடகம் போட்டே கடன்களை அடைத்து விடலாம் என்கிற நம்பிக்கையும் நடிகர்கள் மேல் அவர் கொண்டிருந்த பரிவும் பாசமும் இவ்வளவு, அவ்வளவல்ல! மிகச் சிறந்த நிர்வாகி என்றால் எனக்கு உடனே அவர் ஞாபகம்தான் வரும்!



ஸ்ரீரங்கத்தில் நாங்கள் போட்ட நாடகங்களுள் படுதோல்வி அடைந்த நாடகம் என்றால் அது 'கள்வர் தலைவன்' என்கிற நாடகம் தான். பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய அந்த நாடகத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை நிறையப் பேர் இறந்து விடுவார்கள். 'இதென்ன ஒரே சாவுமயமாக இருக்கிறதே?' என்று பார்த்தவர்கள் வெளியே சென்று சொல்ல, அப்புறமும் கூட்டம் வருமா?

வேறு வழியில்லை. ஸ்ரீரங்கத்தை விட்டுக் கிளம்பியாக

வேண்டிய கட்டாயம். 'காம்ப்' மாற்ற வேண்டுமென்றால் காசு வேண்டுமே?

முதலாளி யோசித்தார். நெடுநேரம் யோசித்து, ஒரு முடிவுக்கு வந்தவராக, கடைசி நாள் 'மறுபடியும் கள்வர் தலைவன்' நடக்கும் என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

ஒரு பைசா தேறாது என்று நாங்கள் முடிவு செய்ய, ஆனால் நடந்த கதையே வேறு!

முதலாளி என்ன செய்தாரோ, எப்படி வரவழைத்தாரோ – அந்தக் கடைசி நாள் நாடகத்தில் என்.எஸ். கிருஷ்ணனும் மதுரமும் நடிக்கிறார்கள் என்று அறிவிப்பாயிற்று. விளம்பரங்களில் "என்.எஸ். கிருஷ்ணன் – மதுரம் நடிக்க, மீண்டும் கள்வர் தலைவன்" என்றே எழுதப் பட்டது.

அந்தக் காலத்தில் என்.எஸ்.கே. அவர்கள் திரையுலகில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார்கள். அவருக்கு 'ஃபிலிம் ரிப்பேரர்' என்றொரு பட்டமே உண்டு. எத்தனை மோசமான படமாக இருந்தாலும் அதைச் சரிசெய்து, பொருத்தமான நகைச்சுவைக் காட்சிகளைத் தாமே எழுதி, நடித்து, இணைத்து, ஓடவைத்து விடுவார். அவருக்கென்று தனியாக ஒரு ரசிகர் கூட்டம் எப்போதும் உண்டு.

அப்படிப்பட்ட என்.எஸ்.கே., எங்கள் நாடகத்தில் நடிக்க வருகிறார் என்றால் என்ன வேஷத்தில் நடிப்பார்? எப்போது வருவார்? ரிகர்சல் வேண்டாமா?

நாங்களெல்லாம் குழம்பிக் கொண்டிருக்க, நாடகம் ஆரம்பமானது.

வழக்கமான நடிகர்கள்தாம்; வழக்கமான நாடக வசனங்கள்தாம்; வழக்கமான சாவுக் காட்சிகள்தாம்! ஆனால் என்.எஸ்.கே.வுக்காக வந்து குழுமியிருந்த கூட்டம் எண்ணிலடங்காதது! அவர் எப்போது வருவார்? எப்படி வருவார்? என்று மொத்த அரங்கமே ஆவலாகக் காத்துக் கொண்டிருக்க, நாடகம் உச்சக்கட்டத்தை அடைந்த சமயம், திடீரென்று மேடையின் மேல்புறத்திலிருந்து கிருஷ்ணனும் மதுரமும் பார்வதி – பரமசிவன் வேஷம் போட்டுக் கொண்டு, 'தொப்'பென்று குதித்தார்கள்!

சபை ஆரவாரத்தில் வெடிக்க, பரமசிவன் தம் கையிலிருந்த கமண்டலத்திலிருந்து கொஞ்சம் நீர் எடுத்து, இறந்தவர்கள் மேல் தெளிக்க, நாடகக் கதையில் 'இறந்த பாத்திரங்களெல்லாம்' உயிரோடு எழுந்தனர். இதனைக் கூடியிருந்தவர்களெல்லாம் கைதட்டி வரவேற்க, என்.எஸ்.கே. தமக்கே உரிய நகைச்சுவையுடன் சில நீதிபோதனைகளை அவர்களுக்குச் சொல்லி, அதன் பிறகும் சுமார் ஒரு மணி நேரம் பல திரைப்பட நகைச்சுவைத் தோரணங்களை அந்த நாடக மேடையிலேயே கட்டி, ரசிகர்களை சந்தோஷத்தில் திக்குமுக்காடச் செய்து விட்டார்!

அன்றைய நாடகத்தில் எக்கச்சக்க வசூல். என்.எஸ்.கே. அவர்களுக்கு நன்றி சொல்லி விட்டு, அன்றிரவே மூட்டை கட்டிக் கொண்டு 'பவானி' புறப்பட்டோம். அங்கிருந்து திருச்செங்கோடு.

ஒவ்வொரு கேம்ப்பும் குறைந்தது இரண்டு மாதங்கள் நீடிக்கும். வசூல் குறைவு என்பதற்காக நாடகங்களைப் பாதியில் நிறுத்திவிட்டுத் திரும்புகிற வழக்கமே இல்லை.

பவானியிலிருந்து நாங்கள் திருச்செங்கோடு போவதற்கு உதவியவர்கள் எம்.ஆர். ராதாவும் டி.எஸ். பாலையாவும்.

பம்மல் சம்பந்த முதலியாரின் 'ரத்னாவளி' நாடகத்தில் பாமரவியன், தாமரவியன் என்கிற இரு பைத்தியக்காரச் சகோதரர்கள் பாத்திரத்தில் பாலையாவும் ராதாவும் நடித்துக் கொடுத்து உதவியது மறக்க முடியாத விஷயம். இருவருமே பிறவிக் கலைஞர்கள். மேடையில் தோன்றாமல், ரசிகர்கள் பகுதியிலிருந்தே திடீரென்று எழுந்து வந்து, அன்று அவர்கள் நடத்திய கூத்தில் விழுந்து விழுந்து சிரித்து வயிறு புண்ணாகி விட்டது – ரசிகர்களுக்கு மட்டுமல்ல; குழுவிலிருந்த எங்களுக்கும்தான்!

திருச்செங்கோட்டில் நாங்கள் போட்ட 'கதரின் வெற்றி' நாடகம் அபார வெற்றி கண்டது. காந்தி ஆசிரமத்தவர்கள் எங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே பாராட்டி, கதர் வேட்டிகளும் துண்டுகளுமாக அளித்த பரிசு ஒரு மலையளவுக்குக் காணும் என்றால் மிகையில்லை! அத்தனை அன்பு.

ஆனாலும் இரண்டு மாதம் தினம் தினம் நாடகம் போடும்போது ஏதாவது ஒன்றிற்கு மட்டும் வசூலானால் எப்படி லாபம் வரும்? திருச்செங்கோட்டிலிருந்து நாங்கள் அடுத்த 'கேம்ப்' மாற உதவியவர் டி.ஆர். மகாலிங்கம்.

திரு. மகாலிங்கம் தம் கலைவாழ்க்கையைத் தொடங்கியது எங்கள் குழுவில்தான். பின்பு அவர் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தாலும் பழைய நன்றிக்கடனை மறக்காமல் அன்று அவர் வந்து பாடி, நடித்துக் கொடுத்தார். பாட்டா அது! இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது! அத்தனை ஹை – பிட்ச்சில் வேறு யாராலும் எட்ட முடியாத உயரங்களை அன்று அவர் எட்டிப் பார்த்து, தொட்டுக் காண்பித்தார்!

மகாலிங்கம் செய்த உதவியால் நாங்கள் ராசிபுரத்துக்குப் பயணமானோம்.

நான் ஒரு நிஜ நடிகனாக அறிமுகமானது இங்கேதான். என் ஆசிரியர் ஏ.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தயாரிப்பில் நடந்த ராமாயணம் நாடகத்தில் எனக்கு விஸ்வாமித்திரர் வேடம். முக்கால் மணி நேரம் இடைவிடாமல் வந்து பாடி, பேசி நடிக்கிற வாய்ப்பு. நான் படபடப்புடன் காத்திருந்தேன்.

(தொடரும்)

● எல். கோபாலகிருஷ்ணன், வேலூர் – 6.

? இலவச சேலை வேட்டித் திட்டம் இந்த ஆட்சியிலும் தொடர்கிறதே...?

! 'அதனாலென்ன, ஊழல்தானே தொடரக் கூடாது!' என்று தி.மு.க.வினர் கூறலாம். அந்த வரை மகிழ்ச்சி. ஆனால் வரிப்பணத்தில் வழங்கப்படும் பொருள்களை இலவசம் என்று குறிப்பிடுவதே ஒரு வகை ஊழல்தான்!

● ஜி.ஏ. வேளா, சென்னை – 15.

? வருடத்துக்குச் சுமார் இருநூறு படங்களுக்கு மேல் தயாராகும் தமிழ் சினிமாவுலகிலிருந்து ஒரு படம் கூட சர்வதேச திரைப்பட விழாவுக்கு அனுப்பப்படவில்லையே, ஏன்?

! தமிழ்ப்படாதிபதிகளுக்கு நல்ல படங்களை எடுப்பதை விட பணம் பண்ணும் படங்களை எடுப்பதில்தான் நாட்டம். அதனால்தான்.

● ஜீவியன், திண்டுக்கல் – 1. ☐

? அரசியல் குற்றங்களை விசாரிப்பதற்கே நீதிமன்றங்களின் நேரம் சரியாகிவிடும் போல் தெரிகிறதே... பொது மக்களின் வழக்குகள் என்னாவது?

! 'லோக் அதாலத்' என்கிற மக்கள் நீதிமன்ற அமைப்பு உருவாக தமிழக அரசு தீவிர முயற்சி மேற்கொண்டிருப்பது, நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட உதவும். விபத்துக்களுக்கான இன்ஷூரன்ஸ், நஷ்டஈடுகள் மட்டுமேஇந்த மன்றங்களின் பார்வைக்கு வரும் என்கிற நிலை மாறி, இனி மக்களின் இதர வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சமரசத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தீர்ப்புகளுக்குச் சட்டபூர்வமான அங்கீகாரமும் கிட்டும்.

● என். ஜெயராமச்சந்திரன், கோவில்பட்டி.

? ஒரு வீட்டிலிருந்து பக்கத்து வீட்டுக்கோ, ஓர் ஊரிலிருந்து அடுத்த ஊருக்கோ தண்ணீர் கொடுக்க மனமில்

●எஸ். சேகர், திருவாரூர் – 2.

? வாழ்நாள் முழுதும் நகை அணிய மாட்டேன் என்கிறாரே ஜெ?

! கவனியுங்கள்... அணிய மாட்டேன் என்றுதான் சொல்கிறார். காட்ரெஜ் காட்ரெஜாக சேர்த்து வைக்கமாட்டேன் என்று சொல்லவில்லையே...!

●ஜி. கதிரேசன், சிறுமுகை.

? ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டை ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் பெங்களூரில் நடத்தியிருக்கிறாரே?



• ஈழத் தமிழர் ஆதரவு!



• கலக்கும் இல



• கட்டாயப் பா



• கண் ஆராய்ச்சி!

ஜெ. அறிக்கைகள்: அறியாமையா? ஆணவமா?

லாத இன்றைய மக்கள் வேற்று மாநிலத்திடம் தண்ணீர் கேட்டுப் போராடுவது நியாயமா?

! பக்கத்து வீட்டுக்காரர் நம் வீட்டுக் கிணற்றிலிருந்து நாலு குடம் தண்ணி கேட்டால் நாலு நாள் தரலாம். ஐந்தாம் நாள், 'நீங்களே ஒரு கிணறு வெட்டிக் கொள்ளுங்கள்' என்று சொல்வது தப்பில்லை. நதி நீர் விவகாரம் அப்படியில்லை. நதியை உருவாக்கவா முடியும்! பன்னெடுங்காலமாக உள்ள ஆயக்கட்டு உரிமைகளை மதிக்க வேண்டுகிறோம்.

! ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டில் தப்பில்லை. எங்கே, யார் நடத்தினாலும் அது புலிகள் ஆதரவு மாநாடாக – தேச விரோதமாய் இருக்கக் கூடாது.

●ஜெகன்பிரகாஷ், பெரியகொழுப்பலூர்.

? விஜய் டீ.வி.யில் செக்ஸ் கல்வி பற்றி டாக்டர் மாத்ருபூதம் அவர்கள் சொல்வது சங்கோஜமாக இருக்கிறதே... இப்படி ஒளி பரப்பினால் நல்லதா?

! நீங்கள் சொல்வது நியாயமே. இந்த

விஷயத்தில் பல பேருக்கு, பல சந்தர்ப்பங்களில், விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்ட புத்தகங்கள் உதவியிருக்கின்றன. ஆனால், இன்று புத்தகங்களின் இடத்தை டீ.வி. பிடித்துள்ளது. அதனால், விரசமோ, ஆபாசமோ இல்லாவிட்டாலும் இயல்பான கூச்சம் இந்த நிகழ்ச்சியைப் பார்க்கையில் ஏற்படவே செய்யும் – தர்ம சங்கடமும் கூட.... Private experience, public message ஆகிவிடுவதால்!

●**சூர்யநிலா, சேலம் – 2.**

? 'பெருந்தன்மையான பேச்சுக்களால் 'ஜெ' அறிஞர் அண்ணாவாகக் காட்சி அளிக்கிறார்' என்கிறாரே சேடப்பட்டி முத்தையா?

! இன்னும் ஒரு படி மேலே போய், 'அண்ணா எனக்கு ஜெயலலிதாவாகத் தோற்றமளிக்கிறார்' என்று சொல்லாததற்காக நன்றி செலுத்த வேண்டியதுதான்!

●**கே. சங்கர், திருச்சி – 8.**

? விஜயகாந்தின் கண்கள்தான் அதிகபட்ச பெண்களால் விரும்பப்படுகிறது என்று பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் கூறியிருப்பது பற்றி...?

! ஒரு பல்கலைக் கழகம் மேற்கொள்ள வேண்டிய அதிமுக்கியமான, விஞ்ஞானரீதியான, உலகையே பரபரப்பில் ஆழ்த்தப் போகிற ஆராய்ச்சிதான், பலே! நமது பல்கலைக் கழகங்களின் தரம் எந்த அளவுக்குத் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு சான்று.

●**ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் – 1.**

? பள்ளிகளில் கர்நாடக சங்கீதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்கிறாரே வலையப்பட்டி...?

! எதையுமே கட்டாயமாக்கினால் வெறுப்புதான் வளரும். வாய்ப்புத் தந்தால் போதும். பலரும் ஆசையோடு பயில வருவார்கள்.

●**டி. வரதன், மன்னார்குடி.**

? 'பம்பாய்' போல இருவர் படமும் ஒரு கலக்கு கலக்குமா?

! ஒரு கலக்கு கலக்க வேண்டும் என்பதற்காகவே முன்கூட்டியே பேசப்படும் படமாக எடுப்பதில் மணிரத்னம் கில்லாடி ஆயிற்றே. அவர் எதிர்பார்க்கிறபடி கலக்குகிறதோ இல்லையோ, அவர் வரைக்கும் வசூலாகி விட்டது.



• இவர்கள் சந்தித்தால்...

●**ஆ. விச்சு, திருப்பத்தூர்.**

? ஜெயலலிதா, பூலன் தேவி, சசிகலா, பேனசீர், இந்திரகுமாரி இவர்கள் ஒன்று சேர்ந்தால் என்ன பேசிக் கொள்வார்கள்?

! சிறைவைக்கப்பட்ட அனுபவங்களை!



• பாதுகாப்புக் கவலை...

●**கே. ஆர். உதயகுமார், சென்னை – 1.**

? சென்னையில் மாடி பஸ் சர்வீஸ் மீண்டும் துவங்கி விட்டதே?

! ஜாலியாகத்தான் இருக்கு. ஆனால், அதற்காக மரங்கள் வெட்டப்படுவது 'வெரி ஸாரியாக'வும் இருக்கு!

●**அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.**

? 'சி.பி.ஐ. அதிகாரி பிஸ்வாஸை மாற்றுங்கள்' என்கிறாரே லல்லு...?

! லல்லு பரவாயில்லை... தமது தனிப்பட்ட பாதுகாப்பு உணர்வு காரணமாகப் பேசுகிறார். ஆனால் பிரதமரோ தம் அனுமதி இன்றி சி.பி.ஐ. எந்த அமைச்சர், எம்.பி. பேரிலும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கட்டுப்படுத்த நினைக்கிறார். இந்த அக்கிரமத்துக்கு நாடு உடன்பட்டால், அந்த அதிகாரம் பிரதமர் கையில் ஒரு மகத்தான பிளாக்மெயில் ஆயுதமாக மாறிவிடும்!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஜீவியன்,
20, வேப்பந்தோப்புத் தெரு,
திண்டுக்கல் – 1

●**எஸ். மதியழகன், நாகூர்.**

? உண்மைக்குப் புறம்பாக ஜெ. விடும் அறிக்கைகள் அவரது அரசியல் அறிவின்மையா? ஆணவமா?

! இரண்டும்தான்! தீயணைப்புக் கருவிகள் வாங்கியதில் ஊழல் புரிந்த இன்ஸ்பெக்டர் கைதாகவும், 'இந்த ஊழல் கருணாநிதி காலத்தில் நடந்ததாயிற்றே...' என்று ஜெயலலிதா சுட்டிக்காட்ட முன்வந்தது அறியாமை. ஏனெனில் தமது ஆட்சியில் இந்த ஊழல் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை மறைக்கவும் மறக்கடிக்கவும் முற்படுகிறார். 'இவ்வழக்கில் கருணாநிதியை ஏன் கைது செய்யவில்லை?' என்று கேட்பதோ ஆணவம் – ஊழலுக்குத் துணைபோன ஒருவர், ஊழலைத் தட்டிக் கேட்பவரை நோக்கி இவ்வாறு பேசுவது ஆணவமின்றி வேறென்ன...!

உன்னை வரலாமா?

"கொஞ்சம் தள்ளுங்க, அம்மா உட்காரட்டும்..." ஸ்டூலைக் கொண்டு வந்து போட்டு உபசரித்துக் கொண்டிருந்தார் கடைக்காரர். பசுமாடு படுத்துக்கொள்வது போல் அசைந்து மெதுவாக உட்கார்ந்த பெண்ணுக்கு எத்தனை மாதமாகியிருக்கும் என்று யூகமாய்க் கணக்கிட்டாள் சுகன்யா.

"முதல்ல அம்பாளுக்கு ஒரு டஜன் சேப்பு வளை கொடுத்துடுங்கோ... அப்புறம் அம்மா கை அளவு பார்த்து டிசைன் பார்த்துப் பொறுக்கி எடுத்துக்கறோம்..." உடன் வந்த மாமி கடைக்காரரிடம் சொல்லிவிட்டு சுகன்யாவைப் பார்த்து சிநேகமாய்ச் சிரித்தார்.

ஏழு மாதமிருக்கும்... முகத்தில் அலாதியான திருப்தியுடன் இலேசான களைப்பும் இழைந்து கிடந்தது. கைகளில் மருதாணிச் சிவப்பும் தலையில் மல்லிகைப்பூவுமாக கல்யாணக் களையுடன் இருந்தாள்.

"ஏய் சுகி! என்ன அப்படியே மயங்கி நின்னுட்டே.... போலாமா....?" சசி ஆங்கிலத்தில் அதட்டியதும் நகர ஆரம்பித்தாள் சுகன்யா.

ஒரு கையில் பச்சை ஒரு கையில் சிவப்பு என்று இரண்டு டஜன் கண்ணாடி வளையல்கள் கைகளில் குலுங்கின.

"எனக்கு கறுப்புதான் பிடிக்கும்"- சசி இரண்டு கைகளிலும் கறுப்பு வளையல்களை அடுக்கியிருந்தாள். இன்று அவள் பிறந்தநாள். அதற்காக கபாலீசுவரர் கோவிலில் அர்ச்சனை. மரியாதையாக சல்வார் கமீஸ் அணிந்து வந்திருந்தாள். துப்பட்டாவைத் தலையைச் சுற்றி கழுத்தை வளைத்துப் போட்டுக் கொண்டு கேட்டாள்.

"என்ன சுகி! அந்தப் பொண்ணை அப்படியே முழுங்கிடற மாதிரி பார்த்தே...?"

"ஏழு மாசம் இருக்காது....?"

"இருக்கும் - எட்டு மாசம் கூட இருக்கலாம். இப்ப திரும்பப் பார்த்தா நல்லாயிருக்காது..."

"ம்..."

கம்மிய அவள் குரலைக் கேட்டு சசி குழம்பினாள்.

"என்னாச்சு... சுகன்யா...?"

ஓ!... அவ்வளவு ஆசையா இருந்தா சீக்கிரமே ஒண்ணு பெத்துக்கறதுதானே.... ஏன் ஸ்ரீராம் வேண்டாம்ங்கறானா....?"

"இல்லை சசி..."

"பின்னே..."

"ஒரு மிஸ்கேரேஜ் ஆயிடுத்து..."

"ஓ! ஐ'ம் ஸோ ஸாரி... எப்போ...?"

"வசந்தி கல்யாணத்துக்குக் கொஞ்சம் முன்னாடி. சசி இப்போ ஏன் அதைப் பத்திப் பேசணும் விடு..."

"உனக்கு வேண்டாம்னா பேசலை... வசந்தி வந்துட்டாளா...?"

"இன்னும் வரலை. போய் இரண்டு வாரம் ஆயிடுத்து... போய்ச் சேர்ந்த மறுநாள் போன் வந்தது. பக்கத்து வீட்டு சரோஜா ஜன்னல் வழியா 'எஸ்.டி.டி. பெங்களூர் கால்'ன்னு கத்தினப்போ எனக்கு பயங்கர டென்ஷனா யிடுச்சி... 'பத்திரமா வந்து சேர்ந்துட்டோம்; எவ்ரிதிங் இஸ் ஓ.கே'ன்னு சேகர் பேசினான். இனிமே போனே பண்ணாதீங்க... வரும்போது நல்ல செய்தியோட வாங்கன்னு சொல்லி வைச்சுட்டேன்..."

"உன் மாமனார் உன்னை இதோட விட்டாரேன்னு ஆச்சரியமாயிருக்கு சுகி..."


"வேற வழி...? ஆனா கொஞ்சம் ஆடித்தான் போய்ட்டார். கடைசியில ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுட்டார். அங்க வந்து இரேம்மான்னார்..."

"போக வேண்டியதுதானே... நிம்மதியா மாமியார் சமையலைச் சாப்பிட்டுக்கிட்டு ஒரு வாரம் இருந்திருக்கலாமில்ல..."

"அது சரிப்படாது சசி... நான் ஒரு எல்லையக் கடந்து அங்க உள்ளே போக முடியாது..."

"முன்னுக்கு பின் முரணா பேசறே... குழம்பிப் போயிருக்கே நீ..."

"நான் ஒண்ணும் குழம்பிப் போகல்ல... இப்பதான் ரொம்பத் தெளிவா இருக்



26


அனுராதா ரமணன்

?

கேன்... அவங்கதான் இன்னும் குழப்பத்துல இருக்காங்க..." பேசியபடி நடந்து கொண்டே மயிலாப்பூர் பஸ் ஸ்டாண்ட் வந்திருந்தார்கள். ஒரு ஆட்டோவை நிறுத்தி "நாகேஸ்வர ராவ் பார்க்" என்றாள் சசி. முறைத்துவிட்டு கோப மாய்ப் போய் விட்டார் ஆட்டோக்காரர்.

"பேசிக்கிட்டே நடந்துடலாமா...?" சின்னக் குழந்தையைப் போல் சசி கையைப் பிடித்துக் கொண்டாள். "சொல்லு என்ன குழப்பம் அவங்களுக்கு...?"

"என்னை ஏத்துக்கறதா வேண்டாமான்னு ஆரம்பத்துலேருந்து குழப்பம். பிள்ளை இப்படி குலம் கோத்ரமில்லாத ஒருத்தியைக் காதலிச் சுட்டானேன்னு கோபம் - ஆனா ஒரு பெண் ணுக்கு மனகல ஆசை வளர்த்திட்டான். அத னால உடனே அதை நிறைவேத்தணும்னு



கடமையுணர்வு. வேற வழியில்லாம ஏத்துக்கிட்டாங்க... அப்புறம் அவங்க பழக்க வழக்கத்தோட ஒத்துப்போக முடியலைன்னு திரும்பவும் கசப்பு... வசந்தி கல்யாணத்துக்கு முன்னாடி நடந்த கலாட்டாதான் உனக்குத் தெரியுமே... அவளைச் சமாதானப்படுத்தி அவங்களால சமாளிக்க முடியலை. அதையே என்னால செய்ய முடிஞ்சப்ப ரொம்ப நெருங்கி வந்துட்டாங்க... அபார்ஷன் ஆகிப் படுத்தப்போ இரண்டு நாள் மாமனார் என் கூடவே ஆஸ்பத்திரியில இருந்தார்.

"ஹௌவ் ஸ்வீட்...!"

"எப்ப ஸ்வீட் எப்ப காரம்னுதான் சொல்லவே முடியாது! இப்போ இவங்கள பெங்களூர் அனுப்பிட்டேங்கற கோபத்துல 'எங்க குடும்ப மானத்தைக் கப்பலேத்திட்டியே'ன்னு... ஒரேடியா கழுத்தப் புடிச்சுத் தள்ற மாதிரி பேசிட்டார்... அப்புறம் அவரே நிலைக்கு வந்து சகஜமானார்... நாம எவ்வளவுதான் முழு மனசோட அவங்களை ஏத்துக்கிட்டாலும் நம்மை மாத்திக்கிட்டாலும் ஒரு ஓரத்துல, அடி மனசுல அந்த அந்நிய உணர்வை ஒட்டவச்சுக்கிட்டுத்தான் அவங்க பார்க்கறாங்க.... அதை ஒண்ணுமே பண்ண முடியாது..."

"விரக்தியா பேசாதே சுகி... எனக்கே கஷ்டமா இருக்கு கேட்கறதுக்கு..."

"இல்ல சசி... விரக்தி இல்லை இது... தெளிவு. நம்மை எங்கே நிக்க வைச்சிருக்காங்கறதுல நாம ரொம்ப தெளிவா இருக்கணும். என்னைப் பொறுத்த வரைக்கும் நிலைப் படியிலதான் வைச்சுருக்காங்க... உள்ளே வான்னு கூப்டா போகணும். வெளியில இருன்னு சொன்னா இருக்கணும்... அவங்களுக்கு உபயோகமாயிருக்கற வரைக்கும் வரச் சொல்லி ஏத்துக்குவாங்க. உபத்திரவமா தோணினா போகச்சொல்லிடுவாங்க..."

"இப்படிப் பேசினா விரக்தி இல்லாம என்னவாம் - வேப்பெண்ணெய் கசப்பு இது..."

"கசப்பேயில்ல... ஏன்னா நான் 'உள்ளே வரலாமா?'ன்னு இனிமே கேட்கப் போறதில்ல... அவங்களை சொந்தமா, பந்தமா, உறவா நினைச்சாத்தானே உள்ளே போகறதும் வெளில வரதும் வேதனையான விஷயமாகுது... அப்படி நினைக்காம மனிதர்களா - just people- நினைச்சுக்கிட்டா எந்த உணர்வுச் சிக்கலும் இல்ல..."

"கொஞ்ச நாள் ஆனா அவங்களை வெறுக்க ஆரம்பிச்சுடுவே...!"

"ஐயோ இல்ல... உனக்கேன் புரியலை...? உறவு சொந்தம்னு இல்லாதவங்களை நம்மால நேசிக்க முடியலையா என்ன...? அந்த மாதிரி அன்பா இருந்துட்டுப் போறோம், எதிர்பார்ப்புகள் இருக்காதுன்னு சொல்ல வரேன்..."

"கல்யாணமானா ஒவ்வொருத்தருக்கும் என்னென்னவோ வரும்... உனக்கு விவேகம் வந்திருக்கு!" பற்றியிருந்த கையை அழுத்தினான் சசி.

"ஸ்ரீராமுக்குப் பெண்டாட்டியாயிருந்து அது வரலைன்னாதான் ஆச்சர்யம்."

"உபயோகமா, உபத்திரவமான்னெல்லாம் பார்க்காம 'எங்க சுகன்யா'ன்னு அவங்க மாற ஆரம்பிச்சா என்ன பண்ணுவே...?" - தோளில் கைபோட்டபடி நாகேஸ்வர ராவ் பார்க்குக்குள் நுழைந்தார்கள்.

"அப்போ பார்த்துக்கலாம்..."

ஒரு மணி நேரம் வீசி நடந்து, வேர்க்கடலை வாங்கித் தின்று... 'லேட்டாச்சு. இப்ப போகலைன்னா வார்டன் எந்த பாய் பிரண்ட் வீட்லயிருந்து வரேங்கற மாதிரி பார்க்கும்' - சசியை ஆட்டோவுக்குள் தள்ளி அனுப்பிவிட்டு வீடு வந்து சேர்ந்தபோது போஸ்ட் பாக்ஸில் நான்கு கடிதங்கள். ரீடர்ஸ் டைஜஸ்ட் ஸ்பெஷல் ஆஃபர், டைம் ஷேர் வாங்க கவர்ச்சிகரமான அழைப்பு, ஸ்ரீராமின் எல்.ஐ.சி. ப்ரீமியம் நினைவூட்டல். அப்புறம்... 'சுகன்யா ஸ்ரீராம்' என்று அழகாக வலப்புறம் சாய்ந்த கையெழுத்தில் விலாசம் எழுதி, ஸ்ரீராமின் விமானத் தபால் கத்தையாக இருந்தது.

அதைப் பார்த்ததும் எழுந்த சந்தோஷத்தில் சாவி துவாரத்தைத் துழாவி, கதவு திறந்து...

ஹால் விளக்கை எரியவிட்டு சோபாவில் உட்கார்ந்து மிக மெதுவாக உறையைப் பிரித்தாள் சுகன்யா.

'என் ப்ரியமான சுகன்யா...' எழுத்துக்கள் கண்ணீரில் குழம்ப, மெதுவாக மிக மெதுவாகப் படித்தாள். முன்னும் பின்னுமாய்க் காகிதத்தில் ஆறு பக்கங்கள் எழுதியிருந்தான்.

பணியின் சவால், பயணக் களைப்பு, சுற்றுலா அனுபவம் என்று அடுக்கடுக்காய்த் தகவல்களின் ஊடே, சரடு போல காதல் ஓடியது; பிரிவாற்றாமை தொக்கி நின்று வேதனைப்படுத்தியது.

கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு மீண்டும் ஒருமுறை ஆறு பக்கங்களையும் ஊன்றிப் படித்தாள். 'இருபத்தேழாம் தேதி இந்திய நேரப்படி இரவு ஒன்பது மணிக்கு சரோஜா வீட்டுக்கு போன் செய்கிறேன். அங்கே போய்க் காத்திரு...'

இருபத்தேழு... இன்றைக்குத்தான்! இன்னும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டும். என்ன பேசலாம்...? 'வசந்தியும் சேகரும் பெங்களூர் போயிருக்காங்க... எப்போ வருவாங்கன்னு தெரியாது. நீ எப்போ வருவே ஸ்ரீராம்...? ஒருநாள் ராத்திரி மொட்டை மாடியில நிலாவோட சேர்ந்து காய்ஞ்சேன்... ஊஹூம்... சரோஜா வீட்டில் இருந்துகொண்டு

எழுதியவர் யார்?

தங்க நகைப் பரிசுக் கூப்பன்

இந்த இதழுடன் நிறைவடைகிற 'உள்ளே வரலாமா?' தொடரை கவனமாகப் படித்து விட்டீர்களா? தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடித்திருப்பீர்களே? பின் வரும் 26 எழுத்தாளர்களில், தொடரை எழுதியவராக நீங்கள் கருதுபவரின் பெயரை கூப்பனில் எழுதி 3.2.97க்குள் அனுப்பி விடுங்கள். சரியான விடை எழுதும் ஒரு வாசகருக்குத் தங்க நகை பரிசு. பலர் சரியாக எழுதி விட்டால் குலுக்கலில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

1. சுஜாதா, 2. பாலகுமாரன், 3. தேவி பாலா, 4. இந்திரா சௌந்தர்ராஜன், 5. சிவசங்கரி, 6. இந்துமதி, 7. அனுராதா ரமணன், 8. இரா. முருகன், 9. சீதா ரவி, 10. கி. ராஜநாராயணன், 11. பா. ராகவன், 12. வாஸந்தி, 13. ம.வே. சிவகுமார், 14. வைரமுத்து, 15. ஆர்னிகா நாசர், 16. கி. ராஜேந்திரன், 17. பிரபஞ்சன், 18. மஞ்சுளா ரமேஷ், 19. பட்டுக்கோட்டை பிரபாகர், 20. அசோகமித்ரன், 21. வையவன், 22. ரா.கி. ரங்கராஜன், 23. ரமணி சந்திரன், 24. கி. கஸ்தூரி ரங்கன், 25. இந்திரா பார்த்தசாரதி, 26. ராஜேஷ்குமார்.

'உள்ளே வரலாமா?'
தொடரை
எழுதிய எழுத்தாளர்:

....

பெயர்:..

முகவரி:..

....

....

இதெல்லாம் பேச முடியாது!"

கடிதத்தை அப்படியே சோபாவில் வைத்துவிட்டு, உடை மாற்றி சமையலறைக்குள் போனாள் சுகன்யா. டூ-இன்-ஒன்னில் டேப்பைப் போட்டுவிட்டு, சப்பாத்திக்கு மாவு பிசைந்த நேரத்தில் வாசலில் ஹாரன் சப்தம். மாவுப் பாத்திரத்துடன் போய் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்து கொண்டிருந்தது...? இருட்டிலும் உயரம் அடையாளம் சொல்லிற்று - சேகர்! பின்னால் வசந்தி.

மாவுக் கை மறந்து கதவைத் திறந்தாள் சுகன்யா.

"ஹலோ சுகன்யா! திடீர்னு இன்னிக்கு மத்தியானம் கிளம்பி வந்துடலாம்னு முடிவு பண்ணினோம். டாக்ஸி பிடிச்சு நேரா இங்கதான் வரோம்..."

"நைஸ் டு ஹாவ் யூ பேக்..." அடுத்தபடி என்ன பேசுவது என்று புரியாமல் சுகன்யா அவர்கள் பேசக் காத்திருந்தாள்.

"மன்னி..." என்று ஆரம்பித்த வசந்தியின் கண்களில் ஸ்ரீராமின் கையெழுத்தைத் தாங்கிய கடிதம் பட்டுவிட...

"ஹையா! அண்ணாகிட்டேயிருந்து இன்னிக்குத்தான் லெட்டர் வந்ததா மன்னி. ? அதான் முகமே தனி களையா இருக்கு... என்ன எழுதியிருக்கான் அண்ணா...? நான் சொல்லட்டுமா...?"

கண்களின் குறும்பிலும் உரிமையுடன் வம்புக்கிழுத்த கேலிப் பேச்சிலும் வசந்தி பளிச்சென்று வித்தியாசமாய்த் தெரிந்தாள்.

"இங்க வா உன்னை நல்லா பார்க்கறேன்..." புறங்கையால் தள்ளிக் கொண்டு சமையலறைக்குப் போனாள் சுகன்யா.

"எத்தனை அழகாயிருக்கு உனக்கு இந்தப் புடைவை..."

"சேகர்தான் செலக்ட் பண்ணினார்..."

"அட! பேரெல்லாம் சொல்ல ஆரம்பிச்சுட்டீங்களோ...?"


"ம்..." என்றாள் வசந்தி இலேசாக வெட்கப்பட்டு! ஒருகணம் தயங்கியவள், வேகமாய் முன்னேறி சுகன்யாவின் தோளைச் சுற்றி அணைத்து, தலையைச் சாய்த்துக் கொண்டு சொன்னாள். "தாங்க் யூ மன்னி... ஃபர் எவ்ரிதிங்."

"சந்தோஷமா இருக்கியா...?"

"இருக்கோம்..." அதே மூச்சில் வசந்தியின் இதழ்கள் சுகன்யாவின் கன்னத்தில் பெரிய முத்தமாய்ப் பதித்தன. அனுபவித்துச் சிரித்தாள் சுகன்யா.

"சேகர். இந்த டீயை சமர்த்தா குடிச்சுட்டு உடனே மாமனாரைப் பார்க்கப் போவீங்களாம். அப்புறம் அதே வேகத்துல வீடு போய்ச் சேருவீங்களாம். வாசல்ல டாக்ஸி இருக்கில்லியா...?"

பிரிட்டனை வதைக்கும் பிரச்னை!



பிரிட்டனை இன்று ஒரு பிரச்னை வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறது.

சின்னச் சின்ன எறும்புகள், பூதக் கண்ணாடியில் பார்த்தால்தான் தெரியும். அத்தனை சிறிய எறும்புகள். நியூசைன்டிஸ்ட் என்ற விஞ்ஞானப் பத்திரிகை இந்த எறும்புகளை 'பேய்கள்' என்று பெயர் சூட்டி இருக்கிறது!

இந்த எறும்புகளின் கால்களும், கறுப்பான தலையும் தான் கண்களுக்குத் தெரியும். வயிற்றுப் பகுதி தெரியாது. இந்த எறும்புகள் வெளிச்சமான பகுதிகளில் சென்றால் தான், இப்படியாவது தெரிகின்றன.

'இந்தப் 'பேய்கள்' மிகவேகமாக, அதுவும் வட்ட வடிவமாக ஓடி மறைகின்றன. ஏதாவது தொல்லை நேரும்போது.

இந்த எறும்புகள் யாரையும் கடிப்பதில்லை. ஆனால் அருவருப்பை உண்டாக்கி விடும். அவற்றைப் பார்த்தால் கூட மனம் தடுமாறத் தொடங்குகிறது.

இந்தப் பேய் எறும்புகள் மருத்துவமனைகளில் நுழைந்து விட்டால், நோய்க்கிருமிகளைப் பரப்ப வாய்ப்பு இருக்கிறது என்று மருத்துவர்கள் நினைக்கின்றனர்.

அமெரிக்காவிலுள்ள வடக்கு ஃப்ளாரிடாவிலிருந்து இந்த எறும்புகள் பிரிட்டனுக்குள் நுழைந்து இருக்கின்றன.

எப்படி இந்தச் சின்னஞ்சிறு எறும்பைக் கண்டு பிடிப்பது?

இவைகளை யாராவது தொல்லை தந்தால், அல்லது கொன்று விட்டால் அழுகிப் போன தேங்காய் நாற்றம் அடிக்கிறது.

– சேலம் சக்திக் கொடி

●●●

"யெஸ் காப்டன்!" என்றான் சேகர் பவ்யமாக தலை தாழ்த்தி.

"இன்னிக்கு ஸ்ரீராம் போன் பண்ணுவான் ஒன்பது மணிக்கு... உங்க சார்புல என்ன சொல்லட்டும் அவனுக்கு...?"

"சாஃப்ட் வேர் வித்த வரைக்கும் போதும்... இங்க சுகன்யா காத்துக்கிட்டிருக்காங்க. அதனால சீக்கிரம் வரச் சொன்னேன்னு சொல்லுங்க..."

"இது மட்டும் முதலாளி ராஜு காதுல விழட்டும்... நம்மளை உண்டு இல்லைன்னு பண்ணிடுவார்..."

"வரட்டும்! நான் சமாளிக்கிறேன் அவரை ஒண்டிக்கு ஒண்டி..."

அர்த்தமில்லாத இண்டலும் சிரிப்புமாக வீடு இலகுவாகி கலகலத்தது.

"கிளம்புங்க" என்று அவர்களை மூட்டை கட்டி வெளியேற்றினாள் சுகன்யா.

டெலிபோன் கனவில் ஒலிப்பதுபோல் இருந்தது. பக்கத்திலிருந்த சுகன்யா பாய்ந்து எடுத்தாள்.

"ஹலோ...."

"சுகி...?"

"ஊம்... நான்தான்..."

சரோஜா அவசரமாக டீவியை அணைத்து விட்டு பக்கத்து அறைக்குப் போனாள்.

"எப்படியிருக்கே...?"

"உன் குரலைக் கேட்கவே சந்தோஷமாயிருக்கு ஸ்ரீராம்..."

"இன்னும் பதினஞ்சு நாள் பொறுத்துக்கோ. அப்புறம் தினமும் காதுக்குள்ளேயே பேசுவேன்..."

"என்ன பேசுவே...?"

"இப்ப சொல்லிடுவேனா...?"

"நீ எப்படியிருக்கே ஸ்ரீராம்...?"

"ஓ.கே... அங்க எல்லாரும் சௌக்கியம் தானே...? அப்பாவுக்கு அடுத்த வாரம் இதே நேரம் போன் பண்றேன்னு சொல்லு... அன்னிக்கு நீ அங்கே வரியா...?

"............"

"என்ன...? சுகி... ஆர் யூ தேர்...?

"இருக்கேன் ஸ்ரீராம். வரேன். கட்டாயமா நீ போன் பண்றப்போ அங்க இருப்பேன்."

"உனக்கு இங்கேருந்து ஏதாவது வேணுமா...?"

"ஒண்ணும் வேண்டாம்... நீ சீக்கிரமா வா. ரொம்ப சீக்கிரம்..."

குரலிலிருந்த கெஞ்சலையும் உணர்ச்சி மிகுதியையும் வடிகட்டி கிரஹித்துக் கொண்ட ஸ்ரீராம் மென்மையாய்க் கேட்டான்.

"என்னம்மா சுகி... என்ன ஆச்சு...?"

"ஒண்ணுமில்ல..." என்றாள் சுகன்யா "வசந்தி அம்மாவாகறத்துக்கு முன்னாடி நாம அவளை அத்தையாக்க வேண்டாமா...?"

(முற்றும்)


'சுட்ட' பழம்

'விமர்சனம் செய்வதைக் கைவிட்டு ஐக்கிய முன்னணி அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் ஊக்கப்படுத்த வேண்டும்."
— தேவே கௌடா

கனிந்த சிந்தனை!

அடடா! ஐக்கிய முன்னணிக்கு மட்டுமா இந்த அறிவுரை...! நாடே பின்பற்ற வேண்டிய முன்னு தாரணம் அல்லவா இது என்று சிலிர்ப்பு ஏற்படுகிறது.

உதாரணமாக நம் குடும்பங்களையே எடுத்துக் கொள்வோம்... மனைவி, சாம்பாரில் உப்புப் போட மறந்தால், 'சாம்பாரா இது? கழுநீர்!' என்று கடுமையாக விமர்சிப்பானேன்!



''ஆஹா! கமலா, என்ன சிக்கனமா குடும்பம் நடத்துறே... இன்னைக்கு உப்பை மிச்சம் பிடிச்ச மாதிரி, நாளைக்கு புளி - மிளகாயும் நாளன்னைக்கு வெங்காயம் தேங்காயும் மிச்சம் பிடித்துக் காட்டு பார்க்கலாம்...'' என்று மனைவியைக் கணவன் ஊக்குவிக்கலாம்.

இப்படி தினம் தினம் ஒரு மாதத்துக்கு மிச்சம் பிடித்த நூற்றியாறு ரூபாயில், கமலா ஒரு பிளவுஸ் துணி வாங்கிவிட்டு, அதைத் தைத்துக் கொள்ள ஐம்பது ரூபாய் தையல் கூலி கேட்டால் தேவே கௌடாவா பொறுப்பாக முடியும்!

''ஐயோ! பெரிய வித்வானாயிற்றே, காட்டமாய் விமர்சிக்க முடியாதே'' என்று இனி சங்கீத விமர்சகர்கள் பயப்படவே வேண்டாம். தேவே கௌடாவே சொல்லி விட்டாரே... என்று தைரியமாய் எழுதலாம். 'பாடகரின் உச்சரிப்பு எப்படி இருந்தால் என்ன...? அவருக்கு சுருதியே சேராவிட்டால்தான் என்ன... பின்னாலிருந்த தஞ்சாவூர் தம்பூரா என்ன அற்புதமாய் சுருதி சேர்ந்து இருந்தது... இதைப் போல் ஒரு தம்பூரா நாதத்தை என் அறுபத்தைந்து வருட சர்வீஸில் கேட்டதேயில்லை' என்று ஊக்குவித்துத் தூக்கிவிடலாம்.

சினிமா விமர்சகர் இன்னும் ஒரு படி மேலே போகலாம். 'கதை கதை என்று ஏன்தான் சில அசடுகள் ஆலாய்ப் பறக்கிறார்களோ தெரியவில்லை... கதையேயில்லாமல் படம் எடுத்துள்ள கானாதானா டைரக்டரைப் பாராட்டி தேசிய விருது சிபாரிசு செய்கிறேன்' என்று எழுதலாம்.

பெட்ரோல் விலை ஏறட்டும், பட்ஜெட் வரட்டும், என்று பேனாவைத் தீட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அரசியல், பொருளாதார விமர்சகர்கள் கூட பொறுமை கொள்ள வேண்டும்.

'என்ன விலைவாசி ஏறினால் என்ன... பிரதமர் சளைக்கிறாரா...? மூப்பனார் வீட்டுக் கல்யாணமானாலும் சிதம்பரம் வீட்டுக் கல்யாணமானாலும் செலவைப் பார்க்காமல் பறந்து வந்து மொய்யெழுதவையா...? ஒரு சாதாரண விவசாயக் குடிமகனால் முடியும் போது, உங்களால் முடியாதா என்ன...!' என்று மக்களை ஊக்குவிக்காமல், காரசாரமான வார்த்தைகளால் விளாசுவானேன்...!

- சில்மிஷா

'மா'னென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக் கில்லை
மீன்விழி உடையா ளென்றால்
மீனிலே கருமை யில்லை
தேன்மொழிக் குவமை சொன்னால்
தெவிட்டுதல் தேனுக் குண்டு
கூன்பிறை நெற்றி என்றால்
குறைமுகம் இருண்டு போகும்!'

- இப்படி நாமக்கல் கவிஞர் உவமைகளைத் தேடித் தேடி கிடைக்காமல் தவித்தாரே.... அது ஒருவேளை இந்தப் பேரழகியைப் பார்த்துத் தானோ என்று வியந்தார்கள் கவிதை மனம் படைத்த இளைஞர்கள்.

இப்படியொரு பேரழகைக் கட்டிக் காக்கிற வசதி நமக்கல்லவோ இருக்கிறது. போயும் போயும் இந்த ஏழைக்கு மனைவியாகி விட்டாளே என்று ஏக்கப் பெருமூச்சு விட்டார்கள் பணக்காரர்கள்.

அவளோ தான் ஒரு பேரழகி என்கிற உணர்வே இல்லாமல் இருந்தாள். ஏழைக் கணவனோடு இதயம் நிறைந்து வாழ்ந்தாள்.

ஆனாலும் பணக்காரர்களின் ஏக்கப் பெருமூச்சுகள் அடங்கிப் போனபாடில்லை. ஏக்கம் பொறாமையாகி, மூச்சுகளில் உஷ்ணமேறின. ஏழைக்கு ஒரு விலையில்லாமலா போய்விடும் என்று முயன்று பார்த்தனர். அவள் நெருப்பாகச் சுடவே முடியாமல் குமுறினர்!

"நீதான் உன் மனைவியைக் கொலை செய்து விட்டாய்!" - போலீஸ்காரர்கள் அந்த ஏழைக் கணவனை ஒருநாள் கைது செய்தனர்.

"ஐயா எனக்கு ஒன்றுமே தெரியாது. என் மனைவியை - என் பொக்கிஷத்தை நானே கொலை செய்வேனா... எனக்கு ஒன்றுமே தெரியாது!" - கதறிக் கதறி அழுதான் கணவன்.

அவன் கதறல் எடுபடவில்லை. சாட்சியங்கள் அவனுக்கு எதிராகவே இருந்தன. மிரட்டலுக்குப் பயந்து கொண்டு கேட்ட இடத்தில் கையெழுத்துப் போட்டு விட்டான் அந்த ஏழைக் கணவன். அதாவது தானே தன் மனைவியைக் கொலை செய்ததாக வாக்கு மூலத்தில் கையெழுத்துப் போட்டு விட்டான். விளைவு? தூக்குத் தண்டனை!

மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கொடுத்த தூக்குத் தண்டனையை உறுதிப்படுத்துவதற்காக சட்டப்படி வழக்கு செசன்ஸ் கோர்ட்டுக்கு வந்தாக வேண்டும். வந்தது.

அவனுக்காக வாதாட வந்த வக்கீல் அவனைச் சென்று பார்த்தார். பேசினார்.

நடந்த எல்லாவற்றையும் அவன் விளக்கமாகச் சொன்னான். தனக்கு எதுவுமே தெரியாது என்று சொன்னான்.

அவன் வார்த்தைகளில் இருந்த அப்பாவித்தனம்; முகத்தில் தெரிந்த உண்மை எல்லாமாகச் சேர்ந்து அவன் கொலைகாரன் அல்ல என்றே உறுதிப்படுத்துவதாக வக்கீலுக்குத் தோன்றியது. அவனை எப்படிக் காப்பாற்றுவது என்று யோசிக்கத் தொடங்கினார்.

மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடந்த வழக்கை நுணுக்கமாகப் படித்தார். சாட்சியங்கள் கொடுத்த வாக்குமூலத்தையும் அவன் கொடுத்த வாக்குமூலத்தையும் கவனமாகப் படித்தார்!

அவற்றில் எங்கோ இடிப்பதாகத் தோன்றியது. ஆம்; இரண்டுமே வார்த்தை பிசகாமல் அப்படியே இருந்தன!

கொலை நடந்ததைப் பார்த்ததாகக் கூறும் சாட்சியங்கள் சொல்லியிருக்கிற அதே வார்த்தைகளையா அப்படியே காப்பியடித்த மாதிரி, குற்றம்சாட்டப்பட்ட அந்தக் கணவனும் சொல்லியிருப்பான்? இது எப்படி சாத்தியம்?

அப்படியானால் போலீஸார்தான் இரண்டையும் செட்-அப் செய்திருக்கிறார்



இன்னமும் இருக்கிறான்!

கள். இப்படி செட்-அப் செய்த போது தான் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவன் வாக்குமூலத்தை வேறு வேறு வார்த்தைகளைப் போட்டு மாற்றி எழுதச் சங்கடப்பட்டுக் கொண்டு, சாட்சிகளுக்காக எழுதப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள வாசகங்களையும் வார்த்தைகளையுமே போட்டு எழுதி விட்டார்கள்!

இந்த விஷயத்தை செசன்ஸ் நீதிபதியிடம் எடுத்துச் சொன்னார் வக்கீல். அவரும் அவற்றை நுணுக்கமாகப் படித்துப் பார்த்தபோது, எல்லாமே செட்-அப் என்பதைப் புரிந்து கொண்டார்.

அப்புறம்? அந்த ஏழைக் கணவன் விடுதலை செய்யப்பட்டான்.

அப்படியானால் உண்மையான கொலைகாரன் யார்? அவன் என்ன ஆனான்?

போலீஸார் அந்த வழக்கின் கோப்புகளை மூடி விட்டதால் இன்னமும் அந்தக் கொலைகாரன் யார் என்பது தெரியாமலேதான் இருக்கிறது!

(வழக்குரைஞர் கிருஷ்ணராஜு சொன்ன ஒரு வழக்குத்தான் இது.)

சந்திப்பு : **ப்ரின்ஸ்**



அடே, நாராயணா!

பரவலாக நேயர்களின் கவனத்தைப் பெற்று வரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒன்று "மெல்லப் பேசுங்கள்'. கடுக்கனும் அரை ட்ரவுஸருமாக ஓர் அப்பாவியும், எல்லாம் தெரிந்த ஒரு நிருபரும் பேசுவதாக அமைந்திருக்கும் இந்த நிகழ்ச்சி, முழுக்க அரசியல் சம்பந்தப்பட்டது. டெல்லி முதல் சென்னை வரை எல்லாக் கட்சிகளையும் பதம் பார்க்கிறார்கள். கிசுகிசுக்களுக்கும் குறைவில்லை.

"முதல்லே இந்த நிகழ்ச்சியை வேற மாதிரிதான் அமைக்கத் திட்டமிட்டேன். பிறகு அதை மாற்றி இரண்டு நண்பர்கள் நாட்டு அரசியலை விமர்சிக்கிற மாதிரி வடிவமைச்சேன். கிண்டலான தொனியில் இந்தப் பேச்சு அமைந்தால் க்ளிக் ஆகும்னு நினைச்சேன். என் எதிர்பார்ப்பு வீண்போகல்லே. நிகழ்ச்சியைத் தொடர்ந்து வரும் மிரட்டல்களுக்கும் குறைவில்லை. 'அமைச்சர் வருத்தப்பட்டாரு', 'ஐயா உங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னாரு' என்பது போன்ற மரியாதை கலந்த எச்சரிக்கைகளும் உண்டு!" என்றார் நிகழ்ச்சியின் வடிவமைப்பாளர் ரபிபெர்னாட்.

"சுவைக்காக கிசுகிசுக்களில் கொஞ்சம் கற்பனை சேர்ப்பது உண்மைதானே?" என்ற கேள்விக்கு பலமான மறுப்பு!

"நிச்சயமாக அப்படியில்லை. சொல்லப் போனால் முழுக்க உறுதியான உண்மைகளைக் கூட வேறு காரணங்களுக்காக கிசு கிசு போல சொல்வதுண்டு" என்றார்.

இந்த நிகழ்ச்சிக்கு ஸ்கிரிப்ட் எழுதுவது நாவண்ணன். திரைப்படங்களுக்கும் வசனம் எழுதியுள்ளவர். "எல்லா நாளிதழ்களையும் இங்கு கொடுத்து விடுகிறார்கள். அவற்றிலிருந்து தேர்வு செய்து உரையாடல் ஆக்குவது என் பொறுப்பு" என்றார்.

நிகழ்ச்சியில் தோன்றி 'அண்ணே' என்றும் 'நாராயணா' என்றும் அழைத்துக் கொண்டு தான் கிளப்பும் அவர்களின் பின்னணி என்ன?

ராஜன் :

எல்லாம் தெரிந்த நிருபராக வரும் இவரது சொந்த ஊர் மாயவரம் என்றாலும் அப்பா ரயில்வேயில் வேலை செய்ததால்

தமிழ்நாடு முழுக்க தங்கினதுண்டு. "ஒவ்வொரு மாவட்டத்தின் உச்சரிப்பும் எனக்குத் தானாகவே வந்துடுச்சு. ஆனா இது இந்த வட்டார வழக்குன்னு பிரிச்சுச் சொல்ல முடியாது. எல்லா மாவட்டத்திலிருந்தும் எனக்கு நண்பர்கள் அமைஞ்சது ஒரு முக்கிய காரணம்!" என்கிறார்.

சென்னை புதுக்கல்லூரியில் எம்.ஏ பொருளாதாரம் படித்திருக்கிறார். அடிப்படையில் ஓர் ஓவியராம். கார்ட்டூன் வரைவதிலும் ஆர்வம் உண்டு. ஆபாவாணன், அரவிந்தராஜ் போன்ற திரைப்படக் கல்லூரிக்காரர்களிடமும் நட்பு உண்டு. ஊமை விழிகள், இளமைக்காலங்கள் இப்படி சுமார் முப்பது படங்களுக்கு பப்ளிசிடி டிசைனராக இருந்திருக்கிறார்.

"மாநகரக் காவல் படப்பிடிப்பின் போது நண்பரான இயக்குனர் தியாகராஜனுக்கும், சீனியர் ஆர்ட் டைரக்டரான நாகராஜ் ராவுக்கும் இடையே ஒரு பாலமாகப் பணியாற்றியதில், பல புது விவரங்கள் பிடிபட்டன. பிறகு தலைவாசல், அமராவதி போன்ற படங்களுக்கு ஆர்ட் டைரக்டராகப் பணி புரிந்திருக்கிறேன்!" என்கிறார்.

"மெல்லப் பேசுங்கள் நிகழ்ச்சியில் என் சொந்த கருத்துக்களையும் கூறுவதுண்டு. உதாரணமாக 'காவிரி நீர் பிரச்னையை யாராலும் தீர்க்க முடியாது. அகத்தியரின் கமண்டலத்தில் அடங்கியிருந்த காவிரி, ஒரு காக்கை கமண்டலத்தைக் கவிழ்த்ததால்தான், படர்ந்து தமிழகத்துக்கு வந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அது போல் இயற்கையே புயல், வெள்ளம் என்று அணைகளை உடைத்துத் தள்ளினால்தான் காவிரி நீர் தமிழகத்துக்குச் சீராகக் கிடைக்கும்' என்று சொந்தச் சரக்கையும் சேர்த்திருக்கிறேன்" என்கிறார்.

என்னண்ணே!

பாலாஜி சங்கர்:

பூர்விகம் மதுரை என்றாலும் பிறந்து வளர்ந்ததெல்லாம் சென்னையில்தான். அப்பாவி கிராமத்தானாக அரைக்கால் ட்ரவுஸருடன் சின்னத் திரையில் தோற்றமளிக்கும் இவர் எம்.ஏ. பிஸினெஸ் படித்தவர்! யூனிப்ரோ நிறுவனத்தில் விற்பனை அதிகாரி.

"என் வாழ்க்கையில் அவ்வப்போது





அதிகாரி: என்னப்பா பி.ஏ... உங்க தலைவர் வீட்டில இவ்வளவு நகைகளை வாங்கி அடுக்கி வச்சிருக்காரு. எதுக்கு இவ்வளவு...?

பி.ஏ: தலைவர் ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை தர்ற மாதிரி, இலவச நகை அளிக்கும் திட்டம் கொண்டு வர்றதா இருந்தாரு. ஆனா அதுக்குள்ளே எலெக்‌ஷன்ல தோத்துப் போயிட்டாரு!

— கே.அனிதா

•••••

வரும் 2000-ஆம் வருடத்தில் பிப்ரவரி மாதத்திற்கு முப்பது நாட்களாகும். 30.02.2000- அன்று பிறப்பவர்கள் பிறந்த நாளே கொண்டாட முடியாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் பிப்ரவரி மாதத்திற்கு முப்பது நாட்கள் வருமாம்.

— வே.ந. கதிர்வேல்

•••••

"அவர் மோசடிப் பேர்வழின்னு எப்படிச் சொல்றே?"

"பண வீக்கத்தைக் குறைக்க மூலிகை மருந்து கண்டுபிடிச்சிருக்கேன்னு சொல்றாரே!"

— பிரசன்ன குமார்



சினிமா தொடர்புகள் தலை காட்டிக்கிட்டே இருக்கும். குழந்தை நட்சத்திரமாக 'அன்று சிந்திய ரத்தம்' படத்தில் நடித்தேன். பிறகு பால முருகன், 'லவ் லெட்டர்'ங்கிற படத்தில் வாய்ப்புக் கொடுத்தார். பானுப்ரியா, கங்கா வெல்லாம் நடித்த அந்தப் படம் பாதியிலே நின்னு போச்சு!" என்று சொல்லும் இவர் சின்னத் திரையில் அப்பாவிபோல் தோற்ற மளித்தாலும் நிஜவாழ்க்கையில் அப்படி யில்லை. சின்ன வயதிலிருந்தே நியாயத்துக் காகக் குரலெழுப்பத் தயங்காதவர்.

"குருநானக் உயர்நிலைப் பள்ளியில் படிச் சுக்கிட்டிருந்த சமயம்... குருஞானக் கல்லூரிக் கும், எங்கள் பள்ளிக்கும் ஒரே வாசல்தான். சீருடை அணியாமல் வந்தாலோ ஆசிரியர் திட்டுவார். அணிந்து கொண்டாலோ, 'உங்க ளாலே எங்களையும் யூனிபார்ம் போட வேண் டிய பொடியங்கன்னு பொண்ணுங்க தப்பா நினைக்குதுங்க(!)?' என்று கல்லூரி மாண வர்கள் திட்டுவார்கள். பொறுத்துப் பார்த்த நான், ஒருநாள் ஆசிரியரிடம் 'கல்லூரி மாண வர்களை அடக்குங்க; இல்லேன்னா ஸ்கூலுக் குத் தனி கேட் வையுங்க. இரண்டையும் செய்யாம, எங்களை சங்கடத்தில் மாட்டா தீங்க'ன்னு சொல்லி, வகுப்பைவிட்டு வெளி யேறிட்டேன். அத்தனை மாணவர்களும் கூடவே வந்துட்டாங்க. இதைப் பார்த்த கல்லூரி மாணவர்களுக்கு ஆச்சரியம். அடுத்த ஆண்டு அதே கல்லூரியில் சேர்ந்தபோது மாணவர் தலைவனானேன்!" என்கிறார்.

பகல் நிலவு, அக்னி நட்சத்திரம், இதய கோயில் போன்ற படங்களிலும் இவர் நடித் திருக்கிறார்.

"சமீபத்தில் இரண்டு வழக்கறிஞர்கள் என்னை அடையாளம் கண்டுக்கிட்டு டீ.வி நிகழ்ச்சியைப் பாராட்டினாங்க. கூடவே, 'இந்த அரை பேண்ட் வாணாம்பா. வீட்டிலே பொம்பளைங்கெல்லாம் பார்க்கிற நிகழ்ச்சி இது. நாங்க வேணும்னா உனக்கு ஒரு செட் வேட்டி வாங்கித் தறோமே!' என்றார்கள்!"

ஏதாவது கட்சி அனுதாபிகள் இவர்களை வழியில் அடையாளம் கண்டுபிடித்து எதிர்ப் புக் காட்டியதுண்டா?

"சர்க்கஸில் கோமாளி, உயரத்திலிருந்து அந் தர் பல்டி அடிப்பான். புலி சிங்கத்தையெல் லாம் தொட்டு விளையாடுவான். ஜனங்களும் ரசிச்சிட்டுப் போயிடுவாங்க. அதுமாதிரிதான் எங்களையும் ரசிப்பதோடு சரி. கட்சி ஆளு களுக்குக் கூட நாங்க நாடக பாத்திரங்கள் தான்றதும், எங்களை இயக்குவது வேறொருவர் என்பதும் தெரியும். அதனாலே இதுவரை எந்தச் சிக்கலும் எங்களுக்கு ஏற்பட்டதில்லே" என்று ராஜன் கூற, பாலாஜி ஆமோதிக்கிறார்.

சந்திப்பு: **ஜி.எஸ்.எஸ்.**

வண்ணப்படங்கள்: **யோகா**

●● தொலைக்காட்சியில் 'பெப்ஸொடெண்ட்' பற்பசை விளம்பரம் ஒளிபரப்பாகிறது. அதில் கிரிக்கெட் பார்ப்பதற்காக, 'பல் வலி' என்று பொய் சொல்லப் போவதாகப் பள்ளி செல்லும் சிறுவன் கூறுகிறான். இது குழந்தைகள் மனத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று விளம்பரதாரர்களோ, தொலைக்காட்சி நிலையத்தினரோ யோசித்தார்களா?

பாண்டிச்சேரி, பூங்கோதை கிருஷ்ணராஜ்.

●● சென்னை வானொலியில் இரண்டாவது பண்பலை ஒலிபரப்பு ஆரம்பிக்கப் போவதாகச் செய்தி படித்தேன். ஏற்கெனவே ஒரு பண்பலை இருபத்தி நாலு மணி நேரம் ஒலிபரப்பாகிறதே, போதாதா? சென்னைவாசிகள் தவிர தெற்கே வானொலி கேட்பவர்களே இல்லையா? ஏன் இந்த ஓரவஞ்சனை?

ஸ்ரீவில்லிபுத்தூர், பா. தனபால்.

●● முந்தைய ஆட்சியில் முதியோர் உதவித் தொகை 75 ரூபாயிலிருந்து நூறு ரூபாயாக உயர்த்தப்பட்டது. மாதம் பிறந்து பதினைந்து தேதிக்குள் பணம் கைக்கு வந்து விடும். இப்போது ரொம்பத் தாமதமாகிறது. சில சமயம் 29 தேதி வரை கூட கைக்கு வந்து சேருவதில்லை.

தஞ்சாவூர் – 4, கே. வி. கிருஷ்ணன்.


●● ரஜினி அவர்களின் பிறந்தநாளன்று அவரது ரசிகர்கள் அவரை "இளைய மகாத்மா", "ரஜினிகாந்தி" என்றெல்லாம் வாழ்த்தி போஸ்டர் ஒட்டினார்கள். உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவரை, நமது தேசத் தந்தையை, இவ்வாறு பிறரோடு ஒப்பிடுவது வேதனை அளிப்பதாக உள்ளது. அளவுக்கு அதிகமாக முகஸ்துதி செய்வது புகழ்ச்சியல்ல; இகழ்வதற்கே ஒப்பாகும் என்பதை ரஜினி ரசிகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பவித்ரமாணிக்கம், ஆர். பாஸ்கரன்.

●● அரசு மருத்துவமனைகளில் டாக்டர்கள் மருந்துச் சீட்டைத் தமிழில்தான் எழுத வேண்டும் என்ற உத்தரவு அபத்தமானது மட்டுமல்ல, ஆபத்தானது. DIOVOL என்ற வயிற்றுவலி மாத்திரைக்குப் பதில் DAONIL என்ற சர்க்கரை வியாதி மாத்திரை கொடுத்ததால் ஒருவர் கோமா நிலைக்குப் போய் விட்டார். அ.இ. ரீதியில் மருந்து – மருத்துவர்களின் பொது மொழியான ஆங்கிலத்தில் எழுதும்போதே இந்தக் கதி. இன்னும் தமிழில் வேறு எழுதி குழப்ப ஆரம்பித்தால் என்னவெல்லாம் நடக்குமோ!

சிட்லபாக்கம், அ. ஷண்முகசுந்தரம்.

ரஜினிக்கு இகழ்ச்சி!





காந்திக்கு அபசாரம்;

●● பல்லவன் பேருந்துகளின் இடதுபுற இருக்கைகள் "பெண்கள்" என்று பெயரிட்டு ஒதுக்கப்பட்டுள்ளன. எதிர்ப்புறம் "ஆண்கள்" என்று ஒதுக்கீடு இல்லை. இதனால் பல சமயம் பெண்கள், எதிர்ப்பக்க இருக்கைகள் காலியாக இருந்தால் அதில் அமர்ந்து விடுகின்றனர். அடுத்து, பஸ்ஸில் ஏறும் ஆண்கள், பெண்கள் அருகே அமர முடியாததால் நின்றவாறே பயணம் செய்ய நேர்கிறது. கூடியவரை ஆண்கள் இருக்கைகளை ஆண்களுக்கே விட்டுக் கொடுத்தால் நல்லது.

சென்னை – 91, வி.எஸ். ஸ்ரீதரன்.

●● சீர்காழி, தேர் மேல வீதியில் உள்ள ரேஷன் கடையில் குடும்ப கார்டுக்கு இருபது கிலோ அரிசி தராமல் 12 கிலோ மட்டுமே தருகிறார்கள். மண்ணெண்ணெய் வாங்கும்போது கூடவே கட்டாயமாக சோப்பு, தீப்பெட்டி போன்றவற்றைத் தலையில் கட்டி விடுகிறார்கள். கோதுமை, அரிசி, ஜீனியில் கலப்படம் வேறு. உணவு அமைச்சர் கவனிப்பாரா?

சீர்காழி – 10, ஆர். ராஜதுரை.



மின்சார(க்) கனவு

ஒப்பனை, ஜாலமெல்லாம் இல்லாமலே கண்களுக்கு அலுக்காத விருந்தளித்திருக்கும் காமெரா (வேணு);

செயற்கை வாடையே இல்லாமல் அங்கங்கே நிமிர்ந்து உட்காரச் செய்யும் வசனங்கள்;

மறைந்திருந்து பாட்டுக் கேட்கும் காட்சி, அருவிக் காட்சி போன்றவற்றில் வெகு இயல்பாக நடித்து மனத்தைத் தொடும் அரவிந்த்சுவாமி;

குழம்பித் தவிக்கும் பிரபுதேவா, காதலுக்கும் கடவுளுக்கும் இடையே போராடும் காஜோல், எல்லோருக்கும் பிடித்த மாதிரி ரஹ்மானின் இசை;

படம் முழுக்க இளமையும் வண்ணமும் அள்ளித் தெளித்திருந்தாலும் ஆபாசத்தைத் தவிர்த்திருக்கும் கண்ணியம்; எஸ்.பி.பி., கிரிஷ் கர்னாட் என்று பெருமை சேர்க்கும் எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸ்...

எல்லாவற்றுக்கும் பின்னால் நின்று இயக்கியிருக்கும் ராஜீவ் மேனன்.

இத்தனை உழைப்பையும் பாராட்டத்தான் வேண்டும். ஆனால், அழகான காட்சிகளின் சாமர்த்தியமான தொகுப்பு மட்டுமே ஒரு சிறந்த திரைப்படமாகாது. வலுவான கதையைக் கொண்டு அதை நங்கூரம்பாய்ச்சா விட்டால் அலைக்கழித்து விடும்!

சாக்லேட் மாதிரி காஜோல்
ஐஸ்க்ரீம் மாதிரி அரவிந்த் சாமி
நுரைக்கும் கூல்ட்ரிங்க் போல பிரபுதேவா
ஃபிங்கர் சிப்ஸ் கணக்காய் அவருக்கொரு நண்பர் வட்டம்...

எப்பேர்ப்பட்ட டீ பார்ட்டி நடத்தலாம்...! அத்தனையையும் அள்ளிக் கொண்டு போய் மண்ணில் கொட்டுகிற மாதிரி திரைக்கதை அமைத்துத் தோற்றிருக்கிறார்கள்!

காலத்தால் அழியாத காதல் முக்கோணக் கதைதான். ஏதேனும் வித்தியாசமாய் புகுத்தினால்தான் நிற்கும் என்பதும் வாஸ்தவம்தான். அதற்காக, 'பூ விரியும் ஓசை'யைக் கேட்க ஆசைப்படும் அளவுக்கு வாழ்க்கையை அணு அணுவாக ரசிக்கும் ஒரு பட்டுப்பூச்சிப் பெண்ணுக்கு, கன்னிகா ஸ்த்ரீ ஆகும் எண்ணம் அடிமனசில் எப்போதும் என்று சொன்னால் எப்படி நம்புவது? அணியும் உடையிலிருந்து அசையும் நடை வரைக்கும் எதிலுமே அந்த அறிகுறி தென்படவில்லை.

'பாத்திரப் படைப்பினால் கதை வலுவிழக்கிறதா, கதையினால் கதாநாயகி உருவமில்லாமல் போகிறாரா...?' என்று இனம் காண முடியாதபடி ஒன்றுக்கொன்று அவ்வளவு அனுசரணை!


காஜோலைத் தம் காதல் வழிக்குக் கொண்டுவர பிரபுதேவாவை அமர்த்துகிறார் அரவிந்த்சுவாமி. அவர் எதிர்பாராதவிதமாய் (அதனால் நாம் எதிர்பார்க்கக் கூடாது என்று சட்டமா என்ன...?) காஜோலும் பிரபுதேவாவும் காதலிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்!


அப்புறம் காஜோலுக்கு உண்மை தெரிய வர, அவர் கோபித்துக் கொண்டு ரயிலேற... ரயில் ஜன்னல் கம்பியில் தொங்கியபடி பிரபுதேவா! அந்த முதல் க்ளைமாக்ஸில் ரசிகர்கள் சோம்பல் முறிக்கிறார்கள் என்றால் சர்ச்சில் இடம்பெறும் இரண்டாவது க்ளைமாக்ஸுக்கு முன்னால் சிலர் எழுந்தே போய் விடுகிறார்கள்! முடிவின் நாடகபாணி திருப்பத்தைப் பார்க்காதவர்களுக்கு அந்த மட்டும் லாபம்!

- எஸ்.ஆர்.

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

குழந்தைகளுக்கு கேளிக்கையும்கொண்டாட்டமும்!
பெரியவர்களுக்கோ அறிவுக் களஞ்சியம்!





23 வது
இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

தீவுத் திடல், சென்னை - 600 009

தமிழகத்தின் தலையாய பொருட்காட்சி.
கேளிக்கைகள் பலப்பல. அறிவியல்
கண்காட்சிகளும் எண்ணிலா.
டோரா டோரா, ஜெயன்ட் வீல், ரெயில்
வண்டி, இன்னும்பல இன்பகரமான
விளையாட்டு வசதிகள். மேலும் பொது
அறிவு வளர்க்கும் கூடங்கள். தமிழக,
இதர மாநில, மத்திய அரசுகளின், மற்றும்
பொதுத்துறை நிறுவனங்களின்
கலைக் கூடங்கள்.

சிறப்பு பஸ் வசதிகளும் உண்டு.



**ஒவ்வொரு மணி நேரத்திற்கும்
உங்களில் ஒருவருக்குக்
கிடைக்கலாம் ஓர் அதிஷ்டப் பரிசு.
ஆகவே, உங்கள் பாதிநுழைவுச்
சீட்டைப் பத்திரமாக வைத்திருங்கள்**

தமிழ் நாடு சுற்றுலா
வளர்ச்சிக் கழகம்
சென்னை - 600 004.

**இன்றே உங்கள் குடும்பத்துடன்
வருகைதாருங்கள்.**

பரிசளிப்போர் : • அன்பகம் உணவகம் • ஓம் சக்தி எண்டர்டெயின்மெண்ட்ஸ்
•தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் •மருதாணி வாலா உகம் ராஜ் & கோ. சென்னை.
•மணிமேகலை பிரசுரம்.
விடுமுறை நாட்களில் சிறப்பு பரிசு அளிப்பவர்கள் :
எச்.எம்.பி.ராலி ஃபேன் கம்பெனியினர்

DPR/DS/31/97

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka



பதவி : வேலையிலிருந்து ஓய்வு பெற்ற மதிப்பிற்குரிய வீட்டுத் தலைவர் (திரு. C. முத்துசுவாமி, I.A.S. (ஓய்வு)

பொறுப்பு : சமூகசேவை, குடும்ப சேமிப்பு, பேரப்பிள்ளைகளுடன் விளையாட்டு.

சிறந்த சேமிப்பிற்கு இவர் சிபாரிசு TDFC

வேலையிலிருந்து தானே ஓய்வு என்கிறார் சுறுசுறுப்பான திரு. C. முத்துசுவாமி தன் அன்றாட வாழ்க்கையை மகிழ்ச்சியாக உபயோக முள்ளதாகக் கழிக்க முடியும் என்று உறுதியாகக் கூறுகிறார். வீட்டிலும், வெளியுலகிலும் இளைஞர்களை ஊக்குவிக்கும் உற்சாகம் கொண்ட இவர் சுயமரியாதையோடும் தன்னம்பிக்கையோடும் என்றும் வாழ தனக்கு உறுதுணையாக இருப்பது TDFC என்கிறார். முதலீட்டிற்கு முழுப்பாதுகாப்பு நிலையான நல்ல ஈட்டுத்தொகை, சிறந்த சேவை அளிக்கும் உறுதியான நிறுவனம். இவையனைத்திற்கும் உதாரணமாகத்திகழும் TDFC இருக்கும் பொழுது பஞ்சாய்ப் பறந்து போகும் நிதி நிறுவனங்களைப்பற்றி நினைப்பதற்கே அவசியமில்லை என்கிறார் திரு. C. முத்துசுவாமி.

குறிப்பு : P.T. Consultancy Service நடத்திய ஆய்வின் படி இந் நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களில் 28% பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.

திட்டம் - 1 - தவணை முறையில் வட்டி அளிக்கும் திட்டம்

(குறைந்தபட்ச வைப்புத் தொகை - ரூ. 5,000/-)

• 15 சதவிகிதம் வருட வட்டி மாதந்தோறும் கூட்டு வட்டி முறையில் கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்தில்வட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் குறைந்த பட்ச டெபாசிட் தொகை 12 மாதம் ஒருநாளுக்கு ரூ. 10,000-ம் மற்றவைகளுக்கு வழக்கம் போல் ரூ. 5,000 ஆகும்.

15% ஒரு வருடத்திற்கு

வட்டி மாதந்தோறும் வழங்கப்படும்.

திட்டம் - 2 - முதலீடு பெருகிடும் திட்டம்

(குறைந்தபட்ச வைப்புத் தொகை - ரூ.3,000/-)

மேற்கண்ட உங்கள் முதலீட்டுப் பெருக்கம் 15% வருட வட்டியில் கூட்டு வட்டி முறையில் பிரதி மாதம் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு வைப்புத் தொகை இரண்டு திட்டத்திலும் ரூ. 1000 - ன் மடங்குகளில் மட்டும் ஏற்கப்படும்.

22.16% ஐந்து வருடத்திற்கு திட்டம் 2-ல்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட்.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : 99, கிரீம்ஸ் சாலை, அலுவலக வளாகம், சென்னை-600 006.

தொலைபேசி : 8278351/8272917/8276059, தந்தி : TAFCON. P.B.No.719.

கிளைகள் :

- ஏ.ஏரி போக்குவரத்து நிலையம், காந்திபுரம், கோயம்புத்தூர்-641 044. தொலைபேசி : 437102
- ஏ.ஏரி போக்குவரத்து நிலைய வளாகம், திருச்சி-620 001. தொலைபேசி:464188
- ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை-625 001. தொலைபேசி:741636
- [illegible] அலுவலக வளாகம், [illegible] சாலை, [illegible]-636 001. தொலைபேசி : 78204

இந்த விளம்பரம் கம்பெனியால் 6.10.96 தினமணியில் வெளியிடப்பட்ட சட்டபூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்.

உங்களது முதலீடு "டிடிஎப்சி" யில் பாதுகாப்பானது - பத்திரமானது

DIPR/934/DIS/96/ELEGANT